REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஏப்ரல் 12 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 87 | Tuesday 12, April, 2022 | 16பக்கங்கள் | 30/-




## அடுத்த சில நாட்களில் SLPP முக்கிய பதவிகளில் மாற்றம்

### நாமல் எம்.பிக்கு முக்கிய பொறுப்பை ஏற்க அழைப்பு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய பதவிகளில் எதிர்வரும் நாட்களில் மாற்றம் ஏற்படுத்தப்படும். கட்சியின் முக்கிய பொறுப்பினை ஏற்குமாறு முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிற்கு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, நாட்டில் தற்போது தோற்றம் பெற்றுள்ள அரசியல் ஸ்தீரமற்ற தன்மைக்கு இன்னும் ஓரிரு நாட்களில் தீர்வு 06

## ஜனாதிபதி சுயாதீன எம்.பிகள் குழு சந்திப்பு

## இடைக்கால அரசு தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படவில்லை

### இன்று மீண்டும் சந்திக்க தீர்மானம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய சுயாதீன குழுவினருக்கும் இடையில் இன்று (12) மற்றொரு பேச்சுவார்த்தை நடைபெற உள்ளதாக அறிய வருகிறது. நேற்று முன்தினம் இரவு இருதரப்பினருக்கும் இடையிலான சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலங்கள் நீடித்த போதிலும் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு முகங்கொடுத்து சர்வகட்சி இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் இறுதி இணக்கப்பாடு எட்டப்படவில்லை என அறியமுடிகின்றது. 06

## புத்தாண்டின் பின்னரேயே புதிய அமைச்சரவை பதவியேற்பு

அரசியல் வட்டாரங்கள் நேற்று தெரிவிப்பு



புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்து கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்படி நேற்று அமைச்சரவை பதவிப்பிரமாணம் செய்ய இருந்த போதும் கடைசி நேரத்தில் பின்போடப்பட்டுள்ளதாக அறிய வருகிறது. புதிய அமைச்சரவைக்கான நியமனங்கள் தொடர்பில் தொடர்ந்து ஆலோசிக்கப்பட்டு 06




# நாட்டின் நெருக்கடி நிலை மிக விரைவில் முடிவுக்கு

## ஜனாதிபதியும் அரசும் ஒவ்வொரு நிமிடத்தையும் இதற்காக செலவிடுவதாக தெரிவிப்பு



**பிரதமர் மஹிந்த நாட்டு மக்களுக்கு விசேட உரை**

- ஜனநாயக முறையை மறுப்பது பயங்கரமானது
- வீதியில் போராடும் ஒவ்வொரு விநாடியிலும் டொலர் இழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடு முகங் கொடுத்துள்ள நெருக்கடி நிலையிலிருந்து நாட்டை மீட்பதற்காக அரசாங்கமும் ஜனாதிபதியும் ஒவ்வொரு நிமிடமும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். நாட்டில் நிலவும் நெருக்கடியான நிலை மிக விரைவில் முடிவுக்குக் கொண்டு வரப்படும் என தெரிவித்த பிரதமர், அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கட்சி அரசியல் என பார்க்காமல் நாடு என்ற ரீதியில் நெருக்கடி நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என தெரிவித்த பிரதமர், வீதிகளில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் நாட்டுக்குக் கிடைக்கவுள்ள டொலர் கிடைக்காமல் போவதற்கே வழி வகுக்கும் என்பதை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவோர் உணர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். 06

## மிரிஹான சம்பவம் தொடர்பில் பாதுகாப்பு சபை கூடவில்லை

### சில ஊடகங்களில் பொய்க் குற்றச்சாட்டு – கமல் குணரத்ன

**ஸாதிக் ஷிஹான்**



மிரிஹானையில் இடம்பெற்ற வன்முறைப் போராட்டங்கள் தொடர்பாக தேசிய பாதுகாப்புச் சபையின் கூட்டம் நடத்தப்பட்டதாக கூறி சில ஊடகங்களில் வெளியிட்டுள்ள ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை மறுத்துள்ள பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, அத்தகைய எந்தவொரு கூட்டமும் நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார். 06

## இந்தியாவில் இருந்து 40 000 மெ. தொன் அரிசி நேற்று நாட்டை வந்தடைவு

### ச.தொ.ச மூலம் குறைந்த விலையில் விற்பனை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இந்திய கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட்டுள்ள 40.000 மெற்றிக் தொன் அரிசி நேற்று நாட்டை வந்தடைந்ததாக வர்த்தக அமைச்சு தெரிவித்தது.

புத்தாண்டு, பண்டிகை காலங்களில் தட்டுப்பாடின்றி மக்களுக்கு அரிசியை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே மேற்படி 06

## பண்டிகைக் காலத்தில் முடிந்த அளவில் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு கோரிக்கை

பண்டிகைக் காலத்தில் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தேவையான அளவு எரிபொருள் நாட்டிற்கு கிடைப்பதாகவும் 2 லட்சத்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் எரிபொருளை இந்த மாதத்தில் பெற்றுக் கொள்வதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். 06

## யாழில் நேற்று கோர விபத்து; பாரவூர்தி – மோ. சைக்கிள் விபத்தில் சிறுவன் பலி



யாழ்.நகர் பகுதியில் பாரவூர்தி ஒன்று மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் 7 வயது சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம் சத்திர சந்தி பகுதியில் நேற்று (11) காலை இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

தாயும் மகனும் மோட்டார் சைக்கிளில் சென்று 06

## டொலரின் விற்பனை பெறுமதி ரூ. 330 ஆனது



உரிமம் பெற்ற தனியார் வங்கிகளில் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றை இன்றைய தினம் 330 ரூபாவுக்கு விற்பனை செய்வதாக அறியமுடிகிறது.

நாட்டில் நிலவும் கடும் நிதி மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, டொலரின் பெறுமதி நாளுக்கு நாள் ஏற்ற இறக்கமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷபாஸ் தெரிவு!



பாகிஸ்தானின் புதிய பிரதமராக முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பின் சகோதரர் ஷபாஸ் ஷெரிப் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானின் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஷெபாஸ் ஷெரீப்புக்கு ஆதரவாக 174 பேர் வாக்களினத்தனர். இம்ரான் கானின் பிரிஐ கட்சியினர் வாக்களிப்பில் பங்குபற்றாமல் வெளிநடப்புச் செய்தனர். பிரதமராக பதவி வகித்த இம்ரான் கான், 06

## பிரேக் பழுது; சாரதியின்றி பயணித்த எரிபொருள் நிரப்பிய ரயிலுடன் மற்றொரு ரயில் மோதி விபத்து



ரம்புக்கணை புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் ரயிலுடன் மற்றுமொரு ரயில் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இச்சம்பவம் நேற்று (11) அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது. புகையிரத நிலையத்தில் நிறுத்தி 06

## வாழைச்சேனை கடதாசி ஆலையில் A–4 ரக காகித உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பம்!



வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையில், A4 காகித உற்பத்தி நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன் முதற்கட்ட A4 காகிதங்கள் உரிய தரத்துடன் வெற்றிகரமாக தயாரிக்கப்பட்டுள்ளதாக தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஜயம்பதி பண்டார ஹூன்கந்த தெரிவித்துள்ளார்.

மூலப்பொருட்களை பெற்றுக் கொள்வதில் மாத்திரம் சிக்கல் உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், அரசாங்கத்தின் உதவியுடன், மூலப்பொருட்களை பெற்று 06

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

### சீரற்ற காலநிலை புதுவருடம் வரை தொடரும்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை புத்தாண்டு வரை தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 100 மில்லி மீட்டருக்கு அதிகமான மழை பெய்யலாம் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மண்சரிவு உள்ளிட்ட அனர்த்த எச்சரிக்கை 06



**அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் விற்பன** — எட்டியாந்தோட்டையில் ஒருவர் கைது 02



**எரிபொருள் வாங்க வரிசையில் நின்ற** — மற்றொருவரும் மரணம் 02



**எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு மதுபான விற்பனை நிலையங்களுக்கு 13,14 களில் பூட்டு** 02



**நோன்பு நேரங்கள்**

ஸஹர் முடிவு: 04.36

நோன்பு துறக்கும் நேரம்: 06.19

## காபந்து அரசு அமைத்தால் அது கால்பந்து அரசாகும்

மனோ கணேசன் MP ஆரூடம் கூறல்



ஜனாதிபதிக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் 20 ஆவது திருத்தத்தை அகற்றி, பாராளுமன்றத்துக்கு அதிகாரங்களை மீளப் பெறும் 19 ஆவது திருத்தத்தை உள்வாங்கி, ஜனாதிபதியின் 06

## அதிக விலைக்கு Gas ஐ விற்றால் முறையிடவும்

### லிட்ரோ நிறுவனம் அறிவிப்பு



சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை அதிகரிக்கப்படமாட்டாது. நிர்ணய விலைக்கு மேலதிகமான எரிவாயு சிலிண்டர்களை 06

## நம்பிக்கையில்லா பிரேரணை: அரசியல் கட்சிகளின் ஆதரவை பெற SJB முயற்சி



அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஏனைய அரசியல் கட்சிகளின் ஆதரவை கோருவதற்கு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்று நடைபெற்ற எதிர்க்கட்சிகளின் பாராளுமன்றக் குழுக் 06

## நீரேந்து பகுதிகளில் மழை; நீர்மின் உற்பத்தி 4 வீதத்தால் உயர்வு

மின் உற்பத்தி நிலையங்களை அண்டிய நீர்த்தேக்கப் பகுதிகளில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக நீர்மின் உற்பத்தி 4 வீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மழை காரணமாக காசல்ரீ, மவுஸ்ஸாக்கலை, கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் 06

# இடைக்கால அரசாங்கம் அமைந்தால் நெருக்கடிகளுக்கு தீர்வாக அமையும்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



புதிய பிரதமர் ஒருவரின் தலைமையில் இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவ்வாறான இடைக்கால அரசாங்கத்தை உருவாக்குவது இடைக்கால அரசாங்கம் அமைந்தால்... தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள யோசனைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்தால் அந்த அமைச்சரவைக்கு நியமிக்கப்பட வேண்டிய அமைச்சர்கள் தொடர்பில் கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை புதிதாக அமையவுள்ள இடைக்கால அரசாங்கத்தின் பிரதமராகவும் அமைச்சர்களாகவும் நியமிக்கப் படுபவர்கள் மக்களின் குற்றச்சாட்டுகளுக்கு இலக்காகாதவர்களாக இருப்பது அவசியம் என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது. அந்த வகையில் இதுவரை காலமும் பிரதமர் பதவிகளை வகித்து வந்தவர்களை மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்றும் அந்த கட்சி தெரிவித்துள்ளது.

அதேவேளை புதிய இடைக்கால அரசாங்கம் மற்றும் அமைச்சரவை நியமனம் தொடர்பில் கட்சிகள் பல்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ஸ)

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்கும்

# ஐ.ம.ச வின் பிரேரணை அடுத்த அமர்வுக்கு முன்னர் சமர்ப்பிப்பு



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான பிரேரணையை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி சட்டத்தரணிகள் குழுவினால் பிரேரணை தயாரிக்கப்பட்டு வருவதாக கட்சி பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் ஆலோசனையின் பேரில் தற்போதைய நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட்டு பாராளுமன்ற அதிகாரங்களைக் கொண்ட பிரதமர் முறைமை முன்மொழியப்படும்.

மேற்படி பிரேரணை அடுத்த பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திடம் கையளிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் கடந்த வாரம் நடைபெற்ற விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர், இந்த யோசனையை முன்வைத்தார். இதனை நிறைவேற்ற சகலதரப்பும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் கோரியிருந்தார். (பா)

# புது வருடத்தை முன்னிட்டு விசேட பஸ், ரயில்கள்

### 19 ஆம் திகதி வரை முன்னெடுப்பு

புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு ஏப்ரல் 19 ஆம் திகதி வரை விசேட பஸ் மற்றும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை மற்றும் ரயில்வே திணைக்களம் என்பன தெரிவித்துள்ளன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டு நீண்ட தூர சேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட பயணிகள் மற்றும் தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 04 டிப்போக்களில் இருந்தும் எரிபொருள் விநியோகிக்கப்படுவதாக இ.போ.ச பிரதிப் பொது முகாமையாளர் துவான பண்டுக ஸ்வர்ணஹன்ச தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஊடாக தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் மகும்புரவிலிருந்து கிராமிய பகுதிகளுக்கு விசேட பயணங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக மகும்புர பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தின் திட்ட முகாமையாளர் நாகல திஸாநாயக்க 24 மணித்தியாலங்களும் இயங்கி வருவதாக தெரிவித்தார்.

இதேவேளை, கொழும்பு

06

எதிர்வரும் புதுவருடத்தை முன்னிட்டு

# மதுபான நிலையங்களுக்கு 13,14ஆம் திகதிகளில் பூட்டு

நாட்டிலுள்ள அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் ஏப்ரல் 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் மூடப்படவுள்ளன.

தமிழ், சிங்கள புதுவருடத்தை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களத்தின் பேச்சாளரும் கலால் ஆணையாளருமான கபில குமார சிங்க தெரிவித்தார். இதேவேளை, போயா விடுமுறையை முன்னிட்டு ஏப்ரல் 16ஆம் திகதி சனிக்கிழமை அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்படவுள்ளன.

# எரிபொருள் வாங்க வரிசையில் நின்ற மற்றொருவரும் மரணம்

எரிபொருள் வாங்குவதற்காக வரிசையில் காத்திருந்த மற்றொருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் காலியில் இடம்பெற்றுள்ளது.

காலி பதுவத்தே பகுதியைச் சேர்ந்த 38 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் எரிபொருள் பெறுவதற்காக நேற்று முன்தினமிரவு முழுவதும் தனது வாகனத்தில் காத்திருந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

# அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் விற்பனை

### எட்டியாந்தோட்டையில் ஒருவர் கைது

எட்டியாந்தோட்டை பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி எரிபொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எட்டியாந்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கபுலுமுல்ல பிரதேசத்தில் (10) பொலிஸாரால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர் அதே பகுதியைச்சேர்ந்த 68வயது

06

# நிறைவேற்று ஜனாதிபதி முறை பற்றி பேசி காலங்கடத்தும் சஜித்

### ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் குற்றச்சாட்டு



நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமாயின் ஆட்சி பொறுப்பை ஏற்க தான் தயாராக இருப்பதாகவும், அவ்வாறு ஆட்சி பொறுப்பை ஏற்க வேண்டுமெனில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை முழுமையாக நீக்கப்பட வேண்டுமெனவும் எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச சொல்லியிருப்பது வேலைக்கள்ளிக்கு பிள்ளைச்சாட்டு போன்றதாகும் என ஐக்கிய காங்கிரஸ் கட்சித்தலைவர் முபாறக் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சஜித் பிரேமதாசவும் அமைச்சராக இருந்த அரசாங்கமே கடந்த அரசாக இருந்தது.

ஆரம்பத்தில் மைத்திரி தலைமையிலான கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கம் இருந்த போது பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு அதிகாரம் இருந்தது. இந்த அதிகாரத்தை பயன் படுத்தி 19வது சட்டத்தை கொண்டுவந்தவர்களால், உள்ளூராட்சி தேர்தலில் தோல்வியுற்ற பெண்களையும் வலுக்கட்டாயமாக சபைக்கு அனுப்ப

06

# அத்தியாவசிய சேவைகளுக்கு: துரிதமாக எரிபொருட்கள்

### விசேட வேலைத் திட்டம் ஆரம்பம்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அத்தியாவசிய சேவைகளுக்கு துரிதமாக எரிபொருளை பெற்றுக்கொடுக்கும் வகையில் புதிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கப் போவதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்காக விசேட விண்ணப்பங்கள் தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அது தொடர்பில் மேலும் ஆராய்ந்து அத்தியாவசிய சேவைகளை வழங்கும் நபர்களுக்கு அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜங்க அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க அத்தியாவசிய சேவைகளை வழங்குவோர் நீண்ட கியூ வரிசையில் நிற்காமல் துரிதமாக எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை கண்காணிப்பதில்

06

# அமானா வங்கியின் மொத்த வைப்புகள் ரூ.100 பில்லியனை கடந்தது





2022 முதல் காலாண்டில் அமானா வங்கியின் மொத்த வாடிக்கையாளர் வைப்புப் பெறுமதி ரூ. 100 பில்லியன் எனும் மைல்கல்லை கடந்துள்ளது.

இதனூடாக, குறுகிய காலப்பகுதியில் இந்த இலக்கை கடந்த முதலாவது அங்கீகாரம் பெற்ற வணிக வங்கி எனும் பெருமையையும் தனதாக்கியுள்ளது.

வங்கியின் பரந்த மற்றும் வளர்ந்து வரும் மக்களுக்கு நட்பான வங்கி முறைமை அனைத்து இலங்கையர்களும் ஏற்றுக் கொண்டுள்ளமையின் காரணமாக இந்த துரித வளர்ச்சியை வங்கியினால் பதிவு செய்ய முடிந்திருந்தது. 2022 முதல் காலாண்டு நிறைவில், வங்கியின் மொத்த வாடிக்கையாளர் வைப்புப் பெறுமதி ரூ. 105.7 பில்லியனாக பதிவாகியிருந்தது. இது 2021 ஆம் ஆண்டின் நிறைவின் போது பதிவாகியிருந்த ரூ. 96.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத அதிகரிப்பாகும்.

அத்துடன், த ஏசியன் பாங்கர் சஞ்சிகையினால், உலகின் உறுதியான 50 இஸ்லாமிய வங்கிகளில் ஒன்றாகவும் தரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த சாதனைதொடர்பில் அமானா வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மொஹமட் அஸ்மீர் கருத்துத் தெரிவிக்கையில், "மிகவும் குறுகிய காலப்பகுதியில் எம்மால் இந்த சாதனையைப் பதிவு செய்ய முடிந்துள்ளதையிட்டு நாம் பெருமை கொள்கின்றோம்.

இதனூடாக எமது மக்களுக்கு நட்பான வங்கி மாதிரியையும், இலாபப் பகிர்வு அடிப்படையில் வங்கியினால் வழங்கப்படும் கவர்ச்சிகரமான வருமதிகள் போன்றவற்றை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளமை உறுதியாகியுள்ளது. என்றார்.

வங்கியின் வைப்புகள் மற்றும் டிஜிட்டல் புத்தாக்கப் பிரிவின் உதவி உப தலைவர் அர்ஷாத் ஜமால்தீன் கருத்துத் தெரிவிக்கையில், "கடந்த காலங்களில், அமானா வங்கியினால் பல்வேறு கவர்ச்சிகரமான வைப்புத் தீர்வுகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன.

இதில் விருது வென்ற 'Savings Plan' மற்றும் 'Flexi Term Investment' போன்ற கணக்குகளும் அடங்குகின்றன.

# தினகரன் வர்த்தக உலா

எம்.எஸ்.பாஹிம் E-mail: businesstkn@gmail.com



2022ம் ஆண்டுக்கான லங்காபே தொழில்நுட்ப விருதுகள் வழங்கும் விழாவில் "மிகச் சிறந்த பொது ATM செயல்படுத்துனர்" என்ற விருதை கொமர்ஷல் வங்கி வென்றுள்ளது. கொமர்ஷல் வங்கித் தலைவர் பேராசிரியர் A.K.W ஜயவர்தன (மத்தியில்) பிரதான செயற்பாட்டு அதிகாரி சனத் மனதுங்க (வலமிருந்து இரண்டாவது) சிறந்த ATM சேவை வழங்குனருக்கான தங்க விருதை பெற்றுக் கொள்கின்றனர்.




தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடனான(NCE)பங்காண்மையை செலான் வங்கி பிஎல்சி மீளமைத்துள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வில் இடமிருந்து செலான்வங்கி – கிளை கடன் உதவி பொது முகாமையாளர் ரணில் திசாநாயக்க, சர்வதேச செயற்பாடுகளுக்கான உதவி பொது முகாமையாளர் திலன் விஜேகுணவர்தன, பிரதம செயற்பாட்டு அதிகாரி ரமேஷ் ஜயசேகர, பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான கபில ஆரியரட்ன, NCE பிரதம நிறைவேற்று அதிகாரி ஷிஹாம் மரிக்கார், செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் மேனகா வன்னியாரச்சி, நிர்வாக ஒழுங்கிணைப்பாளர் ஷலோம் பெரேரா மற்றும் செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் உதவி பொது முகாமையாளர் காமிக டிசில்வா ஆகியோரை காணலாம்.



எயார்டெல் லங்கா தனது ஊழியர்களின் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் தனது முதலீட்டின் வெற்றியை எடுத்துக்காட்டும் வகையில், இம்முறை SLIM NASCO விருது வழங்கும் நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் பிரிவில் தங்க விருதை வென்றுள்ளது. எயார்டெல்லின் பிரதி பிராந்திய விற்பனை முகாமையாளர் நுவன் பெர்னாண்டோ, 2020 NASCO விருது வழங்கும் நிகழ்வில் நடுவர் குழுவுடன் இடம்பெற்ற நேர்காணலுக்காகவும், அவரது முழுமையான அர்ப்பணிப்பு, செயல்திறன் மற்றும் மூலோபாய பங்களிப்புகள் குறித்த அவரது வெற்றிகரமான படைப்பாற்றல் திறனுக்காக தங்க விருதைப் பெற்றுள்ளார்.

# MRI களத்தில் அதிக சந்தை இருப்புடன் சுகாதாரத் துறையை பலப்படுத்தும் DIMO

*DIMO நிறுவனம், உள்நாட்டு சுகாதாரத் துறையை நவீன தொழில்நுட்பத்துடன் வலுப்படுத்தும் முயற்சிக்கு அமைய, அதன் நீண்டகால பங்காளியான உலகளாவிய மருத்துவ தொழில்நுட்ப நிறுவனமான, Siemens Healthineers உடன் இணைந்து நாட்டின் Magnetic Resonance Imaging (MRI scanners) பிரிவில் மிக உயர்ந்த சந்தை இருப்பைப் பெற்றுள்ளது. தனியார் மற்றும் அரச துறைகளை உள்ளடக்கிய MRI பிரிவில், சுமார் 41% சந்தைப் பங்கை DIMO பெற்றுள்ளது. நாடு முழுவதும் DIMO வினால் நிறுவப்பட்ட அனைத்து Siemens Healthineers MRI ஸ்கேனர்*



*களாலும், வருடாந்தம் 56,160 ஸ்கேன்கள் மேற்கொள்ளப்படுகின்றன. DIMO வழங்கும் Siemens Healthineers MRI ஸ்கேனர்கள், சிறந்த புகைப்படத் தரம், செயற்றிறன், வேகமான செயற்பாடு, நோயாளிக்கு உகந்த வசதி ஆகியவற்றை வழங்குவதில் புகழ் பெற்றவையாக விளங்குகின்றன.*

*கொழும்பு தேசிய வைத்தியசாலை (NHSL), லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, நெவில் பெனாண்டோ போதனா வைத்தியசாலை, நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலை மற்றும் Durdans Hospital, Lanka Hospitals PLC, Nawaloka Hospitals PLC, Northern Central (Pvt) Hospital உள்ளிட்ட பல்வேறு தனியார் துறை வைத்தியசாலைகள் போன்றவற்றிலும் DIMO வழங்கும் Siemens Healthineers MRI ஸ்கேனர்கள் நிறுவப்பட்டுள்ளன.*

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஏப்ரல் 12 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினකරන්



**தொழுகை நேரம்**

12 முதல் 14 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.48 |
| லுஹர் | 12.13 |
| அஸர் | 03.17 |
| மஃரிப் | 06.19 |
| இஷா | 07.30 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் பங்குனி 29

ராகுகாலம் : மாலை : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: ஏகாதசி




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரிக்கும் ஆர்ப்பாட்டம் நேற்று சிலாபம் நகரத்தில் முன்னெடுக்கப்பட்டது. இதன் போது ஐக்கிய காங்கிரஸ் கட்சி ஆதரவாளர்கள் கட்சியின் தலைவர் முபாறக் மௌலவியின் வேண்டுகோளை ஏற்று கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் எம் எஸ் எம் சப்வான் தலைமையில் கலந்து கொண்டனர்.

**ரமழான் சிந்தனை**

## பாவமன்னிப்பு பெற்றிடுவோம்

மனிதன் இயல்பாகவே தவறு இழைக்கக்கூடியவனாகவும் குற்றங்கள் புரியக்கூடியவனாகவும் இருக்கின்றான். அவை பாவங்களை மாத்திரமல்லாமல் ஈருலக வாழ்விலும் நஷ்டத்தை தேடித்தரக் கூடியனவாக அமையக்கூடியன.

அதனால் இறைவிசுவாசிகள் தவறானதும் பாவமானதுமான காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்ந்து கொள்வதற்கு அல்லாஹ்தஆலா வகுத்தளித்துள்ள ஏற்பாடுகளில் ரமழான் மாத நோன்பும் ஒன்றாகும். அதன் காரணத்தினால் அல்லாஹ்வின் கட்டளைக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் ஏற்ப நோன்பை அமைத்துக்கொள்ள வேண்டும். அப்போது மனிதனைப் புடம்போட்டு பக்குவப்படுத்துவதற்கான சிறந்த பயிற்சிக் களமாக நோன்பு அமைந்திடும்.

அதேநேரம், மனிதன் தன் பாவங்களுக்கும் தவறுகளுக்கும் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்வதற்கான சிறந்த காலப்பகுதியாகவும் ரமழான் நோன்பு காலம் விளங்குகிறது. இம்மாதத்தில் நோன்பு நோற்று இறை வணக்கங்களில் ஈடுபடுவதும் லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்குவதும் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கான சிறந்த ஏற்பாடாக அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் நபி (ஸல்) அவர்கள் ஒரு தடவை, 'யார் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் ரமழானில் நோன்பு நோற்கின்றாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' (ஆதாரம்: புகாரி) என்றார்கள். மற்றொரு சந்தர்ப்பத்தில், 'யார் நம்பிக்கையுடனும், நன்மையை எதிர்பார்த்தும் ரமழானில் நின்று வணங்குகிறாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) என்றுள்ளார்கள்.

பிறிதொரு சமயத்தில், 'யார் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் லைலத்துல் கத்ர் இரவில் நின்று வணங்குகிறாரோ அவரது முன்னைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன' (ஆதாரம்: புகாரி, முஸ்லிம்) என்றும் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நபிமொழிகளின் படி, மனிதன் தன் தவறுகள், பிழைகளின் விளைவான பாவங்களுக்கு அல்லாஹ்தஆலாவிடம் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்வதற்கான மிகச் சிறந்த காலப்பகுதியாக ரமழான் நோன்பு காலம் விளங்குவது தெளிவாகிறது.

ஆகவே அல்லாஹ்விடம் பாவமன்னிப்பு பெற்றுக்கொள்வதற்கு ஏற்ப இந்நோன்பு காலப்பகுதியை அமைத்துக்கொள்வதில் அதிக கவனம் செலுத்துவோம். அது ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கு இன்றியமையாததாகும்.

மர்லின் மரிக்கார் ...

## பிரார்த்தனை செய்ய இந்துக் குருமார் அமைப்பு அழைப்பு



மங்களகரமான சுபகிருது தமிழ் புதுவருடம் சித்திரை மாதம் 1ஆம் திகதி வியாழக்கிழமை (14.04.2022) சிம்ம ராசி, ரிஷப லக்னத்தில் பிறக்கிறது. மேஷ ராசியில் பகவான் சூரிய பகவான் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் போது மங்களகரமான சுபகிருது வருடம் பிறக்கிறது.

கடந்த காலங்களில் இருந்து எமது மக்கள் பலவிதமான கஷ்டங்களை, துயரத்தை அனுபவித்து வருகின்றனர். அதிலும் குறிப்பாக கடந்த வருடம் கண்ணுக்கு புலப்படாத கிருமித் தாக்கத்தினை எதிர்கொண்டு இழப்புகளுக்கு மத்தியிலும் போராடி சற்றே இயல்பு நிலைக்குத் திரும்பும் சமயம், நாடும் மக்களும் பெரும் பொருளாதார சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு கோணங்களில் தாக்கங்களை எதிர்நோக்கியுள்ள இச்சூழலில் இருந்து விடுபட்டு மக்களின்

06

## மருந்து தட்டுப்பாடு; செல்வந்தர்களிடமிருந்து உதவிகளை பெற தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக சுகாதார அமைச்சு நாட்டிலுள்ள செல்வந்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பெரும்பாலான வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவித்துள்ள அவர், மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்து கொள்வதற்காக செல்வந்தர்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டின் பல்வேறு வைத்தியசாலைகளிலும் சில மருந்துகளுக்கான கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் கையிருப்பில் உள்ள மருந்துகள் ஒரு மாதத்திற்கோ அல்லது இரண்டு மாதத்திற்கோ போதுமானதாகவே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையை சீர் செய்து கொள்வதற்காக செல்வந்தர்களிடமிருந்து சுகாதார அமைச்சு நிதி நன்கொடைகளை எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)





தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 29ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ரமழான் பிறை 10




## ஆர்ப்பாட்டங்களால் நாட்டுக்கு பெரும் பொருளாதார நஷ்டம்!

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இவை நாட்டின் பல பிரதேசங்களிலும் நகரங்களை மையப்படுத்தி இடம்பெறுகின்றன. இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாக நாட்டின் பொருளாதாரத் துறையில் பலவித தாக்கங்களும் பாதிப்புகளும் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக இந்நாட்டின் உல்லாசப் பயணத் தொழில் துறையில் இவ்வார்ப்பாட்டங்கள் அதிக தாக்கத்தை செலுத்தியுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்திருப்பது இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

உலகிற்கே பெரும் சவாலாக விளங்கிய கொவிட் 19 தொற்று 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் நடுப்பகுதி முதல் இந்நாட்டில் பதிவாகத் தொடங்கியதைத் தொடர்ந்து, இந்நாட்டின் உல்லாசப் பயணக் கைத்தொழில் துறை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்தது. இதன் விளைவாகப் பெரிதும் வீழ்ச்சியடைந்திருந்த இக்கைத்தொழில் துறை, கடந்த 2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் கட்டம் கட்டமாக மீட்சி பெற ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில் கடந்த இரு வருடங்களின் பின்னர் இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் 2 இலட்சத்து 80 ஆயிரத்து 26 உல்லாசப் பயணிகள் முதற் தடவையாக நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். அவர்களில் ஒரு இலட்சத்து 6500 பேர் மார்ச் மாதம் வருகை தந்தவர்களாவர்.

இந்த அடிப்படையில் இவ்வருடம் இந்நாட்டுக்கு 23 இலட்சம் உல்லாசப் பயணிகள் வருகை தருவர் என மதிப்பிடப்பட்டு இருக்கின்றது. இந்நாட்டுக்கு வருகை தரும் ஒரு உல்லாசப் பயணி நாளொன்றுக்கு சுமார் 175 அமெரிக்க டொலர்களை செலவிடவதாகக் கணிப்பிடப்பட்டிருக்கிறது. இதன்படி உல்லாசப் பயணக் கைத்தொழில் துறை மூலம் இந்நாட்டுக்கு இவ்வருடம் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாகக் கிடைக்கப் பெறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஆனால் நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களின் விளைவாக கடந்த 10 நாட்களில் உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தம்மிக்கா விஜேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த ஜனவரியின் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை நாளொன்றுக்கு 3800 ஆகக் காணப்பட்ட போதிலும், கடந்த சில தினங்களாக அது 2800 வரை வீழச்சி அடைந்திருக்கின்றது.

இதன் விளைவாக நாளொன்றுக்கு ரூ. 542.5 இலட்சம் ரூபா வீதம் கடந்த 10 நாட்களில் 542.5 மில்லியன் ரூபா இழப்புக்கு நாடு முகம் கொடுத்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள பணிப்பாளர் நாயகம் தம்மிக்கா விஜேசிங்க, இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் இருந்து இலங்கைக்கு உல்லாசப் பயணம் மேற்கொள்ள ஏற்கனவே திட்டமிட்டிருந்த பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் தற்போது இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங்களால் இந்நாட்டுக்கான தங்கள் பயணத்தை இடைநிறுத்தியுள்ளனர்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் இந்நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தலாமெனத் தெரிகிறது. கடந்த 10 நாட்களாக இடம்பெற்றுள்ள ஆர்ப்பாட்டங்களால் உல்லாசப் பயணத்தொழில் துறைக்கு மாத்திரம் 542.5 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டு இருக்கின்றது என்றால் ஏனைய துறைகளிலும் நஷ்டங்கள் ஏற்படாமல் இல்லை. பொருளதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள நாட்டுக்கு 542.5 மில்லியன் ரூபா என்பது பெரியதொரு தொகையாகும்.

அதேநேரம் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கோரி முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களும் பொருளாதார இழப்புக்கு வகை செய்திருக்கின்றன என்பது தெளிவாகின்றது. அதனால் இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவான இழப்புக்கள் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை மேலும் அதிகரிக்கவே செய்யும் என்பதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்தாகும்.

ஆகவே தற்போதைய சூழலில் நாட்டினதும் மக்களினதும் பொருளாதார நலன்களைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டியது ஒவ்வொருவரதும் பொறுப்பாகும். அதுவே நாடு எதிர்கொண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவாக மீட்சி பெற்றுக் கொள்ள வழிவகுக்கக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# குழந்தைகளின் உயிருக்கே ஆபத்தாக மாறக் கூடிய விபரீத செயற்பாடுகள்

சிறுவர் உரிமை சமவாயத்தின் படி, 18 வயதிற்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்களே. மனித உரிமை என்பது எல்லா மனிதர்களுக்கும் உரித்துடையது போல, சிறுவர்களுக்கு உரித்தாக்கப்பட்ட உரிமைகள் பற்றிய உறுப்புரைகள் இச்சிறுவர் உரிமை சமவாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இயற்கையாகவே, சிறுவர்களின் மொழி, நடை, பாவனை என்பன ரசிக்கத்தக்கவை. அவர்கள் சமூகத்தில் காணப்படும் பன்முகத்தன்மையினால் வேறுபட்டிருந்தாலும் உளரீதியாக ஒன்றுபட்டவர்களே. இச்சிறுவர்களுக்கு விளையும் அச்சுறுத்தல்கள் பாரியளவிலானவை. அவர்களை சுற்றியுள்ளவர்களே அவர்களை துன்புறுத்தும் செயற்பாடு நாளுக்கு நாள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. மானிடர் என்ற முறையில், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டியது எமது கடமையாகின்றது.

அதாவது ஒரு சிறுவருக்கு, இன்னுமொரு சிறுவரால் அல்லது வயது வந்தவர்களால் வேண்டுமென்றே தீங்கு பயக்கும் செயற்பாடு சிறுவர் துஷ்பிரயோகமாகக் கருதப்படும். அதேவேளை, ஒரு செயலின் மூலமாகவோ அல்லது செயல்பட தவறுதலின் மூலமாகவோ ஒரு பிள்ளைக்கு காயம், இறப்பு, உணர்ச்சித் தாக்கம் அல்லது கடுமையான தீங்கு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடும் சிறுவர் துஷ்பிரயோகமாக கருதப்படும்.

துஷ்பிரயோகமானது பல்வேறு வடிவங்களில் நடைபெறுகின்றது. இவை, இன்று வரைக்கும் உடல் ரீதியான துஷ்பிரயோகம், உளவியல் துஷ்பிரயோகம், பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் புறக்கணிப்பு என்று வகைப்பட்டுள்ளன.

'அடி உதவுவது போல் அண்ணன் தம்பி உதவ மாட்டார்' என்று முன்னோர்களால் கூறப்பட்ட ஒரு விடயம், மருவி, இன்று சிறுவர்களுக்கு எதிராக வன்முறையை தோற்றுவிக்கும் ஒன்றாக திரிபடைந்து விட்டது. முன்னோர்களால் இங்கு 'அடி' என்று குறிப்பிடப்பட்டது இறைவனின் பாதமாகும். இடர் வரும் வேளையில் இறை பாதம் நாடினால், உற்றார் உறவினர் எவர் உதவியையும் எதிர்பார்க்க தேவையில்லை என்பதே இக் கூற்றின் கருத்தாகும். ஆனால், இப்பொருள் காலத்தின் போக்கில் மருவி, அடிப்பது மட்டுமே பயனளிக்க கூடும் என்ற தப்பான எண்ணக்கருவின் போர்வைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது சிறுவர்களுக்கு எதிரான உடல் ரீதியான துஷ்பிரயோகத்தை ஊக்குவிக்கும் ஓர் செயற்பாடாக காணப்படுகின்றது.

சிறுவர்களைச் சுற்றியுள்ளவர்கள் சிந்திக்கத் தவறும் பட்சத்தில் கூட இந்த உடலியல் துஷ்பிரயோகம் நடைபெறுகின்றது. இது அவர்களின் அறியாமையினால் இடம்பெறுகின்றது. நாளாந்த வாழ்க்கையில், பெற்றோர்கள் தன் பிள்ளைகளுக்கு தம் விருப்பப்படி மேற்கொள்ளும் சில செயற்பாடுகள், பிற்காலத்தில் அவர்களுக்கு எதிர்பாராத எதிர்மறை தாக்கத்தை தோற்றுவிக்கும். வளர்ந்த பிள்ளைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி அனைவரும் அறிந்திருக்கலாம். அனால் மழலைகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றி நாம் அறிந்திருக்க தவறி இருப்போம். இதில் ஒன்று தான் குழந்தைகளை குலுக்குவதன் மூலமாக ஏற்படும் நோய்க்குறி ஆகும். இது பிள்ளையின் மூளையை பாதிக்கும் ஒரு செயலாகும்.



## அழுகின்ற பிள்ளையை அமைதிப்படுத்துவதற்கு வழி இதுவல்ல!

பிள்ளைகள் வளர்ந்தவர்களில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்களின் உடலியல் தகுதி மற்றும் உளவியல் தகுதி என்பன முற்றான வளர்ச்சிக்கு உட்பட்டவையல்ல. அவர்களின் உடல் மென்மையானது. அது போல உடலின் உட்பாகங்களான மூளை, தசைப்பகுதி, நரம்புகள், என்புகள், மூட்டுக்கள் என்பன பலவீனமானவை. இவ்வாறிருக்க, அவர்களை வேகமாக அசைப்பதன் மூலம் அல்லது, வேகமாக குலுக்குவதன் மூலம் மேற்குறிப்பிட்ட நோய்க்குறி ஏற்படுகின்றது.

இச்செயற்பாட்டின் போது பிள்ளையின் உடல் எதிர்பாராமல் தீவிர அசைவிற்கு உள்ளாகின்றது. இது பிள்ளையின் தன்னிச்சை செயற்பாடில்லாமல், மூன்றாம் நபர் செயற்பாடால் நடைபெறுகின்றது. இதன் போது பிள்ளையின் மண்டை ஓட்டிற்குள் உள்ள மூளையானது, பிள்ளையோடு சேர்ந்து அசைவிற்கு உள்ளாகின்றது. இவ்வேளையில், அந்த மென்மையான மூளை மண்டையோட்டில் மோதி இரத்தக்கசிவு ஏற்படுகின்றது. இது பிள்ளையின் மூளை சிதைவிற்கு காரணமாக அமைகின்றது. இச்செயற்பாடு சில வளர்ந்த நாடுகளில் தண்டனைக்குரிய குற்றமாகும். எடுத்துக்காட்டாக, 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம், அமெரிக்க நீதிமன்றம், பிள்ளையை குலுக்கி அதன் மூளைக்கு பாதிப்பு ஏற்படும் வண்ணம் செயற்பட்ட பராமரிப்பாளர் ஒருவருக்கு பத்து அரை வருடம் கடும்காவல் தண்டனை வித்தித்துள்ளது. இதை தொடர்ந்து நீதிமன்றத்தில் குறித்த பிள்ளையின் தந்தை 'இது எனது மகனுக்கும், என் மனைவிக்கும், எனக்கும், எங்கள் குடும்பத்திற்கும் கிடைத்த ஆயுள் தண்டனையாகும்' என்று கூறியிருந்தார்.

சில நேரங்களில் பிள்ளைகள் அழுவதற்கான காரணங்களை கண்டறிய முடியாது. அவ் வேளைகளில் 'குழந்தைகள் இதற்காகத்தான் அழுகின்றார்களோ!' என்று பெரியவர்களே ஒரு முடிவிற்கு வருவார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில், அவ் அழுகையை நிறுத்துவதற்கு பிள்ளையை சிரிக்க வைக்க முயலுவர். இதன் போது அவர்களை தூக்கி குலுக்குதல், அசைத்தல், எறிந்து பிடித்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள். இவ்வாறான நேரங்களில், இந்த நோய்க்குறி நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றது. அது மட்டுமல்லாமல், சில நேரங்களில் அவர்களின் அழுகை பிறருக்கு கோபத்தை விளைவிக்கும். அப்பொழுது அக்கோபத்தை தணிக்க பிள்ளையை இறுக்கப் பற்றுதல், தலையில் அடிபட வைத்தல், மற்றும் வேகமாக நகர்த்துதல் போன்ற தீங்கு விளைவிக்கும் செயற்பாடுகளில் அறியாமல் ஈடுபடுவர்.

இந்தச் செயல், பிள்ளையின் மூளையில் இரத்தப்போக்கு, சிராய்ப்பு, வீக்கம் என்பவற்றை தோற்றுவிக்கும். இதன் உடனடி வெளிப்பாடாக, சில சமயங்களில் காது, வாய், மூக்கு வழியாக இரத்தம் வெளியேறும். இந்த நேரத்தில் மருத்துவரின் அவசர உதவி இன்றியமையாததாகும். அனால் அநேகமான நேரங்களில் இதன் வெளிப்பாடானது காலம் கடந்தே காண்பிக்கப்படும். அதாவது, மனவளர்ச்சி குறைபாடு, குன்றிய உடல் உறுப்புக்கள், மூளையில் ஏற்படும் இரசாயன மாற்றம், ஹோர்மோன் சார் பிரச்சினைகள் போன்றவை பிள்ளையை ஆட்கொள்ளும்.

இந்த நோய்குறி, ஒருவருக்கு ஒருவரில் இருந்து வேறுபட்டது. இதை அறிந்து கொள்ள சில அறிகுறிகள் காணப்படுகின்றன. அவையாவன, திடீர் காய்ச்சல், பிள்ளையின் தோல் வெளிறுதல் அல்லது நீல நிறமாகுதல், உணர்விழந்த முழு மயக்க நிலை (கோமா), முடக்குவாதம், சுவாசிப்பதில் சிரமம், அதிகப்படியான எரிச்சல், விழித்திருப்பதில் சிரமம், உணவு உண்பதில் சிரமம் மற்றும் சில பிள்ளைகளுக்கு உடல்நல பிரச்சினைகள் ஏற்படும்.

பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலை. இதை செவ்வனே புரிய, பெற்றோரின் ஆரோக்கியமான மனநலம் மற்றும் பிள்ளைகள் மீதான கவனிப்பு இன்றியமையாததாகும். சிறுவர்களை அன்போடும், பணிவோடும், அவர்களது சுயமரியாதைக்கு களங்கம் விளைவிக்கா வண்ணம் நடத்துவதன் மூலம், அவர்களின் ஒளிமயமான எதிர்காலத்திற்கு நாம் உறுதுணையாக விளங்குவோம்.

விவேதா குணரெட்ணம்,
திட்ட அலுவலர், எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு
(PEaCE/ ECPAT Sri Lanka)

# அவசர தேவையுடையோருக்கு உதவுவதற்காக ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரணத் திட்டம்

டயலொக், MAS, Hemas மற்றும் சர்வோதயம் ஆகியன ஒன்றிணைந்து அவசரத் தேவையுடையோருக்கு உதவுவதற்காக ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரணத் திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றன. இதன்படி 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரண திட்டமொன்றை கூட்டாக ஆரம்பித்துள்ளன .

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில் தொலைநோக்குப் பார்வையுடன், ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிவாரணத் திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வோதயம் உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்ட மேற்படி பெருநிறுவன கூட்டணியுடன் டயலொக் கைகோர்த்துள்ளது. இதற்கமைய, இந்த பெருநிறுவன கூட்டு நிறுவனங்கள் நாட்டில் 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள மற்றும் வறுமையில் உள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு அவசரகால நிவாரணங்களை வழங்கவுள்ளன.

குறித்த பெருநிறுவன கூட்டாளர்களின் இணக்கத் தேவைகளின்படி நிதி நிர்வாகத்தையும் அறிக்கையிடலையும் கண்காணிக்கும் முயற்சியை PwC மேற்கொண்டுள்ளது. மேலும், ITN, Siyatha Swarnawahini, TV Derana மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன. மேற்படி ‘மனிதநேய ஒன்றிணைவு’ நிகழ்வானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி செயற்படத் தொடங்கியது. அதற்கமைய அனைத்து 25 மாவட்டங்களிலும் அவசர நிவாரணம் தேவைப்படும் இடங்களில், குடும்பங்களுக்கு இதனூடாக அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படும்.




இடமிருந்து வலமாக சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு,பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ரவி சிறிவர்தன, Voice of Asia Network இன் தலைமை நிர்வாக அதிகாரி அஜாஸ் ஷபீக், PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன், MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ, EAP வலையமைப்பு பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் அலைவரிசை பிரிவு தலைவர் ரங்கன டி சில்வா, பவர் ஹவுஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் சந்தைப்படுத்தல் குழும பணிப்பாளர் துஷார பெரேரா.

டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், “100,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து செயற்படுகின்ற MAS, Hemas நமது செயற்றிட்ட செயற்பாட்டு பங்காளியான சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரரான PwC ஆகியோருக்கு நாம் நன்றி கூறுகின்றோம். நாடு முழுவதும் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் பங்காளியாக உள்ள டயலொக் நிறுவனமாகிய நாம் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அத்தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். விளிம்பு நிலை சமூகங்களுக்கு அவர்களின் மிகப் பெரிய தேவைகளின் போது அவர்களுக்கு உதவ இதுபோன்ற நிவாரண முயற்சிகளை நாங்கள் எப்போதும் முன்னெடுத்து வருகின்றோம். இந்த முயற்சியில் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு இலங்கை பெருநிறுவனங்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்"என்றார்.

**டயலொக் ஆசிஆட்டா, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து ஆரம்பம்**

## ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணங்கள்

மேற்படி நிவாரண திட்டம் குறித்த அறிமுக விழாவில் உரையாற்றிய MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ “இதுபோன்ற சந்தர்ப்பங்களில் MAS நிறுவனமும் முக்கிய பங்காளராக செயற்பட கிடைத்துள்ளதை பெரும் பாக்கியமாக நாம் கருதுகின்றோம். இலங்கையில் உள்ள ஏனைய பெருநிறுவனங்களும் இவ்வாறே எம்முடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்த வேலைத்திட்டத்தினூடாக நம்முடன் ஒன்றிணைந்து இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீளச்செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான வழிகளைக் கண்டறிய உத்வேகம் பெறுவார்கள் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன்" என்றார்

Hemas Holdings பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் கருத்து தெரிவிக்கையில் “இலங்கை நிறுவனம் என்ற வகையில் நாடு முழுவதிலுமுள்ள எமது மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும். எனவே, அடுத்து வரும் மாதங்களில், நாம் நமது பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவதுடன் நமது சமூகங்கள் மற்றும் சேவையாளர்களின் சுமையை குறைக்கும் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவோம்" என்றார்..

சர்வோதய சிரமதான சங்கத்தின், “குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதற்காக இந்த மனிதாபிமான முயற்சியை முன்னெடுக்கும் நோக்கில் டயலொக், MAS மற்றும் Hemas போன்ற உயர்தர நிறுவனங்களுடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எண்ணிக்கைகளின் அடிப்படையிலான அறிவியல் அளவுகோல்கள், சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பயனாளிகளை நாங்கள் அடையாளம் காண்போம், மேலும் இந்த நிவாரண திட்டத்தில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். உணவுப் பாதுகாப்பின்மை ஆபத்தான விகிதத்தில் அதிகரித்து வருவதால், இந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்ற நிலையான தீர்வுகளை வழங்குவதிலும் ஒரு படி தாண்டிச்செல்ல நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஏனைய பெருநிறுவன நிறுவனங்களையும் இந்த முயற்சியில் நம்முடன் ஒன்றுசேர வருமாறு நான் அழைக்கின்றேன், இதன் மூலம் கூட்டாக, நாட்டில் உள்ள நமது சொந்த சகோதர சகோதரிகளை நாம் பராமரித்துக்கொள்ள முடியும்" என்றார் அவர்.

பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி ‘மனிதநேய ஒன்றிணைவு’ வேலைத்திட்டமானது 6090 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்விப் புலத்தில் ஆளுமை நிறைந்த மாபெரும் மனிதனாக திழ்ந்தவர் பேராசிரியர் சந்திரசேகரம்

பேராசிரியர் எஸ்.சந்திரசேகரம் இன்று நம்மிடையே இல்லை. அவரது மறைவு ஏற்படுத்தியுள்ள இடைவெளியை காலத்திடம்தான் விடவேண்டும்.

நமது காலத்துக் கல்வி முறையில் உலகளவில் நிகழ்ந்து வரும் வளர்ச்சியையும், மாற்றங்களையும் எமக்கு எடுத்துக்கூற இருந்த ஒரு கல்விப்புல அறிஞரை நாம் இழந்திருக்கிறோம். கல்வியின் காலத்துக்கேற்ற வளர்ச்சி, மாற்றம், புதிய கற்றல்முறை, பாடசாலை முகாமைத்துவம் என்ற எந்தத் தலைப்பிலும் கருத்துச் சொல்ல, அதை உலகக் கல்வி முன்னேற்றங்களோடு உள்நாட்டு மாற்றங்களையும் ஒப்பிட்டு கருத்துக்கூற நம்மிடையே இருந்த பெரிய கல்விமான் பேராசிரியர் சந்திரசேகரம்.

நவீன கல்வி, கல்வி மாற்றங்கள், எதிர்காலக்கல்வி, பாதிக்கப்பட்டவர்களின் கல்வி, சிறுபான்மை மக்களின் கல்வி, தமிழரின் கல்வி, மலையக மக்களின் கல்வி, முஸ்லிம்களின் கல்வி என்று இலங்கை சூழலுக்கு பொருந்தக் கூடிய கல்விப் பிரச்சினைகளைப் பற்றி சிறந்த பார்வையும், ஆழமான அறிவும் அவருக்கு இருந்தன.

தமது அறிவால் மட்டுமல்ல அந்த அறிவை உரிய இடங்களுக்கும் மக்களுக்கும் கொண்டு செல்வதில் பேராசிரியர் சந்திரசேகரம் தமது முழு ஆற்றலையும் காலத்தையும் செலவிட்டுள்ளார். எல்லா இன மக்களின் கல்வி, கல்வித்தேவை, வளர்ச்சி, குறைபாடுகள், தீர்வுகள் பற்றி அவர் கலந்துரையாடினார். தமது கருத்துகளை வெளிப்படையாக முன்வைத்தார். இனஉணர்வுகளைக் கடந்து தமது அறிவையும் ஆற்றலையும் சேவைகளையும் எல்லா மக்கள் தரப்புக்கும் வழங்கினார். தோழமையுடனும் உரிமையுடனும் தேவையான கருத்துகளையும் தீர்வுகளையும் எல்லா மக்களுக்குமாக பயன்படுத்தினார்.

முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைகள் பற்றி எழுதினார், பேசினார். கல்வித்துறை சார்ந்த அநேக முஸ்லிம்கள் அவரிடம் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்தனர். அவரது ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் தமக்குப் பயனளித்த விதம் பற்றி பல முஸ்லிம்கள் தமது முகநூல் அனுதாப உரைகளில் கூறித் தமது கவலையை வெளியிட்டிருந்தனர். ஓய்வுபெற்ற ஆசிரியர், எழுத்தாளர் அன்பு ஜவஹர்ஷா போன்றவர்களின் அனுதாபச் செய்திகள் முஸ்லிம் சமூகத்தவர்களோடு அவருக்கிருந்த நெருங்கிய பிணைப்பை எமக்கு நன்கு உணர்த்துகின்றன.



பேராசிரியர் சந்திரசேகரத்தின் மணிவிழா நிகழ்ச்சியில் பங்கேங்கவும், பங்களிக்கவும் எல்லா இன மக்களும் காட்டிய ஆர்வம் பேராசிரியர் சந்திரசேகரத்தின் சிறந்த பண்புகளை தமக்கு உணர்த்துவதாக மணிவிழா மலர்ச் செய்தியில் பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறியிருந்தார். இலங்கை தமிழ் சமூகத்தின் குறிப்பாக, முஸ்லிம்களையும் உள்ளிட்ட தமிழ் பேசும் சமூகத்தின் பிரபல ஆளுமையாக பேராசிரியர் சந்திரசேகரம் திகழ்ந்தார் என்ற கா. சிவத்தம்பியின் மற்றொரு கூற்றையும் இங்கு நினைவுபடுத்தலாம். பல வகையில் அவர் சமூகங்களுக்கு இடையில் பாலமாக இருந்துள்ளார். அது அவரது உடன்பிறந்த நற்குணங்களில் ஒன்றாக இருந்துள்ளது. யார் சந்திரசேகரம் பற்றி கருத்துக் கூறினாலும் இப்பண்புகளையே விதந்து பேசுகின்றனர்.

**இன்றைய காலத்தில் கல்வி முறையில் உலகளவில் நிகழ்ந்து வரும் வளர்ச்சியையும், மாற்றங்களையும் எமக்கு எடுத்துக்கூற இருந்த ஒரு அறிஞரை நாம் இழந்து விட்டோம்**

அவர் பெற்றுக் கொண்ட கல்வியும் புவியியல் கடந்து, இனவாத வரம்புகள் கடந்து மக்களுடன் சேர்ந்து வாழ்ந்த அனுபவங்களும் அவரில் செல்வாக்குச் செலுத்தியதாகக் கருதலாம். பதுளை அவரது பிறப்பிடம். பெற்றோர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். பதுளையில் அங்கிலிக்கன் பாடசாலையிலும், பின்னர் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகஜனா கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1963_1967 வரை பேராதனையில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். பின்னர் பாடசாலை ஆசிரியராகவும், ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி விரிவுரையாளராகவும், பல பல்கலைக்கழகங்களில் கல்வியியல் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

பின்னர் ஜப்பான் ஷிரோஷிமா பல்லைக் கழகத்தில் கல்வி சமூகவியலில் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார். ஐரோப்பிய ஜப்பானிய, ஆசியக் கல்வி முறைகள் பற்றிய அறிவை வளர்க்க முதுமாணிப் பட்டப்படிப்பும் அதற்குப் பின்னரான அவரது கல்வித்துறை ஆய்வுகளும் கல்வி பற்றிய அவரது பார்வையில் பெரிய தாக்கம் செலுத்தியுள்ளன. பேராசிரியர் சந்திரசேகரம் எழுதியுள்ள நூல்கள், கட்டுரைகள், ஆற்றியுள்ள உரைகள் அவர் தமது வாழ்நாளில் இறுதிவரை ஆற்றிவந்துள்ள அறிவுச்சேவைகள், கல்விச் சேவைகள் ஒவ்வொன்றும் அவரது கடின முயற்சிகளுக்கு சான்றுகள். அவற்றை மலையக சமூகத்தின் அறிவு மற்றும் கல்வி விருத்தியின் அடையாளங்கள் என்று குறிப்பிடலாம். மலையக சமூகத்தின் அறிவு வளர்ச்சி, கல்வி வளர்ச்சியில் ஒரு பாரிய அகற்சியை ஏற்படுத்திய விரல்விட்டெண்ணக் கூடிய முக்கிய மலையகக் கல்விமான்களுள் பேராசிரியர் சந்திரசேகரமும் ஒருவர்.



கொட்டகலை அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் மண்டபமொன்றுக்கு பேராசிரியரின் பெயர் இடப்பட்டிருப்பது அவருக்கு வழங்கப்பட்ட கௌரவமாகும். அதே போல் அவர் விட்டுச் சென்றுள்ள அவரது எழுத்துக்களும் உரைகளும் கூட நுலாக்கம் பெற சமூகம் ஆவன செய்ய வேண்டும். மக்களின் கவனத்துக்கும், அறிவுலகிற்கும் அவரது கருத்துக்கள் கொண்டு செல்லப்பட வேண்டும். அன்னாருக்கு நாம் செலுத்தும் மிகப்பெரிய நன்றிக் கடனாக இவை அமையும்.

பேராசிரியர்
**எம்.எஸ்.எம் அனஸ்...**

# இலக்கியவாதிகளை ஒரேகுடையில் ஒன்றிணைத்து பணியாற்றி வரும் கவிஞர் கலா விஸ்வநாதன்

களுத்துறை மாவட்டம் புளத்சிங்கள தோட்டத்தில் 15.01.1954 இல் பிறந்த பிறவிக் கலைஞன் கலா விஸ்வநாதன் இரத்தினபுரி பரி.லூக்கா கல்லூரியில் கல்வி பயிலும் காலத்திலே கவிதை எழுத ஆரம்பித்தவர். மலைநாட்டு எழுத்தாளர் மன்ற இணைச் செயலாளர் இரத்தினபுரி அ.பிலிப் மாஸ்டரோடு இணைந்து பல்வேறு கலை இலக்கிய சமூக ஆன்மீகப் பணிகளில் மாணவப் பருவத்திலேயே ஈடுபடலானார்.

இவர் முதன் முதல் எழுதிய கவிதை இரத்தினபுரி திருவானக்கட்டை சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ஸ்ரீ சத்ய சாயிபாபா பிறந்த தின நிகழ்வில் அரங்கேற்றம் பெற்றது. 'அன்பு வாழ்க்கை' எனும் தலைப்பில் எழுதிய கவிதை டிக்கோயாவிலிருந்து வெளியான 'ஸ்ரீசிபாகிரிதி' சஞ்சிகையில் முதன் முதலில் பிரசுரமாகியது.

'குயிலோசை' எனும் கையெழுத்து சஞ்சிகையை ஆரம்பித்து எழுத்துப் பணி ஆற்றியுள்ளார். அதன் தொடராய் 1974ல் 'குயில் வீணை' எனும் சிறு கவிதைத் தொகுப்பினை வெளியிட்டு இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானார்.



**வலம்புரி கவிதா வட்டம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடு செய்த ஆண்டு விழாவில் கவிமாமணி கலா விஸ்வநாதன் கௌரவிக்கப்பட்ட போது, கவிஞருக்கு அஸீஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸீஸ் மலர் மாலை அணிவித்ததை படத்தில் காணலாம். 'நாவலர் மன்ற' வண்ணை ஆனந்தன், இலக்கியப் புலவர் ஹாசிம் உமர், முன்னாள் கலாசார அமைச்சின் பணிப்பாளர் அனுஷா கோகில பர்னாந்து, வகவம் தலைவர் கவிமணி என்.நஜ்முல் உசைன் ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.**

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பில் நடத்திய தமிழ்_ சிங்கள ஒருமைப்பாட்டு மாநாட்டின் முன்னோடி நிகழ்விற்கு இரத்தினபுரியில் கிளையை நிறுவி, பிரசாரப் பணிகளை ஏற்பாடு செய்து மாநாட்டின் வெற்றிக்கு உழைத்தவர். இந்த நிகழ்வில் பிரேம்ஜி, இரா.சிவலிங்கம், சோமகாந்தன் உட்பட பலரரும் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

1970களில் மலையக இளைஞர் முன்னணிக் கூட்டங்களை இரத்தினபுரியில் ஏற்பாடு செய்த இவர், தொழில் நிமித்தமாக கொழும்புக்கு இடம் பெயர்ந்தார். தலைநகரில் இருந்து கொண்டே இரத்தினபுரியில் சப்ரகமுவ சாகித்திய சம்மேளனத்தை ஸ்தாபித்து எழுத்தாளர்களை இணைத்துக் கொண்டு, இலக்கிய வளர்ச்சிக்கு வித்திட்டவர்.

கவிப்பேரரசு கண்ணதாசன் மன்றத்தை 1980 களில் கொழும்பில் ஆரம்பித்து பல கவியரங்குகளை நடத்தி கொழும்பு கலைஞர்களுடன் இணைந்து, கலையார்வத்தை ஏற்படுத்தினார். அத்தோடு 'மலையக கவிஞர் சங்கம்' ஆரம்பித்து ஒன்றுகூடலை ஏற்படுத்த முனைந்தவர்.

'கவின்' 'ஜனநேசன்', 'மட்டக்குளியான்' ஆகிய புனைபெயர்களில் பத்திரிகைகளுக்கு கவிதைகளை எழுதியுள்ளதோடு, 2003 ஆம் ஆண்டில் வீரகேசரியில் தொடராக எழுதிய 'மனித ஏணிகள்' எனும் மலையக காவியத்தையும் மேலும் சில கவிதைகளையும் தொகுத்து 'மனித ஏணிகள்' என்னும் கவிதை நூலை மட்டக்குளி காக்கைதீவு வரவேற்பு மண்டபத்தில் வெளியிட்டார்.



மட்டக்குளி அருள்மிகு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவியை போற்றித் துதித்து 'ஸ்ரீ சாமுண்டீஸ்வரி கவசம்' எழுதிய கவிஞரை மட்டக்குளி அறநெறி மன்றம் 'கவிமாமணி' எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

மேலும் பல சமூக கலை இலக்கிய அமைப்புக்கள் 'கவிவள்ளல்', 'கவிச்சுடர்', 'கலாசோதி' ஆகிய சிறப்பு கௌரவங்களை வழங்கியுள்ளன.

'வலம்புரி கவிதா'(வகவம்) வட்டத்தில் இணைந்து இன்றுவரை பணியாற்றி வரும் கலா விஸ்வநாதன் வலம்புரி கவிதா வட்டத்தின் பிரசார செயலாளர், பொதுச்செயலாளர், தலைவர், தேசிய அமைப்பாளர் எனப் பல பதவிகளை வகித்து இன்றும் வலம்புரி கவிதா வட்டத்தின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினை வழங்கிவருகின்றார். 2013 இல் மீண்டும் புனர்நிர்வாகம் பெற்ற வலம்புரி கவிதா வட்டம் தனது ஆண்டு விழாவை 2015 இல் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடத்தியபோது கவிஞர் கலா விஸ்வநாதன் வகவத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

'கொழும்பு இலக்கிய வட்டம்' எனும் ஓர் அமைப்பை அமைத்து கலை இலக்கிய சந்திப்புகள் ஏற்பாடு செய்ததுடன் விமர்சன கருத்தரங்குகள், அஞ்சலி நிகழ்வுகள் நடத்தியதுடன் மேல்மாகாண சாகித்திய விழா நடைபெறுவதற்கும் உந்துசக்தியாக விளங்கியவர்.

மூன்று ஆண்டுகளாக 'கவின்' எனும் சஞ்சிகையை 'இது ஒரு சமூகத்தின் சஞ்சிகை' என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக வெளியிட்டு கலை இலக்கிய சமூக பிரமுகர்கள் பலரையும் கவின் சஞ்சிகையில் பதிவு செய்துள்ளார். இவரது ஆயிரக்கணக்கான கவிதைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன. 'குன்றம்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் 'முகம்', 'மலைக்கண்ணாடி' ஆகிய சஞ்சிகைகளின் பொறுப்பாசிரியராகவும் இருந்துள்ளார். கடந்த பத்து ஆண்டு காலமாக சித்தர் வழிபாட்டில் ஈடுபட்டு வரும் பிறவிக் கவிஞர் கலா விஸ்வநாதன் எழுதிய 'சித்தர்அமிர்தம்' என்னும் காவியம் தற்போது தமிழகத்தில் நல்வழிப் பதிப்பகத்தில் அச்சில் உள்ளது.

**எச்.எச்.விக்கிரமசிங்க ...**

# மாணவர்களின் நுண்ணறிவுத் திறனை விருத்தி செய்யும் செஸ் விளையாட்டு' பயிற்சி வகுப்பு

**அட்டாளைச்சேனையில் ஆரம்பம்**

மாணவர்களின் நுண்ணறிவுத் திறனை மேம்படுத்தும் பொருட்டு 'செஸ் விளையாட்டு' பயிற்சி வகுப்பு அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனையில் இரு தினங்களுக்கு முன்னர் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பகுதி மாணவர்கள் தங்களது நுண்ணறிவுத்திறனை விருத்தி செய்து கொள்ள இப்பயிற்சி வகுப்பு பெருதும் பயனளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.







நாட்டில் சுமார் இரு வருட காலமாக நிலவிய கொவிட்19 தொற்றுக்குப் பின்னர் மாணவர்களின் கல்விநிலை ஒருவிதமான தேக்க நிலைமையில் இருப்பதனால் அம்மாணவர்களை மிக வேகமாக நுண்ணறிவு உள்ளவர்களாக மாற்ற வேண்டிய தேவையுள்ளது. இதனை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அட்டாளைச்சேனை_08ஆம் பிரிவில் உடற்கல்வி ஆசிரியர் றபீக் நௌசாத் தலைமையில் 2022.04.09ஆம் திகதிசெஸ் விளையாட்டு' பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதற் கட்டமாக மட்டுப்படுத்தப்பட்ட மாணவர் தொகுதியைக் கொண்ட பயிற்சி வகுப்பாக மேற்படி செஸ் விளையாட்டுப் பயிற்சி வகுப்புஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றிருந்ததைக் காண முடிந்து. அட்டாளைச்சேனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள செஸ் விளையாட்டு பயிற்சி வகுப்பில் சப்ரகமுவ பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞானத்துறை விரிவுரையாளர் டப்ளியூ. நிஜாஸ் பயிற்சி ஆசிரியராக கடமையாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**றிசாத் ஏ. காதர் ...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# ஊடகவியலாளர் றாஸிக் நபாயிஸ் எழுதிய கட்டுரைகளின் நூல் மருதமுனையில் வெளியீடு

ஊடகவியலாளர் றாஸிக் நபாயிஸ் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பான 'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி' நூல் வெளியீடு மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தின் மர்ஹூம் ஆஸாத் காமில் நினைவரங்கில் நடைபெற்றது.

கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும், எழுத்தாளருமான கலாநிதி சத்தார் எம்.பிர்தௌஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கௌரவ அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் ஆகியோரும் கலந்து கொண்டனர்.





சிறப்பு அதிதியாக ஓய்வுநிலை ஆசிரியர் சட்டத்தரணி இஸ்மாயில் பி.மஆரிஃப், விஷேட அதிதிகளாக ஒய்வு நிலை அதிபர் ஏ.ஆர்.அப்துல் றாசிக், பிறை எப்.எம்.வானொலி பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், ஓய்வு நிலை நிருவாக உத்தியோகத்தர் கவிஞர் எம்.பி.அபுல் ஹஸன், அம்பாறை மாவட்ட சமூக சேவைத் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் எம்.பி.சம்சுதீன், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத் தலைவரும்,இலக்கிய விமர்சகருமான ஆசிரியர் ஜெஸ்மி எம்.மூஸா நூல் பற்றி விமர்சன உரையாற்றுகையில், "றாஸிக் நபாஸிஸ் 'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி' என்ற நூலினை வெளிக்கொணர்ந்திருப்பது பாராட்டத்தக்க விடயமாகும். மருதமுனையில் ஊடகத்துறை சார்ந்தோர் நூல்கள் பலவற்றை வெளியிட்டுள்ள போதிலும் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள் பலவற்றையும் தொகுத்தளித்த முதன்மை முயற்சியாக இதனைக் கொள்ள முடிகிறது. மொழி,கலாசாரம், சுகாதாரம்,இலத்திரனியல் ஊடகச் செல்வாக்கு மற்றும் சமூகவியல் சார்ந்த பிரச்சினைகளை உள்ளடக்கிய சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம், தொடங்கிய நேரத்தைத் திட்டமிட்டு வாழ்வை வெற்றி கொள்வோம் வரையிலான 23 கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன" என்றார்.

"சர்வதேச புகைத்தல் தினம், தேசிய மொழியாக்கப்பட்ட தாய்மொழி பொது இடங்களில் கொல்லப்படும் அவலம், உடல்உள ஆரோக்கியத்துக்கு அடித்தளம் உடற் பயிற்சிகள், குப்பைமேடுகள் புதிதாக உருவாவதைத் தடுப்போம், உளவளத்துணை அவசியமா?, கலாசாரங்களுக்கிடையில் சிறந்த நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு கலையைப் பயன்படுத்த முடியுமா?, மக்களுக்குப் பயனளிக்கும் தகவலறியும் உரிமைச் சட்டம், சுதந்திர இலங்கையின் சமாதான நீதிவான்களின் சேவைகளும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டியவைகளும் ஆகிய தலைப்புக்கள் இந்நூலில் அதிக கவனயீர்ப்பை பெறக் கூடியவைகளாகச் சொல்லலாம். புகைத்தலில் இருந்து விடுபடுவதற்கான ஆதாரபூர்வமான விடயங்களை சான்றுப்படுத்தி எழுதப்பட்டுள்ள கட்டுரையில் இலங்கையில் சமுர்த்தி உதவி பெறும் மக்களிடையே இப் பழக்கம் அதிகளவில் காணப்படுவதனால் வறுமை ஒழிப்பதில் பாரிய பின்னடைவுகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகிறது என்கின்ற விடயம் வித்தியசமான குறிப்பிட்டாளர்களை நோக்கியதாக அமைந்திருப்பது நோக்கத்தக்க விடயமாகும்.

நபாயிஸின் 'ஆரோக்கியமான சமூகத்தை நோக்கி' என்ற கட்டுரை நூல் வாசிப்புத் தாகமுள்ளவர்களுக்கு ஆறுதல் தரக் கூடிய படைப்பு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. உயர்தரக் கலைப்பரிவில் கற்கும் தமிழ்த் துறை மாணவர்களுக்கான கட்டுரைப் பகுதிக்கான தகவல்களை வழங்கக் கூடிய துறைசார்ந்த ஒத்துழைப்பு நூலாக இதனை கொள்ளலாம் என்பதே எமது கருத்தாகும்" என ஜெஸ்மி எம்.மூஸா மேலும் தெரிவித்தார்.

**பி.எம்.எம்.ஏ.காதர் ...**
(மருதமுனை தினகரன் நிருபர்)

## நாட்டின் நெருக்கடி....

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று மாலை நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றினார். பிரதமர் தனதுரையில் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என நாம் சகல கட்சிகளுக்கும் அழைப்புவிடுத்தோம். ஆனால் வரவில்லை. இந்த தருணத்தில் கட்சி குறித்து சிந்திப்பதைவிட நாட்டின் பொருளாதாரத்தை பலப்படுத்துவதே நம் அனைவரதும் பொறுப்பாகும்.

யார் பொறுப்பை ஏற்காவிடினும் ஆட்சியிலுள்ள கட்சி என்ற வகையில் நாம் அந்த இறுதி பொறுப்பை ஏற்க வேண்டும். நாம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வினை பெற்றுத் தருவோம்.

நாம் 30 ஆண்டுகால பயங்கரவாத அச்சுறுத்தலை இல்லாதொழித்து, இந்நாட்டு மக்களின் மனதில் இருந்த பயத்தை அகற்றியது, இதுபோன்ற துன்பத்தில் மக்களை தள்ளுவதற்காக அல்ல. மக்களாகிய உங்களை வரிசையில் நிறுத்துவதற்காக நாம் வீதிகளையும், அதிவேக நெடுஞ்சாலைகளையும் அமைக்கவில்லை.

இந்த நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கான அனைத்து முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோம்.

பொதுமக்களுடன் இணைந்து தைரியமாக பணியாற்றி, இலங்கையை கடனற்ற நாடாக மாற்றுவதற்காகவே வெளிநாடுகளிலிருந்து கடன்களை பெற்றுக்கொள்வதை இந்த அரசாங்கம் மட்டுப்படுத்தியது.

மிகவும் இக்கட்டான சூழ்நிலைகளிலும் வெளிநாடுகளிலிருந்து உதவிகளை பெற்றுக்கொள்ளும் போது, நாட்டின் சுயாதீனத்தை பாதுகாத்து உதவிகளை பெற்றுக்கொள்வதற்கே நாம் எப்போதும் முயற்சித்தோம். அதனால் தான், பாரிய அளவு வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் இருந்த போதும் பொதுமக்களின் ஆணைக்கு மதிப்பு கொடுத்து அவற்றை நாம் மேற்கொள்ளாமல் இருந்தோம்.

இந்நாட்டின் ஜனநாயக ஆட்சி முறையை சிதைக்காத வகையிலான தீர்மானத்தை மேற்கொள்வதே மக்களின் ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்த எமது பொறுப்பாகும். அந்த நோக்கத்திற்காகவே நாம் தொடர்ந்தும் சேவையாற்றி கொண்டு இருக்கின்றோம். கிடைக்காமல் போவதும், கைவிடுவதும் கூட அரசியலில் எமக்கு மிகவும் பழக்கப்பட்டதொரு விடயமாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களும் வேண்டாம் என்ற மக்களின் கோஷம் எமக்கும் கேட்கின்றது. அதனூடாக கூறவருவது, இந்த ஜனநாயக முறையை மறுப்பதாயின் அதன் பயங்கரமான வரலாற்றை நோக்கி புரிந்துகொள்ள வேண்டும்.

இன்று நாம் முகங்கொடுத்துள்ள நெருக்கடியை வெற்றி கொள்ள பாரிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

## எரிபொருளை சிக்கனமாக...

இதேவேளை, தேவையற்ற வகையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கூடி நிற்க வேண்டாம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் கொள்கலன்களில் எரிபொருள் விநியோகிப்பது பற்றி எதிர்காலத்தில் ஒழுங்கு விதி ஒன்று ஏற்படுத்தப்படும் என்றும், அவர் மேலும் தெரிவித்தார். வீடு விலும் வேறு இடங்களிலும் சட்டவிரோதமாக சேமித்து வைக்கப்படும் டீசல், பெற்றோல் போன்ற எரிபொருட்களால் பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. விறகுகளிலுள்ள மண்ணெண்ணெய் மற்றும் டீசல் தாங்கிகளுடன் கலக்க கூடிய வாய்ப்பு இருப்பதாக, எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய நிலைமை என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## அரசியல் கட்சிகளின்...

கூட்டத்தின் போதே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. பொருளாதார, நிதி நெருக்கடி மற்றும் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் மக்கள் போராட்டங்கள் குறித்து தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆராயப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை குறித்து பொருளாதார நிபுணர்கள் எதிர்க்கட்சிகளின் பாராளுமன்ற குழுவிற்கு விளக்கமளித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் பாராளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் கட்சிகளுடன் எதிர்க்கட்சிகள் மேலதிக கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

## அடுத்த சில நாட்களில் SLPP...

பெற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத்தை பலவீனப்படுத்த அரசாங்கத்திற்குள் ஒரு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட சூழ்ச்சி தற்காலிகமாகவே வெற்றி பெற்றுள்ளது. வெகுவிரைவில் பதிலளிப்போம்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை மறுசீரமைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.அரசியல் நெருக்கடிக்கு தீர்வு கண்டவுடன் அரச தலைவர்களுடன் கலந்தாலோசித்து முக்கிய பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவை கட்சியின் முக்கிய பொறுப்பினை ஏற்குமாறு உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளோம்.

அரச தலைவர்களின் தீர்மானத்தை தொடர்ந்து அவர் சாதகமான தீர்மானத்தை முன்னெடுப்பார் என எதிர்பார்க்கிறோம்.

பொதுஜன பெரமுன செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் இருந்து விலகியுள்ளமை பிரதான குறைபாடாக இனங்காணப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் நிச்சயம் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்பளித்து செயற்படும். ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசாங்கத்தை மக்கள் நிச்சயம் ஆதரிப்பார்கள்.

தவறான சித்தரிப்புக்களே தற்போதைய எதிர்ப்பிற்கான காரணமாக அமைந்துள்ளது என்றார்.

## 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு...

பிரதேசங்களில் உள்ள மக்கள் தங்கள் பாதுகாப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதேவேளை சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது. நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் 8 மாவட்டங்கள் உள்ளடங்கிய பிரதேசங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க மண்சரிவு முன்னெச்சரிக்கை பிரதேசமாக கொழும்பு, களுத்துறை, கண்டி, பதுளை, கேகாலை, குருணாகல், மாத்தளை மற்றும் நுவரெலியா மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. எவ்வாறெனினும் இது மண்சரிவு எச்சரிக்கை தொடர்பான முதலாம் கட்ட அறிவித்தல் என்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.(ஸ)

## பாரவூர்தி- மோ. சைக்கிள்...

கொண்டிருந்தவேளை பின்னால் சென்ற பாரவூர்தி மோதியதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த சிறுவன், வீதியில் விழுந்து பாரவூர்தியின் சக்கரத்திற்குள் சிக்கி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளான்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார், சம்பவ இடத்திற்கு விரைந்து , பாரவூர்தி சாரதியை கைது செய்ததுடன், பாரவூர்தியையும் பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து சென்று மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## பாகிஸ்தானின் புதிய பிரதமராக...

நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் பதவியிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். புதிய பிரதமர் பதவிக்கு இம்ரான் கானின் பி.ரி.ஐ. கட்சியைச் சேர்ந்த முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷியும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கட்சியைச் சேர்ந்த முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஷெபாஸ் ஷெரீப்பும் போட்டியிட்டனர்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை இது தொடர்பான வாக்கெடுப்பு நடைபெற்றிருந்த நிலையில் பிரிஐ கட்சியினர் கூட்டாக ராஜினாமா செய்வதாக அறிவித்தனர். அதன்பின் அவர்கள் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேறினர், பின்னர் ஷெபாஸ் ஷெரீப்புக்கு ஆதரவாக 174 எம்.பிக்கள் வாக்களித்தனர்.

## நீர்மின் உற்பத்தி...

சமனலவெவ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் சிறிதளவு அதிகரித்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் வரட்சியான காலநிலை நீடித்ததால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. இதனால் நீர் மின்உற்பத்தி தடைப்பட்டது. மின்வெட்டுக்கு இதுவும் காரணமாக அமைந்த நிலையில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழைவீழ்ச்சி பதிவாகி வருகிறது. இருந்தாலும் இது போதுமானதாக இல்லை என மின்சார சபை அறிவித்துள்ளது. தற்போதைய மழையுடன் கூடிய காலநிலை புத்தாண்டு வரை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.(பா)

## எரிபொருள் நிரப்பிய ரயிலுடன்...

வைக்கப்பட்டிருந்த பயணிகள் ரயில் ஒன்று சாரதியின்றி பிரேக் பழுதானதன் காரணமாக பயணித்து சென்று, புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் ரயிலுடன் மோதியுள்ளது.

பின்னர், ரம்புக்கனை ரயில் நிலையத்தில் உள்ள கட்டிடம் ஒன்றின் மீதும் எரிபொருள் புகையிரதம் மோதியுள்ளது.

இச்சம்பவத்தினால் எரிபொருள் ரயிலில் இருந்து பாரியளவான டீசல் வீணாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார். பேராதனைக்குக் கொண்டு செல்வதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டீசல் தாங்கியே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

## புத்தாண்டின் பின்னரேயே...

வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கள இந்து புத்தாண்டுக்குப் பின்னர் புதிய அமைச்சரவை பதவிப்பிரமாணம் இடம்பெறும் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை தொடர்ந்து பிரதமர் தவிர்ந்த அமைச்சரவை அண்மையில் ராஜினாமா செய்தது. பின்னர் 4 அமைச்சர்கள் மாத்திரம் நியமிக்கப்பட்டார்கள்.

புதிய அமைச்சர்கள் நேற்று பதவி ஏற்க இருந்த நிலையில் அது பின் போடப்பட்டுள்ளதாக அறியவருகிறது.

## அதிக விலைக்கு Gas ஐ...

விற்பனை செய்யும் தரப்பினருக்கு எதிராக 1311 என்ற விசேட முறைப்பாட்டு இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடு செய்யுமாறு லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த நாட்களை காட்டிலும் தற்போது லிட்ரோ நிறுவனம் நாளாந்தம் 1 இலட்சத்து 10 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு விநியோகிக்கிறது என லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க குறிப்பிட்டுள்ளார்.

சமையல் எரிவாயு சிலிண்டர் விநியோகத்தில் காணப்பட்ட சிக்கல் நிலைமைக்கு உறுதியான தீர்வு காண உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் 3,900 மெற்றிக்தொன் எரிவாயு கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளதுடன், எரிவாயு விநியோக நடவடிக்கைகள் தற்போது துரிதமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சமையல் எரிவாயுவின் விற்பனை விலை அதிகரிக்கப்படமாட்டாது. நிர்ணய விலைக்கு மேலதிக விலைக்கு சிலிண்டர்களை விற்பனை செய்யும் தரப்பினருக்கு எதிராக பொது மக்கள் பொலிஸில் முறையிடலாம் அல்லது 1311 என்ற விசேட முறைப்பாட்டு இலக்கத்திற்கு அழைத்து முறைப்பாடளிக்கலாம் என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.

## இந்தியாவில் இருந்து 40 000 மெ. தொன்...

அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் நாடளாவிய ரீதியில் உள்ள சதொச விற்பனை நிலையங்கள் மூலம் அதனை குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் சந்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்டுள்ள மேற்படி அரிசியில் நாடடரிசி மற்றும் பச்சையரிசி ஒரு கிலோவை 110 ரூபாவிற்கும் சம்பா அரிசியை 130 ரூபா வுக்கும் விற்பனை செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேவேளை பண்டிகை காலங்களில் மக்களுக்கு தட்டுப்பாடின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் அத்தியாவசியப் பொருள் விநியோகம் நடைபெற்று வருவதாக அத்தியாவசியப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரட்ன அது தொடர்பில் தெரிவிக்கையில்:

பால் மாவுக்கு மாத்திரம் சிறு தட்டுப்பாடு நிலவுவதாகவும் எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைவடையலாம் என எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## தவக்கால சிந்தனை



### காட்டிக் கொடுப்பும் கலக்கமும்

தவக்காலத்தின் இறுதி செவ்வாய்க்கிழமை இன்று. பரிசுத்த வாரம் புதிய அனுபவங்கள் மற்றும் படிப்பினைகளுடன் நம்மை வழி நடத்திச் செல்கின்றது. இயேசு தமது சீடர்களுக்கு அன்பை வெளிப்படுத்திய பெரிய வியாழன் மற்றும் நம் ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த புனித வெள்ளி நிகழ்வுகளையும் அனுஷ்டிப்பதற்கு நாம் தயாராகவுள்ளோம்.

இன்றைய நற்செய்தி வாசகமானது யூதாஸ் தம்மை காட்டிக் கொடுக்கப் போவதை அறிவிக்கும் இயேசு யூதாசை எண்ணி உள்ளம் கலங்குவதை தெரிவிக்கின்றது.

கனிவான இதயம் கொண்ட இயேசு தெய்வீக அன்பால் தன் சீடர் யூதாஸை அன்பு செய்தார். யூதாஸ் தடம் மாறி செல்வதை உணர்ந்த இயேசு உள்ளம் கலங்கினார்.இந்த கலக்கம் துரோகத்தால் ஏற்பட்டதல்ல மாறாக தான் அன்பு செய்த ஒரு ஆன்மாவை இழப்பதால் ஏற்பட்டது.

இறைவன் அனைவருக்குமே சுதந்திரத்தை வழங்கியுள்ளார். இயேசுவைப் பின்பற்றி மீட்பை பெற்றுக் கொள்ளவும் அதனை வேண்டாம் என்று உதறித் தள்ளவும் எமக்கு சுதந்திரம் உள்ளது.

நாம் எதனைத் தேர்ந்தெடுக்கப் போகிறோம் என்பதை இந்தத் தவக்காலத்தின் இறுதி நாட்களில். சிந்திப்போம்.

தம் சீடர்களுடன் பந்தியமர்ந்த இயேசு உள்ளம் கலங்கியவராய் உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக் கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்று திட்டவட்டமாக கூறினார். யாரைப்பற்றி அவர் இப்படிக் கூறினார் என்று தெரியாமல் சீடர்கள் குழப்பமுற்றனர். என்பதைஇன்றைய யோவான் நற்செய்தி நமக்கு கூறுகிறது. அதே போன்று பேதுரு இயேசுவிடம் நான் உமக்காக என் உயிரையும் கொடுப்பேன் எனக் கூறுவதையும் அதற்கு பதிலளித்த இயேசு எனக்காக உயிரையும் கொடுப்பாயோ? நீ மும்முறை என்னை மறுதலிக்குமுன் சேவல் கூவாது என உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன் என்றார். என்பதையும் அந்த நற்செய்தி தெரிவிக்கின்றது.

இயேசு தம் சீடர்களிடம் பிள்ளைகளே! இன்னும் சிறிது காலமே உங்களோடு இருப்பேன். நீங்கள் என்னை தேடுவீர்கள் ஆனால் நான் போகும் இடத்திற்கு உங்களால் வர இயலாது என்றார். அதற்கு பதில் சொன்ன போதே பேதுரு இயேசுவைப் பார்த்து இவ்வாறு தெரிவித்துள்ளார்.இந்த தவக்காலம் நமக்கு புதிய வழிகளை காட்டட்டும் நாம் அதில் விசுவாசம் மற்றும் நம்பிக்கையுடன் பயணிப்போம்.

இயேசுவைப் போன்று பிறரையும் நாம் அன்பு செய்ய எம் எதிரிகளையும் அன்பு செய்ய கற்றுக்கொள்வோம்.இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது அதைத்தான்.

எல்.செல்வா...

## A4 ரக காகித உற்பத்தி...

காகித உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்.

இதன்மூலம், காகிதங்களுக்கான இறக்குமதி செலவினத்தை கட்டுப்படுத்தி, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்க முடியும் என தேசிய கடதாசி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஜயம்பதி பண்டார ஹூன்கந்த மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரார்த்தனை செய்ய... (03ஆம் பக்கத் தொடர்)

இயல்பு வாழ்க்கை, பிறக்கும் நற்செய்கை என்னும் பொருளுடைய சுபகிருது என்னும் நாமத்தினை தாங்கிய வருடம் ஏற்படுத்த வேண்டும் என அனைவரும் இணைந்து அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து வேண்டுவோம். நிச்சயமாக இறைவன் அனைவருக்கும் திருவருள் புரிவான். அனைவருக்கும் திருவருள் பெருவருளாக கிடைக்கட்டும். அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் பெற்று வாழ்க என இணைந்து பிரார்த்தனை செய்வோம். இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் அழைப்பு விடுத்துள்ளதாக குருமார் அமைப்பின் செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் தெரிவித்துள்ளார்.

## இடைக்கால அரசு...

இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கான பிரேரணைகள் சுயாதீனக் குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், ஜனாதிபதி தரப்பில் சில திருத்தங்கள் முன்வைக்கப்பட்டதாக அறியவருகிறது.

இன்று (12) மீண்டும் பேச்சுவார்த்தை நடத்த இரு தரப்பினரும் உடன்பட்டுள்ளனர். ஜனாதிபதியின் சார்பில் ஜனாதிபதி மாத்திரம் கலந்துரையாடலில் கலந்துகொண்டதோடு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா, தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவங்ச, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் குழு சார்பில் அனுர பிரியதர்ஷன யாப்பா, சுசில் பிரேமஜயந்த, விஜயதாச ராஜபக்ஷ, டிரான் அலஸ், கெவிந்து குமாரதுங்க, அசங்க நவரத்ன, வண.அத்துரலியே ரத்ன தேரர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டார்கள்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக சர்வகட்சி கொண்ட இடைக்கால அரசாங்கத்தை அமைக்குமாறு சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தது.

41 சுயாதீன உறுப்பினர்களின் குழுவினர் நேற்று முன்தினம் முன்னாள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடன் கலந்துரையாடியிருந்தனர். (பா)

## புது வருடத்தை முன்னிட்டு... 02ஆம் பக்கத் தொடர்

கோட்டையிலிருந்து பயணிகளுக்காக பல மேலதிக ரயில் சேவைகளை அறிமுகப்படுத்த ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது சேவையில் ஈடுபடும் புகையிரதங்களில் மேலதிக பெட்டிகளை இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார். புத்தாண்டு விடுமுறைக்காக வெளியூர்களுக்குச் செல்லும் பயணிகளுக்காக விசேட போக்குவரத்துச் சேவைகள் தொடர்ந்தும் இயங்கி வருகின்றன.

## அனுமதிப்பத்திரமின்றி... 02ஆம் பக்கத் தொடர்

மதிக்கத்தக்கவொருவர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அவரிடமிருந்து 75 லீற்றர் பெற்றோலும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் 19 ஆம் திகதி ருவன்வெல்ல நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருவதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## நிறைவேற்று ஜனாதிபதி...

வேண்டும் என்ற ஜனநாயகத்துக்கு முரணான சட்டத்தை கொண்டு வந்தவர்களால் ஏன் நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முடியவில்லை?

ஆகக்குறைந்தது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கான பிரேரணை ஒன்றையாவது பாராளுமன்றத்தில் முன் வைத்திருக்கலாம். அவற்றை செய்யாது இப்போது கண்கெட்டபின் ஞானம் வந்தது போன்று சஜித் பிரேமதாச பேசுகிறார்.

இன்றைய நெருக்கடியை தீர்ப்பதற்கான ஆற்றல் இருக்குமாயின் சஜித் பிரேமதாச கட்சியினர் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று அரசை பாரமெடுத்து நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பிக் காட்டினால், டொலர், டீசல் தட்டுப்பாட்டை நீக்கி காட்டினால் நிறைவேற்று அதிகாரத்தை ஒழிக்கவும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒத்துழைப்பு வழங்கும் நிலை வரும்.

## அத்தியாவசிய சேவைகளுக்கு:... 02ஆம் பக்கத் தொடர்

ஒத்துழைப்பைப் பெற்றுத் தருமாறு எரிசக்தி அமைச்சு உள்நாட்டலுவல்கள் அமைச்சிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

அதற்கிணங்க குறித்த நபர்கள் அத்தியாவசிய தேவைகளுக்காக எரிபொருளைப் பெற்றுக் கொள்கின்றார்களா என்பதை கண்டறியும் வகையில் அந்தப் பிரதேச அரச அதிகாரிகள் ஊடாக தேடிப் பார்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். அவ்வாறு கண்காணிக்கப்பட்டு அத்தியாவசிய சேவைகளுக்காக எரிபொருள் பெற்றுக் கொள்பவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மிரிஹான சம்பவம் தொடர்பில்...

அங்கீகரிக்கப்பட்ட நபர்களைத் தவிர எந்த ஒரு வெளி நபரும் தேசிய பாதுகாப்பு சபை கூட்டங்களுக்கு ஒரு போதும் அனுமதிப்பதில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஊடக மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மேலும் குறிப்பிடுகையில்:

தேசிய பாதுகாப்பு சபை மற்றும் அதன் முக்கியத்துவத்தை விளக்கிய பாதுகாப்புச் செயலாளர், இந்தக் கூட்டங்களுக்கு அங்கீகரிக்கப்படாத எந்தவொரு நபர்கள் கலந்துகொள்ளும் வழிமுறை இல்லை என்பதையும் வலியுறுத்தினார். தலைவர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மற்றும் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், திறைசேரியின் செயலாளர், பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் சட்டப்பூர்வ உறுப்பினர்களாக பங்கேற்கும் அதேசமயம், தேசிய புலனாய்வு பிரதானி, அரச புலனாய்வுச் சேவை பணிப்பாளர் நாயகம், இராணுவப் புலனாய்வு பணிப்பாளர் நாயகம், குற்றப்புலனாய்வுத் திணைக்கள பிரதிப் பொலிஸ் மா அதிபர், பங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவு பணிப்பாளர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதி ஆகியோர் நியமன உறுப்பினர்களாக தேசிய பாதுகாப்பு சபை கூட்டங்களில் பங்கு கொள்கின்றனர்.

நாட்டின் தேசிய பாதுகாப்புடன் தொடர்பான அனைத்து விதமான முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளும் பொறுப்பு ஜனாதிபதியை சார்ந்தது என்பதால், ஜனாதிபதியின் செயலகத்தால் இந்த கூட்டம் நடத்தப்படுகிறது.

அதிமேதகு கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், தேசிய பாதுகாப்பு சபை கூட்டங்களுக்கு அங்கீகரிக்கப்படாத எந்தவொரு நபர் அழைக்கப்படவோ/ அனுமதிக்கப்படவோ இல்லை.

தேசிய பாதுகாப்புக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் விடயங்கள் எதுவும் இருக்கும் சந்தர்ப்பத்தில் மாத்திரம், சம்பந்தப்பட்ட குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் அழைக்கப்பட்டு தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்திற்கு முன்னர் குறித்த விவகாரம் கையாளப்படும்.

## காபந்து அரசு அமைத்தால்...

அதிகாரங்களை பிடுங்கும் 21 ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்கு விடுவோம்.

இதற்கான வாக்கெடுப்பில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சென்று பாராளுமன்ற உறுப்பினர்களை வாக்களிக்க கோருவோம். 225 எம்பிக்களில் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் எம்பிக்கள் யார், மனச்சாட்சியை மறந்துவிட்டு வாக்களிப்பவர்கள் யார் என்பதை அவர்களுக்கு வாக்களித்த மக்களும், வெளியே போராடும் மக்களும் அறிந்துகொள்ளலாம்.

என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தனது டுவிட்டர் தளத்தில் கூறியுள்ளார்.

இது தொடர்பில் மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது, நம்பிக்கை இல்லா பிரேரணையை விட இதுதான் ஜனாதிபதியை நெருக்கடிக்கு உள்ளாக்கும்.

ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப கோரும் கோசத்தின் அடிப்படை இதுதான். எமது கட்சி உட்பட, இந் நாட்டில் எதிரணி அரசியல் கட்சிகள் கோருவது இதைதான். சமூக சிவில் அமைப்புகள் கோருவது இதைத்தான். வெளியே தெருக்களில் போராடும் மக்கள் கோருவதும் இதைத்தான். நம்பிக்கை இல்லா பிரேரணையையிலும் கையெழுத்திடுவோம். அதையும் கொண்டு வருவோம். ஆனால், அதைவிட 21 ஆவது திருத்தத்தை பிரதானமாக கொண்டு வருவோம்.

நம்பிக்கை இல்லா பிரேரணை என்பது ஜனாதிபதியின் அரசாங்கத்துக்கு எதிரானது. அது வெற்றி பெற்றால், புதிய அமைச்சரவை இந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கீழேயே அமைய வேண்டும். அதை செய்ய முடியாது. அது நடைமுறை சாத்தியமற்றது.

ஏனெனில், ஜனாதிபதியின் சொந்த பொதுஜன முன்னணி கட்சி அமைச்சரவையே இவருக்கு கீழே செயற்பட முடியாவிட்டால், எதிரணியும் பங்கு பற்றும் காபந்து அரசாங்கம் எப்படி இவருக்கு கீழே செயற்பட முடியும்? அப்படியானால், அது “காபந்து” அரசாங்கமாக இருக்காது, “கால்பந்து” அரசாங்கமாகவே இருக்கும் என தெரிவித்துள்ளார்.

# சர்வதேச செய்திகள்

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தல்

## இரண்டாம் சுற்றில் மக்ரோனுடன் மரின் லே பென் மீண்டும் போட்டி



பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலின் முதல் சுற்றில் பதவியில் உள்ள ஜனாதிபதி எம்மானுவேல் மக்ரோன் வெற்றிபெற்றுள்ளதோடு, ஜனாதிபதி தேர்தலின் இரண்டாவது சுற்றில் தீவிர வலதுசாரியான மரின் லே பென் அவருடன் மீண்டும் ஒருமுறை போட்டியிடவுள்ளார்.

'தவறிழைத்துவிடாதீர்கள் எதுவும் இன்னும் முடிவு செய்யப்படவில்லை' என்று கொண்டாட்டத்தில் ஈடுபடும் தமது ஆதரவாளரிடம் மன்ரோன் கூறினார்.

ஞாயிற்றுக்கிழமை நடந்த தேர்தலில் மக்ரோன் முன்னிலை பெற்றிருந்தபோதும் முடிவை தீர்மானிக்கும் இரண்டாவது சுற்று தேர்தலில் கடும் போட்டி இருக்கும் என்று கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

'பிரான்ஸில் மீண்டும் ஒழுங்கை கொண்டுவர' மக்ரோனுக்கு வாக்களிக்காத அனைவரும் தம்முடன் இணையும்படி லே பென் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்தத் தேர்தலில் 97 வீதமான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் முதல் சுற்றிலேயே ஜனாதிபதியாக தேர்வு பெறுவதற்கு தேவையான 50 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளை எந்த வேட்பாளரும் பெறவில்லை.

இதில் மக்ரோன் 27.6 வீதமான வாக்குகளையும் லே பென் 26.41 வீதமான வாக்குகளையும் பெற்றதோடு ஜீன் லுக் மெலென்சோன் 21.95 வீத வாக்குகளை வென்று மூன்றாவது இடத்திற்கு வந்தார்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரான தேர்தலை விடவும் அதிக வாக்குகளை பெற்றிருக்கும் மெலென்சோன் ஆட்சியை நிர்ணயிக்கும் சக்தியாக மாறியிருப்பதாக கூறப்படுகிறது. இந்தத் தேர்தலில் பன்னிரண்டு வேட்பாளர்கள் போட்டியிட்டபோதும் மூவர் மாத்திரமே 10 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளை வென்றுள்ளனர்.

இந்நிலையில் முதல் சுற்றில் முதல் இரு இடங்களையும் பெற்ற மக்ரோன் மற்றும் லே பென் இரண்டாவது சுற்று தேர்தலுக்கான பிரசாரத்தை தீவிரப்படுத்த திட்டமிட்டுள்ளனர். 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் இந்த இருவருமே இரண்டாவது சுற்றில் போட்டியிட்டனர்.

அதில் 44 வயதான மக்ரோன் 66.10 வீத வாக்குகளை பெற்று அமோக வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் ஜனாதிபதி தேர்தலின் இரண்டாம் சுற்று வாக்குப்பதிவு எதிர்வரும் ஏப்ரல் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## கிழக்கு உக்ரைனில் முழுவீச்சில் தாக்குதலுக்கு தயாராகும் ரஷ்யா



கிழக்கு உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் அடுத்த சில நாட்களில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் உக்ரைனிய படைகள் அதற்கு தயாராகி வருகின்றன.

இந்தப் போரில் அடுத்த வாரம் தீர்க்கமானதாக இருக்கும் என்று உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு உரையாற்றியபோது எச்சரிக்கை விடுத்தார். 'எமது நாட்டின் கிழக்கில் இன்னும் பெரிய படை நடவடிக்கைக்கு ரஷ்ய துடுப்புகள் தயாராகின்றன' என்று அவர் குறிப்பிட்டார்.

அடுத்தகட்ட போரின் தாக்குதல் முழுவீச்சில் இடம்பெறலாம் என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதன் விளைவு இந்த மோதலின் போக்கை தீர்மானிக்கும் ஒன்றாக இருக்கும் என்று நம்பப்படுகிறது. இதுவரை நடந்த போரில் நகரங்கள் தரைமட்டமாக்கப்பட்டு, ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டிருப்பதோடு இதனால் ரஷ்யா பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தலைநகர் கியேவை சூழவுள்ள பகுதிகளில் இருந்து பின்வாங்கிய ரஷ்யப் படை கிழக்கில் தமது கட்டுப்பாட்டை விரிவுபடுத்துவதற்கு திட்டமிட்டு வருவதாக கூறப்படுகிறது. 2014 தொடக்கம் கிழக்கு டொன்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்ய ஆதரவு பிரிவினைவாதிகள் உக்ரைனுடன் சண்டையிட்டு வருவதோடு, அங்கு சில பகுதிகளில் சுதந்திர அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளன.

கிழக்கு உக்ரைனில் நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரான கார்கிவ் தொடக்கம் தெற்கில் கெர்சன் வரை அரிவாள் வடிவ வளைவு ஒன்றை இலக்கு வைத்தே ரஷ்யா தாக்குதல்களை தீவிரப்படுத்தி வருவதாக மேற்கத்திய இராணுவ ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.


போரின் ஆரம்பத்தில் பரந்த அளவான நிலப்பகுதியில் தாக்குதல்களை நடத்திய நிலையில் குறுகிய பகுதியை இலக்குவைத்து நடத்தும் தாக்குதல்கள் ரஷ்யாவுக்கு உதவும் என்று கூறப்படுகிறது.

ரஷ்யா கடந்த ஞாயிற்றுகிழமை அரச கட்டுப்பாட்டில் இருக்கும் கார்கிவ் நகர் மீது பீரங்கித் தாக்குதல்களை நடத்தியதோடு, உக்ரைனிய அரணை முறியடிக்கும் முயற்சியாக தென் கிழக்கில் இசியும் நோக்கி மேலதிக துருப்புகளை அனுப்பி இருப்பதாக உக்ரைனிய இராணுவ கட்டளையகம் குறிப்பிட்டுள்ளது.

மரியுபோல் நகர் மீது ரஷ்யா தனது முற்றுகையை தொடர்ந்து நீடிப்பதோடு இங்கு கடந்த ஒன்றரை மாதங்களால் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

## பலூசிஸ்தான் உள்ளூராட்சித் தேர்தலை பிற்போடவும்

### தேர்தல் ஆணைக்குழுவிடம் முஸ்லிம் லீக் கோரிக்கை



எதிர்வரும் மே மாதம் 29ம் திகதி பலூசிஸ்தானில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை பின்போடுமாறு பாக். எதிர்க்கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கின் தலைவர் ஷெபாஸ் ஷரீப் அந்நாட்டு தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழல் காரணமாக அனைத்துக் கட்சிகளும் இஸ்லாமாபாத்தில் இருப்பதால் பலுசிஸ்தானில் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளது என இவர் காரணம் காட்டியுள்ளார்.

இம் மாகாணத்தின் குவேட்டா மற்றும் லாஸ்பெலா மாவட்டங்களில் தொகுதி எல்லைகள் வரையறுக்கப்பட்டதால் தேர்தல் நடைபெறாது என ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்த நிலையில் மாகாணத் தேர்தல் ஒத்துவைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.நீதிமன்ற உத்தரவின் பேரில் கலைக்கப்பட்ட பாராளுமன்றம் மீளவும் கூட்டப்பட்டு இம்ரானுக்கு எதிரான குற்றப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதையடுத்து அவர் பதவி நீக்கப்பட்டார். அரசியல் கொந்தளிப்பு நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாலேயே இம்மாகாண தேர்தல் தள்ளிப்போடப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முஸ்லிம் லீக் முன்வைத்துள்ளது.

## ரஷ்ய எண்ணெய் கொள்வனவு குறித்து அமெரிக்கா விளக்கம்



ரஷ்யா மீது அமெரிக்கா விதித்திருக்கும் தடைகள் ஏனைய நாடுகளுக்கும் பரிசீலிக்கப்படலாம் என்ற செய்தியை வெள்ளை மாளிகை நிராகரித்துள்ளது. ரஷ்ய எண்ணெய்யை இறக்குமதி செய்வது ஒவ்வொரு நாட்டினதும் தனிப்பட்ட முடிவு என்று அது குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச பொருளாதாரத்திற்கான பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தலீப் சிங் தனது இந்திய விஜயத்தின்போது, ரஷ்ய எண்ணெய்யை வாங்குவது பற்றி எச்சரிக்கை விடுத்த நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

வெள்ளை மாளிகை ஊடகச் செயலாளர் ஜேன் சக்கி அண்மையில் வெளியிட்ட ஊடக அறிவிப்பில், இந்தியா தனது மொத்த வலு சக்தியில் 1 தொடக்கம் 2 வீதமே ரஷ்ய வலுசக்தியை இறக்குமதி செய்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

'தமது இறக்குமதியில் 1 தொடக்கம் 2 வீதமான ரஷ்ய எண்ணெய்யை இறக்குமதி செய்வதை தீர்மானிப்பது இந்தியா உட்பட, ஒவ்வொரு தனிப்பட்ட நாடுகளினதும் முடிவு. அவர்களின் இறக்குமதியில் சுமார் 10 வீதம் அமெரிக்காவில் இருந்தே மேற்கொள்ளப்படுகிறது' என்று சக்கி தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் கூட்டணி நாடுகளின் தடைகளை அடுத்து இந்தியாவுக்கு சலுகை விலையில் மசகு எண்ணெய் மற்றும் ஏனைய பொருட்களை வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது.

## மோசமான நிலையில் பாக். மனித உரிமைகள்



பாகிஸ்தானில் மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்படுவதாகவும் புதிய தேர்தலின் பின்னர் பதவிக்கு வரக்கூடிய கட்சியும் பிரதமரும் மனித உரிமைகள் விடயத்தில் இம்ரான் கான் அரசைப் போலவும் அல்லது அதைவிட மோசமாக நடந்து கொள்ளவே செய்வார் என்றும் பாகிஸ்தானின் எதிர்கால மனித உரிமைகள் செயற்பாடுகள் தொடர்பாக நடத்தப்பட்ட நிகர்நிலை கருத்துப் பரிமாறல் ஒன்றில் கலந்து கொண்டோர் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் ஜி. எஸ். பி. சலுகைக்கு உட்பட்ட நாடாக விளங்குவதாகவும் அவ்வாறு இச்சலுகைக்கு உட்பட வேண்டுமானால் மனித உரிமைகளை காப்பாற்றுவோம் என்பது உட்பட 27 சர்வதேச உடன்படிக்கைகளில் கையெழுத்திட வேண்டியது அவசியம் என்பதை சுட்டிக் காட்டியுள்ள உலகின் மதச் சுதந்திரம் என்ற பத்திரிகை ஆசிரியரான மர்ஸீலா சைமன்ஸ்கி, பாகிஸ்தானில் மனித உரிமைகள் தாராளமாக மீறப்படுவதாகக் கூறினார். "மனித உரிமைகள் முழுமையாக அந்நாட்டில் மீறப்பட்டு வருகின்ற போதிலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் அதைப் பொருட்டாகக் கொள்வதில்லை. ஜி. எஸ். பி. உடன்படிக்கையின் கீழ் உள்ள நிபந்தனைகள் முழுமையாக நிறைவேற்படுகிறதா என்பதை கண்காணிக்கும் முகவர்கள் இதைக் கவனிப்பதில்லை என்று ஐரோப்பிய ஒன்றியத்தின் மீது குற்றச்சாட்டை இவர் முன்வைத்தார்.


திகதி 10.04.2022 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4733
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.9,331,320.00
ஆங்கில எழுத்து W வெற்றி இலக்கங்கள் 2 5 3 2 5 1
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.23,423,883.00

ஜாதிக சம்பத
அச்சிடப்பட்ட திகதி 10.04.2022
சீட்டிழுப்பு இலக்கம் 1235
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,805,060.00
வெற்றி இலக்கினம் சிம்மம் வெற்றி இலக்கங்கள் 4 1 9 2 4 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,957,394.00

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0042
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,845,720.00
இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 04 09 11 46
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,692,342.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம்: 763
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,458,900.00
வெற்றி இலக்கினம் R வெற்றி இலக்கங்கள் 03 05 35 41
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 107,155,412.00

கோடி 23+ Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1081
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,103,240.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.246,726,618.00
D 14 12 36 45 46
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



SINCERITY & ETHICAL WORK PRACTICES ARE THE CORE OF ASIA ASSET FINANCE

Asia Asset Finance PLC, a public quoted finance company is a subsidiary of Muthoot Finance Ltd. Asia Asset Finance PLC is a PLC is a licensed financial institution regulated by the Central Bank of Sri lanka and has been in the financial service industry for over 50 year.

We provide professional assistance to our customers by understanding their needs and putting them at the center of everthing. Our expertise and experience is being provided in the fileds of; accepting public deposits, providing finance leasing, hire purchase, gold loan and asset backed finance purchase for both individuals and corporations.

We have over the years built a strong loyalty base through our customer oriented service. To enhance this quality further and provide an excellent service we have incorporated the Finance Business Act Direction No.1 of 2018 Financial Customer Protection Framework and Good Governance. Hence, Asia Asset Finance PLC wishes to make our client aware of the following:

1. Client should not make a payment without a receipt.
2. Client has the right to demand indentification from the staff confirming his/her employment with the Company
3. Client is advised to make all payments marked "Account Payee" addressed to the Company
4. No payments should be made to any member of the company to obtain a loan or service from the Company
5. The client has the right to demand any information regarding the client's facility
6. Client is advised to refrain from doing any personal business with any staff of the Company

ASIA ASSET FINANCE PLC
A Finance Company with a Golden Heritage
Muthoot Group Company

Customer Safty is Our Priority
What to Know More About Us?
Call Us Now +94 777 999 922
Head Office +94 117 699 000

Asia Asset Finance PLC is licensed by Monetary Board of Central Bank of Sri Lanka under the Finance Business Act No. 42 of 2011. Incorporated date 1970- September 23. Eligible deposit liabilities are insured with the Sri Lanka Deposit Insurance scheme implemented by the Monetary Board for Compensation up to a maximum of Rs. 1,100,000 per depositor.




# பொருளாதார நெருக்கடியினால் யாழ். மாநகர அபிவிருத்தி பணிகள் ஸ்தமிதம்



**யாழ்.விசேட நிருபர்**

பொருளாதார நெருக்கடி மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பினால் மாநகர சபை தீர்மானித்திருந்த சில வேலைத்திட்டங்களை மேற்கொள்ளமுடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ் மாநகரசபையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சமகால நிலைமைகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே மாநகர முதல்வர் இதனை தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

யாழ் நகர குளத்தை புனரமைக்க 40 மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்த போதும் அதனை தற்போதைய பொருளாதார நெருக்கடியில் செய்ய ஆரம்பித்தால் 80 மில்லியன் ரூபா செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

ஆஸ்பத்திரி வீதி அகலிப்பு, ஸ்ரான்லி வீதி அகலிப்பு போன்ற அபிவிருத்தி திட்டங்களுக்கு நிதி மூலங்கள் இருந்தபோதும் கட்டடப் பொருட்களுக்கான தட்டுப்பாடு பொருட்களுக்கான விலை உயர்வு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சார நெருக்கடி காரணமாக கடந்த காலங்களில் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில வேலைத்திட்டங்கள் செய்ய முடியாத நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

நிதி மூலங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு திட்டவரைவு இறுதி செய்யப்பட்டு அங்குரார்ப்பணம் மட்டுமே செய்யப்படவிருந்த நிலையில் துரதிஷ்டவசமாக நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அதனை ஒத்திவைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# மன்னாரில் கடும் மழை மக்களின் இயல்பு நிலை பாதிப்பு



**(மன்னார் குறூப் நிருபர்)**

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

நேற்று (11) காலை முதல் தொடர்ச்சியாக பெங்து வரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வீடுகளை விட்டு வெளியில் செல்ல முடியாத நிலையும் காணப்பட்டது. மேலும் பல வீதிகள் நீரில் மூழ்கியுள்ளதோடு,பல வீடுகளிலும் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

இந்நிலையில் மன்னார் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

# சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் நலன்புரி உதவிகள்

**(மன்னார் குறூப் நிருபர்)**



மன்னார் பெரிய கடை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பெரிய கடை சனசமூக நிலைய அங்கத்துவ குடும்பங்களுக்கான நலன்புரி உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (11) காலை 10.30 மணியளவில் மன்னார் பெரிய கடை சன சமூக நிலையத்தில் இடம்பெற்றது.

பெரிய கடை சன சமூக நிலையத்தின் தலைவர் நாகராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்களாக பெரிய கடை கிராம அலுவலகர் ஏ.எஸ்.டல்மேரா,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.றேக்கா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.நகுசீன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதன் போது குறித்த கிராமத்தில் இருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 2 மாணவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதோடு, மாணவர்களுக்கு தலா 2 ஆயிரம் ரூபாய் வீதம் வங்கியில் வைப்பில் இடப்பட்டு, வங்கிப் புத்தகம் கையளிக்கப்பட்டது.

மேலும் குறித்த கிராமத்தைச் சேர்ந்த 19 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உலர் உணவு பொதிகளும்,13 மாணவர்களுக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பாடசாலை கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டிலிருந்து வருபவர்களால் மலேரியா பரவும் அபாயம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயாளி ஒருவர் இனம்காணப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் தொண்டமானாறு பகுதியை சேர்ந்த 29 வயதுடைய இளைஞன் ஒருவரே மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சில நாட்களுக்கு முன்னர் நைஜீரியா நாட்டிலிருந்து திரும்பி வந்துள்ளார். அந்நிலையில் கடுமையான காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இவர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட வைத்திய பரிசோதனையில் இளைஞனுக்கு மலேரியா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டு, அதற்கான சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டிலிருந்து வருவோர் காய்ச்சலினால் பாதிக்கபட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலைகளுக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

மலேரியா அற்ற நாடுகளின் பட்டியலில் இலங்கை இடம்பெற்றுள்ளது. எனினும் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களினால் மலேரியா பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மலேரியா எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நாடுகளுக்குச் செல்பவர்கள் முன்னெச்சரிக்கை மருத்துவ வழிகாட்டுதல்களை தகுதி வாய்ந்த மருத்துவ அதிகாரிகளிடம் பெற்றுச் செல்லுமாறும் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# போதைப்பொருள் கடத்தல், ஆட் கடத்தல் தொடர்பில் விழிப்புணர்வு



**(மன்னார் குறூப் நிருபர்)**

மன்னார் தீவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் இடம்பெற்று வரும் போதைப் பொருள் கடத்தல், ஆட்கடத்தல் நடவடிக்கைகள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வு நடவடிக்கை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை (10) மாலை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மாலை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வு கலந்துரையாடலில் வடமாகாண கடற்படை கட்டளைத் தளபதி கொமாண்டர் குமார, மீனவர் சங்க பிரதிநிதிகள், அரச, தனியார் நிறுவன அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளின் போது எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கடற்படை அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் ஆட்கடத்தல் தொடர்பாகவும் பல விடயங்கள் மீனவர்களுக்கு அறிவுறுத்தினர். மேலும் மக்கள் மற்றும் மீனவர்கள் முன் வைத்த பிரச்சினைகள் குறித்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்வதாக கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தெல்லிப்பழையில் ஆர்ப்பாட்டம்

**யாழ்.விசேட நிருபர்**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ்ப்பாணம் தெல்லிப்பழையில் ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

வலிகாமம் வடக்கு மக்களின் ஏற்பாபாட்டில் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு அருகில் நேற்றைய தினம் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இப்போராட்டம் இடம்பெற்றது. அத்தியாவசிய பொருட்கள் எங்கே, வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றத்தை துரிதப்படுத்து, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கு, வலிகாமம் வடக்கு மக்களின் காணிகளை உடனடியாக விடுவிக்கவும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞன் மீது தாக்குதல்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கைதடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களின் தாக்குதலுக்கு இலக்கான இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதடி சரஸ்வதி சனசமூக நிலையப் பகுதியைச் சேர்ந்த 32 வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். தாக்குதல்சம்பவம் தொடர்பானமேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஏ 9 வீதியில் விபத்து

**சாவகச்சேரி விசேட நிருபர்**

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை முன்பாக ஏ 9 வீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

துவிச்சக்கரவண்டியில் சென்ற தவசிக்குளம் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த 57 வயதான நபரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். ஏ 9 வீதி ஊடாக பயணித்த வான் மோதியதில் படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். இவ் விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# புடையன் பாம்பு தீண்டியதில் சிறுமி வைத்தியசாலையில் அனுமதி

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி மட்டுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த 9 வயதுச் சிறுமி ஒருவர் கடந்த சனிக்கிழமை இரவு பாம்பு கடிக்கு இலக்காகியுள்ளார்.

மின்வெட்டு நேரத்தில் வீட்டிற்கு வெளியே சென்ற போது புடையன் பாம்பு தீண்டியதாக தெரிவிக்கப்படுகிறது. பாம்புக் கடிக்கு இலக்கான சிறுமி உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

# மாங்குளம் வைத்தியசாலை ஊழியர்கள் போராட்டம்

**புதுக்குடியிருப்பு நிருபர்**



மருத்துவ தேவைகளை பூர்த்தி செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்து நேற்று வைத்தியசாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர். நேற்று காலை 11 மணியளவில் மாங்குளம் வைத்தியசாலை மருத்துவர்கள், ஊழியர்கள் இணைந்து வைத்தியசாலை முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இப்போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மருத்துவம் மக்களின் அடிப்படை உரிமை, மக்களின் உயிர்களுடன் விளையாட வேண்டாம், இலவச சுகாதாரம் ஆபத்தில் உள்ளது போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.



யாழ்.மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்தில் கடைசி பங்குனித் திங்கள் நிகழ்வு நேற்று (11) இடம்பெற்றது.

படம் கோப்பாய் குறூப் நிருபர்அம்மன்

# ஆண்டவர் இயேசுவின் பாடுகளும் - உயிர்ப்பும்


ஆண்டவர் இயேசு சாவை வென்று உயிர்த்தெழுந்தார். சாவு என்பது மனிதர்களுக்கு முடிவு அல்ல என்பதை நாம் முதலில் உணர வேண்டும்.

இறைவனின் திருவுளத்திற்கேற்ப வாழ்ந்தால் உயிர்த்தெழுதல் நிச்சயம்.

நொடிப் பொழுதில் முடிந்து விடும் இவ்வுலக வாழ்வு நிலை வாழ்விற்கான ஆயத்தமாகும்.

"மானிட மகன் பலவாறு துன்பப்படவும், மூப்பர்கள், தலைமைக் குருக்கள், மறைநூல் அறிஞர்கள் ஆகியோரால் உதறித் தள்ளப்பட்டு கொலை செய்யப்படவும் மூன்றாம் நாளில் உயிருடன் எழுப்பப்படவும் வேண்டும்''

ஆண்டவர் இயேசுவுக்குச் சிலுவைச் சாவு எதிர்பாராத நிகழ்வாக இருக்கவில்லை. அவர் அன்னை மரியாளின் மடியில் மாட்டுத் தொழுவத்தில் பிறந்தநாள் முதல் இந்த நாளுக்காகவே தம்மை ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்.



அவர் சாவை ஏற்கனவே முன்னறிவித்திருந்தார். கிறிஸ்தவ நம்பிக்கை, விசுவாசம், எதிர்நோக்கிற்கான அடிப்படை, இயேசுவின் உயிர்ப்புதான்.

திருத்தூதர் பவுல், கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இதைத் தெளிவுபடுத்தியுள்ளார். "கிறிஸ்து உயிருடன் எழுப்பட வில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும், நீங்கள் கொண்டிருக்கிற நம்பிக்கையும் பொருளற்றதாய் இருக்கும்.

சாவு என்பது நிலை வாழ்விற்கான வாசலாகும். இவ்வுலக வாழ்வை சொர்க்கம் ஆக்க மனிதர் உண்மையான விண்ணக சொர்க்கத்தை மறந்து விடுகின்றனர்''. "நாசரேத்து இயேசு இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்திருந்தோம். ஆனால், தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரண தண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள்.

மற்ற உலகிற்கு வர்ணிக்க இயலாத மகிழ்ச்சியையும் எதிர்நோக்கையும் அளித்த இரு நிகழ்வுகள் தான் இயேசுவின் மனிதாவதாரமும், உயிர்ப்பும்.

மனிதரை அளவுக்கதிகமாக அன்பு செய்யும் இறைவன், அவர்களை மீட்க மனிதனாக வரலாற்றில் மண்ணில் அவதரித்தார். பாவம் எதுவும் இல்லாத தூயவரான அவர் சிலுவைச் சாவால் மனிதரின் பாவத்திற்குக் கழுவாய் ஆனார்.

இயேசுவின் சிலுவைச் சாவு அவருடைய சீடருக்குத் தாங்க முடியாத வேதனையாக அமைந்தது. தங்களுடைய எதிர்நோக்கு அனைத்தும் அற்றுப் போனதாக அவர்கள் நினைத்தார்கள். தீமை நிறைந்த உலகில் வாழும் நமக்கு வாழ்க்கைப் புதுப்பிக்கப்படல் என்பது அன்றாடம் தொடர்ந்து நிகழ வேண்டிய காரியமாகும். ஒவ்வொரு ஆண்டும் பெரிய சனிக்கிழமையன்று நாம் நமது திருமுழுக்கிற்கான உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்கிறோம்.

இது நம்பிக்கை விசுவாசத்தில் வளர்வதற்காகத்தான். வளர்ச்சிதான் வாழ்வின் அடையாளம். மண்ணுலகில் இறை அன்பிலும் சகோதர அன்பிலும் வாழ்பவர்களுக்கு விண்ணுலக வாழ்வு நிச்சயம்.




"உயிர்த்தெழச் செய்பவனும், வாழ்வு தருபவனும் நானே. என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்''. என்கிறார் நம் ஆண்டவர் இயேசு.

**யேசுவின் உயிர்ப்பு:**

வாரத்தின் முதல் நாளன்று விடியற்காலையில் இருள் நீங்கும் முன்பே மகதலா மரியா கல்லறைக்குச் சென்றார். கல்லறை வாயிலில் இருந்த கல் அகற்றப்பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவர் சீமோன், பேதுரு, மற்றும் பிற சீடரிடமும் வந்து, "ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டனர்.

அவரை எங்கே வைத்தனரோ தெரியவில்லை!'' என்றார்.

இதைக் கேட்ட பேதுருவும் மற்ற சீடரும் கல்லறைக்குப் புறப்பட்டனர். இருவரும் ஒருமித்து ஓடினர். மற்ற சீடர் பேதுருவை விட விரைவாக ஓடி முதலில் கல்லறையை அடைந்தார். அவர் குனிந்து பார்த்தபோது துணிகள் கிடப்பதைக் கண்டார்; ஆனால், உள்ளே நுழையவில்லை. அவருக்குப் பின்னாலேயே சீமோன் பேதுருவும் வந்தார்.

நேரே அவர் கல்லறைக்குள் நுழைந்தார். அங்கு துணிகளையும், இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அத்துண்டு மற்ற துணிகளோடு இல்லாமல் ஓரிடத்தில் தனியாக சுருட்டி வைக்கப்பட்டிருந்தது.பின்னர் கல்லறைக்கு முதலில் வந்து சேர்ந்த மற்ற சீடரும் உள்ளே சென்றார். கண்டார். நம்பினார். இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறை நூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்துகொள்ளவில்லை.

பின்பு சீடர்கள் தாங்கள் தங்கியிருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். மரியா கல்லறைக்கு வெளியே அழுதுகொண்டே கல்லறைக்குள் குனிந்து பார்த்தார். அங்கே வெண்ணாடை அணிந்த இரு வானதூதர்களை அவர் அங்கே கண்டார்.

இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலை மாட்டிலும், மற்றவர் கால் மாட்டிலுமாக அமர்ந்திருந்தார்கள். அவர்கள் மரியாவிடம், "அம்மா ஏன் அழுகிறீர்?'' என்று கேட்டார்கள். அவர் அவர்களிடம் "என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்விட்டனர். அவரை எங்கே வைத்தனரோ என்று எனக்குத் தெரியவில்லை'' என்றார்.

இப்படிச் சொல்லிவிட்டு அவர் திரும்பிப் பார்த்தபோது இயேசு நிற்பதைக் கண்டார்.

ஆனால் அங்கு நிற்பவர் இயேசு என்று அவர் அறிந்துகொள்ளவில்லை. இயேசு அவரிடம், 'ஏனம்மா அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?' என்று கேட்டார். மரியா அவரைத் தோட்டக்காரன் என்று நினைத்து அவரிடம் "ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர்? எனக்குச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்'' என்றார்.



இயேசு அவரிடம், 'மரியா' என்றார். மரியா திரும்பிப் பார்த்து 'போதகரே' என்றார். இயேசு அவரிடம், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை.

நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம் என் தந்தையும், உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன் எனச் சொல்'' என்றார்.

மகதலா மரியா சீடரிடம் சென்று, "நான் ஆண்ட வரைக் கண்டேன்,'' என்றார். தம்மிடம் இயேசு கூறியவற்றையும் அவர்களிடம் சொன்னார். (யோவான் 20: 118).

இயேசுவின் உடல் புதியதொரு கல்லறையில் வைக்கப்பட்டது. பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட கல்லறை அது. அதற்கு முன்பாக அன்னை மரியாளின் மடிமீது வைக்கப்பட்டு அவளது தாய்மைக் கண்ணீரால் குளிப்பாட்டப்பட்டது.

ஏற்கனவே மகதலா மரியாளின் பரிமளத் தைலத்தால் பூசப்பட்டது அவர் பாதங்கள். இவ்வாறு அன்புச் செயல்களால் தயாரிக்கப்பட்டு கல்லறையில் வைக்கப்பட்ட உடல் அங்கு உயிரற்ற உடலாகத் தங்கியிருக்கவில்லை.

அவரது இறை வல்லமை சாவை வென்றது. சாவுக்கு முற்றுப்புள்ளி வைத்தது. தம்மிடம் அன்பு கொள்ளுகிறவர்களுக்கென்று கடவுள் ஏற்பாடு செய்தவை கண்ணுக்குப் புலப்படவில்லை. செவிக்கும் எட்டவில்லை. மனித உள்ளமும் அதை அறியவில்லை.

இயேசு உயிர்த்தெழுந்தார்.

அவரது உயிர்ப்பின் மகிமை, மகிழ்ச்சி நமதாகும். ஆண்டவரைத் தேடுவோரை அவர் எதிர்கொண்டு வந்து ஆசி

வழங்குகின்றார். அவரைத் தேடுவோர் அவரைக் கண்டடைவர்.

நமது இறை ஏக்கங்களுக்கும் தாகத்திற்கும் கனிவுடன் பதில் தரக்கூடிய இரக்கத்தின் காலம் இது. இறை இயேசுவிடம் நம்பிக்கை வைத்தோர் அனைவருக்கும் அவரது உயிர்ப்பு சுலபமாகப் புரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்தது.காலம் கனிந்திருக்கும்போதே இறையரசை ஏற்று பறைசாற்றுவோம். "கல்லறை திறந்தது காரிருள் மறைந்தது. கிறிஸ்து உயிர்த்தார். அல்லேலூயா. வல்லமை துலங்க வாழ்வினை வழங்க மரணத்தை வென்றார். அல்லேலூயா. வாழ்வுக்குச் சாவில்லை. சாவுக்கு வாழ்வில்லை. மரணத்தை மீட்பர் வென்று விட்டார். வாழ்க்கை பிறந்தது மரணம் மறைந்தது. வாழ்வோம் கிறிஸ்துவில் புதுவாழ்வு,''

ஜெயதாஸ் பெர்னாண்டோ...

# புனித வியாழன் தரும் மகத்தான படிப்பினைகள்

இயேசுவின் பாஸ்கா விழாவை நாம் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றோம். பாஸ்கா என்றால் கடத்தல் என்று பொருள் பழைய ஏற்பாட்டில் யாவே கடவுளின் இரக்கத்தினால் பாரவோனின் ஆதிக்கத்திலிருந்தும், அடிமைத்தனத்திலிருந்தும் இஸ்ரயேல் மக்கள் செழிப்புமிக்க வளமையான கானான் தேசத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். அதாவது பாஸ்கா என்ற கடத்தல் நிகழ்வின் வழியாகத் தீமையின் ஆதிக்கத்திலிருந்து கடந்து வந்து இறைவனை பற்றிக்கொண்டனர்.

ஆனால் பெரிய வியாழக்கிழமை தினத்தில் உலகம் முடியும் வரை எந்நாளும் உங்களோடு இருப்பேன் என்று சொன்ன இயேசு தன்னை உடைத்து தனது உடலையும் இரத்தத்தையும் நம்மீது கொண்ட அன்பின் வெளிப்பாடாக நமக்கு உணவாகத் தருகின்றார். அத்தோடு தன் மீட்புப் பணி இவ்வுலத்தில் தொடர குருத்துவத்தையும் ஏற்படுத்துகின்றார்.



இத்தருணத்தில் இயேசு தன்னல நாட்டமின்றி மானிடரின் மீட்புக்காக தன்னையே வழங்கியதுபோல நம் அருகில் வாழும் மனிதர்களை அன்பு செய்துவாழவும், மேலும் குருக்கள் ஆண்டினை கொண்டாடும் நாம், குருக்கள் அனைவரும் இயேசு செய்த பணியை மனத்துணிவுடனும், மனித மாண்புடனும் தொடர்ந்து செய்து நீதி, அன்பு சகோதரத்துவம், சமுத்துவம் போன்றவற்றை நிலைநாட்டாவும், இயேசுவை மக்களுக்கு கொடுப்பவர்களாகவும் திகழ வேண்டிய வரத்தை தந்தருள குருக்களுக்காகவும் நமக்காகவும் சிறப்பாக செபிப்போம்.

பெரிய வியாழக்கிழமையில் திருவழிபாடானது நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது.

இறைவார்த்தை வழிபாடு
பாதம் கழுவும் சடங்கு
நற்கருணை வழிபாடு
நற்கருணை இடமாற்றம் பவனி.

இந்த வாழிபாட்டு நிகழ்வுகளில் பொருளுணர்ந்து பக்தியோடு பங்கெடுப்போம்.

**இறைவார்த்தை வழிபாடு**

முதல் வாசகம் (வி.ப 12, 18, 1114)

பாஸ்கா என்றால் கடந்து செல்லுதல் என்று பொருள். தங்கள் சொந்த நாட்டை விட்டு, எகிப்தில் அடிமைகளாக வாழ்ந்த தம் மக்களை கடவுள் விடுவித்து, கானான் தேசத்திற்குக் கொண்டு வந்தார். அந்த நிகழ்வுதான் பாஸ்கா, நாமும் பாவத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு இணைய நம் பழைய நிலையிலிருந்து கடந்துவர முயற்சிப்போம்.அர்த்தமற்ற வழிபாடுகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. வழிபாடுகள் வாழ்வாகும்போதுதான் வாழ்வில் மாற்றம் பிறக்கிறது.

வாழ்வு சிறக்கிறது. எனவே திருப்பலியின் போது இயேசுவின் உடலை உண்டு அவரது இரத்ததைப் பருகுவது என்பது வெற்றுச் சடங்காக மாறிவிடாமல் நாம் அன்றாட வாழ்வில் இறையரசை வாழ்வாக்க வேண்டும் என்ற புனித பவுலின் வார்த்தைகளுக்குச் செவிமடுப்போம்.

யோவான் 13:34 நற்செய்தி இவ்வாறு தெரிவிக்கின்றது.புதியதோர் கட்டளையை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன். நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்.

**பாதம் கழுவும் சடங்கு**

யூத சமுகத்தில் தன் வீட்டில் இருக்கும் பணியாளர் வெளியில் சென்று வரும் தனது தலைவரின் கால்களைக் கழுவுவது வழக்கம். ஆனால் இதே சமுதாயத்தில் பிறந்த இயேசு ஒரு வித்தியாசமான செயலைச் செய்கிறார்.

பணிவிடைப் பெற அன்று,பணிவிடைப் புரியவே வந்தார் என்று வார்த்தையில் மட்டுமல்ல. தன் சீடர்களின் பாதங்களை கழுவி அவ்வார்த்தைகளுக்கு உருவம் கொடுத்தார் இயேசு. தன்னையே தாழ்த்திக் கொண்டார் இறைமகன் இயேசு. எனவே இப்பாதம் கழுவும் சடங்கில் பார்வையாளர்களாக, வேடிக்கையாளர்களாக இல்லாமல், நாம் சாதி, மதம், இனம், தூய்மைத்தீட்டு, ஏழைகள், பணக்காரர்கள், இருப்பவர், இல்லாதவர் போன்ற மனிதத்தை உருக்குலைக்கும் வேற்றுமைகளைக் களைந்து அருகில் வாழும் மனிதர் இறைவன் படைப்பு என்பதை உணர்ந்து இச்சடங்கில் பங்குபெறுவோம்.

இயேசு சென்றவிடமெல்லாம் நன்மைகளையே செய்துகொண்டுச் சென்றார். என்னை அவர் தொடமாட்டாரா? என்னை அவர் பார்க்க மாட்டாரா? என் குரலுக்கு அவர் செவி கொடுக்கமாட்டாரா என இயேசுவை எண்ணி ஏங்கியோர் பலருண்டு அவரை அண்டிச் சென்றவர்கள் அருள்மழையில் நனைந்தார்கள்.

எல்.ஜொனதன்...

# இறை - மனித உறவுப்பாலம்



இறைவனின் திருவுளத்தின் உச்சக்கட்டமே மரியின் வழியாகத் தன் ஒரே மகனின் மண்ணுலக உதயம். அன்னையின் அருந்தவத்தினால் இயேசு 12 ஆண்டுகள் பெற்றோரின் உடனிருப்பில் வளர்ந்தார். 12 வயது முதல் 30 வயது வரை சமுதாயப் பகுப்பாய்வு அவரது பார்வையில் பதிந்தது.

18 ஆண்டுகளின் ஆய்வின் உச்சக்கட்டமே யோர்தான் திருமுழுக்கு 40 நாட்கள் பாலைவனத்தில் நோன்பு திருத்தூதர்கள் கலிலேயாக் கடற்கரையில் மீன்பிடி சீடர்கள், போதனைகள்பிணி தீர்த்தல்பாடுகள்இறப்புஉயிர்ப்பு. இவை இறைவன் மனிதனாகி மானிடருக்காகப் பட்ட துன்ப துயரங்கள். இவற்றைத் தவக்காலம் நம்மை அசை போட்டு பார்க்கத் தான் பொன்னாக ஆறு வாரங்களைத் தருகிறது.

இறைவனின் பாடுகளை மட்டும் உணர்வதோடல்லாமல் நமது வாழ்வில் தோன்றும் போராட்டங்கள், சவால்கள், தடுமாற்றங்கள், துன்பங்கள் வழியாகவும் இறைவன் நம்மை அன்பில் வளரவும் மலரவும் அழைப்பு விடுக்கின்றார். கடவுளே ஏன் எனக்கு மட்டும் இத் துன்பம்? எனது வேதனைக்குரல் உனக்குக் கேட்கவில்லையா? எனது விண்ணப்பத்தை மட்டும் ஏன் இறைவன் கேட்க மறுக்கிறார்? என்ற பல புண்பட்ட இதயங்களின் புலம்பலை கேட்கிறோம். அதிலும் குறிப்பாக இறை பக்தியிலும், இறை உறவிலும் அதிக ஈடுபாடு உள்ளவர்களோடு இறைவன் அதிகமாகப் போராடுகின்றார்?

உதாரணம் பழையஏற்பாட்டு நீதிமான் யோபு!

இறைவா நீங்கள் எதை வேண்டுமானாலும் கொடுங்கள். இந்த வேதனை மட்டும் வேண்டாம் என்று பல முறை வேண்டுகிறோம். ஆனால் எது நடைப்பெறக் கூடாது என்று நினைத்தோமோ அது நடக்கும்.

இறை மனித உறவில் போராட்டம் என்பது நம்மைப் பல வீனப் படுத்த அல்ல. மாறாக நம்மை நாமே திடப்படுத்தி இறை ஆற்றல் பெறுவோம்.

இறைவன் எங்கே? எப்படி? நம்மோடு உறவுப் பாலம் அமைக்கிறார் என்பதை உணர்ந்து விழிப்போடு இறைவனில் இயங்குவோம். தவக்காலச் சிந்தனைகளை வாழ்க்கையில் ஏற்போம். தானதர்மங்களை வலது கரம் செய்வதை இடதுகரம் அறியாவண்ணம் செய்வோம். தவம்செபம் தர்மம் மூன்றும் இறைவனையும் மனிதனையும் இணைக்கும் உறவுப் பாலமாகும்.

திருமதி அருள்சீலி அந்தோனி...




# வீட்டில் உறங்கியோரின் அறையை பூட்டி கொள்ளையர்கள் கைவரிசை

## 57 பவுண் நகைகளை திருடித் தப்பியோட்டம்





(வாச்சிக்குடா, அக்கரைப்பற்று மேற்கு நிருபர்கள்)

அம்பாறை ஆலையடிவேம்பு பிரதேசத்தில் உள்ள ஆசிரியர் ஒருவரின் வீட்டில்,

54 பவுண் தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளது. இதுபற்றி, முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். அதிகாலை 1 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

ஆசிரியரும் அவரது மனைவியும் அவர்களது ஒரு வயது பெண் குழந்தையும், வீட்டில் தூங்கி கொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டின் ஜன்னலை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், அவர்கள் தூங்கி அறையை பூட்டிவிட்டு மற்றைய அறையை திறந்து அங்கிருந்த அலுமாரியை உடைத்து அலுமாரியில் இருந்த மூன்று தாலிக்கொடி அடங்கலாக 54 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

தனது ஒருவயது குழந்தைக்கு பிறந்த நாள் கொண்டாடும் எண்ணத்துடன் பிறந்த நாளுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுவிட்டு தூங்கியவர்கள் காலை 5 மணிக்கு எழும்பி கதவை திறக்க முற்பட்டுள்ளனர்.

ஆயினும் கதவு திறக்காதபடி பூட்டப்பட்டிருந்ததையறிந்து சத்தம் போட்டு அயலவர்களை அழைத்து, வெளியே வந்து பார்த்தபோது வீடு திறந்து கிடப்பதையும் அலுமாரியில் இருந்த நகைகள் காணாமல் போனதையும் அறிந்துள்ளனர்.

அதனையடுத்து அக்கரைப்பற்று பொலிசாருக்கு தகவலை வழங்கியதையடுத்து அக்கரைப்பற்று பொலிஸார், அம்பாறை மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவினர், அம்பாறை தடயவியல் விசாரணை பிரிவினர் என பல தரப்பினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகளை மெற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் இரு நாட்களுக்கு முன்னரும் வீதியில் சென்றுகொண்டிருந்த பெண் ஒருவரின் மாலையை அறுக்க ஒருவர் முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# இளைஞர்களிடம் விவசாயத்தை ஊக்குவிக்க செயலமர்வு



(கிண்ணியா நிருபர்)

விவசாயத் துறையை இளைஞர்களிடம் ஊக்குவிக்கும் செயலமர்வு மூதூர் பேழ் கிராண்ட் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் விவசாய அமைச்சினூடாக உள்ளூர் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, வீட்டுப் பயிர்ச் செய்கை, தோட்டப் பயிர்ச் செய்கை, சிறு தோட்டம் போன்றவற்றை ஊக்குவிக்கும் நோக்கில், இந்தச் செயலமர்வு நடாத்தப்பட்டது.

இத்திட்டத்தில், ஊக்குவிப்புத் தொகை மற்றும் காணிகள் என்பனவும் வழங்கப்படவுள்ளன. விவசாயத்தை மேம்படுத்தும் அடிப்படையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் பொதுஜன பெரமுனவின் மூதூர் தொகுதி அமைப்பாளருமான நிமல் காமினி ஹேவாவித்தாரன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக விவசாய இராஜாங்க அமைச்சர் சானக வக்கும்புரவும் விசேட அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவான் அத்துக்கோரலவும் கலந்து கொண்டனர்.

அதேவேளை, சிறப்பு அதிதிகளாக பொதுஜனபெரமுனவின் மூதூர் தொகுதி இணைப்பாளர் கலாநிதி இப்றாகீம் சதாத், பொதுஜனபெரமுன திருகோணமலை இளைஞர் அமைப்பாளர் அசேல, பொதுஜனபெரமுன மூதூர் தொகுதி இளைஞர் அமைப்பாளர் க.மு.ஜெஸாஹிர் ஆகியோருடன் பொதுஜன பெரமுனவின் பிரதேச இளைஞர் அமைப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

# ரமழானில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல் கருத்தரங்கு



(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அனைத்துப் பள்ளிகளும் ரமழான் மாதத்தில் விசேட நிகழ்வுகளை நடத்தும்போது, கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிகாட்டல்களை விழிப்பூட்டும் நிகழ்வு அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா கிண்ணியா கிளைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா கிண்ணியா கிளையும், கிண்ணியா அனைத்து பள்ளிவாசல் சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில், கிண்ணியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட அனைத்து பள்ளிவாசல் நிர்வாகத்தினரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் முக்கிய அதிதிகளாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.எம். ரிஷ்வி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எ.எம்.எம். அஜித், கிண்ணியா ஜம்இயத்துல் உலமா தலைவர் அஷ்ஷெய்ஹ் எ.எம். ஹிதாயத்துல்லா(நளீமி), கிண்ணியா பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் வி.எம்.முஹ்மின் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கல்முனை மத்தி சமுர்தி வங்கியை கணணிமயப்படுத்தும் நிகழ்வு

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கல்முனை மத்தி சமுர்த்தி வங்கி பிரிவின் மேல்தளம் திறப்புவிழாவும், வங்கி கணணிமயப்படுத்தல் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வும் கல்முனை மத்தி சமுர்த்தி வங்கி முகாமையாளர் ஐ.எல்.எஸ்.ஹிதாயா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் கலந்து கொண்டார். அத்துடன் பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ், கல்முனை வடக்கு சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் வி.சிறிநாதன், முகாமைத்துவப் பணிப்பாளர் வி.தாஹிர், சமுர்த்தி முகாமையாளர் கே.இதயராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் பி.இராஜகுலேந்திரன், நிர்வாக உத்தியோகத்தர் ஜீவராஜ், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.அமலதாஸ் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயனாளிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் 90 ஆயிரம் குடும்பங்கள் சமுர்த்தி உதவிபெற்றுவருகின்றன. இன்னும் 25 பேர் புதிதாக சமுர்த்தி உதவிபெறுவதற்காக விண்ணப்பித்துள்ளனர். இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் 3400 மில்லியன் ரூபா சமுர்த்தி பயனாளிகளுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர், அனைத்து சமுர்த்தி வங்கிகளும் கணணிமயப்படுத்தப்படவேண்டும். இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாக அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.சப்றாஸ் தெரிவித்தார். இங்கு அதிகாரிகளும், தெரிவு செய்யப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

# தோட்டச் செய்கையாளர்கள் கவலை

(மண்டூர் குறூப் நிருபர்)

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள பாரிய எரிபொருள் தட்டுப்பாட்டினால் விவசாயிகளின் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், நீர்பாய்ச்சும் பம்பிகளை கொள்வனவு செய்ய முடியாமலும் விவசாயிகள் தயங்குகின்றனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு படுவான்கரை, திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு உட்பட பல்வேறு பின்தங்கிய கிராமங்களில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் தேவைகள் அதிகரித்துள்ளன. மின்சாரம் இல்லாததால், மண்எண்ணெயில் இயங்கும் பம்பிகள் விற்பனை செய்யப்படுகிறது.

இதையும் கொள்வனவு செய்வதில், இவர்கள் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளனர். அறுவடைகளை அரை விலைக்கு கேட்பதால், உரிய காலத்தில் விற்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், தூரப் பிரதேசங்களிலிருந்து வரும் வழமையான கொள்வனவாளர்கள், வியாபாரிகள் எரிபொருட்களின் தட்டுப்பாடுகளால், அறுவடைப் பொருட்களை கொள்வனவு செய்ய வருவதை நிறுத்தியுள்ளதால் பெரும் நஷ்டம் ஏற்படுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா

(காரைதீவு குறூப் நிருபர் )

வரலாற்று பிரசித்தி பெற்ற அருள்மிகு மடத்தடி ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயத்தின் ஆவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேக குடமுழுக்குப்பெருவிழா அண்மையில், சிறப்பாக நடைபெற்றது. கும்பாபிஷேக பிரதமகுருவாக, ஆலயபிரதமகுருவும் கிழக்கிலங்கையின் பிரபல சிவாச்சாரியாரியாருமான சிவாகம வித்யாபூஷணம் சிவாச்சார்ய திலகம், பிரதிஸ்டாதிலகம் ஜோதிடவித்யாதத்துவநிதி விபுலமணி சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் செயற்பட்டார்கள்.

கடந்த 2ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை 5மணிக்கு கர்மாரம்பத்துடன் கிரியைகள் யாவும் ஆரம்பமாகின. எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவத்தில், பெருந்திரளான பக்தர்கள்கலந்து கொண்டனர்.

மஹா கும்பாபிஷேகம் புதன் கிழமை காலை 9.12மணிமுதல் 10.27மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெற்றது.

ஆலயகுரு சிவஸ்ரீ ச.ஹோவர்த்தன சர்மா ஒழுங்கமைப்பில் சர்வசாதகராக ஆரியபாஷா விற்பன்னர் சிவஸ்ரீ சண்முக மயூரவதனக்குருக்களும், பிரதிஸ்டா குருவாக கிரியாஜோதி சிவஸ்ரீ வே.யோகராசாக்குருக்களும் செயற்பட்டனர்.

ஆலய வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய அன்னதான மண்டபத்தில் பாண்டிருப்பைச் சேர்ந்த கோ.ஜனபாலச்சந்திரன்(அவுஸ்திரேலியா) அன்னதானத்தை வழங்கினார். சுமார் 3000 பேரளவில் பசியாறினர்.



கும்பாபிஷேக பெருவிழா நிறைவு பெற்றதும் மழை பொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 24தினங்களுக்கான மண்டலாபிசேக பூஜைகள் ஆரம்பமாகின.

# எரிவாயு கோரி ஆர்ப்பாட்டம்



(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை தபால் அலுவலகத்திற்கு முன்னால், பிரதான வீதியை மறித்து தங்களுக்கு எரிவாயு வழங்குமாறு கோரி கொட்டும் மழையில் ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது. எரிவாயு வழங்கப்படும் என கடை உரிமையாளர் கூறியதை அடுத்து மக்கள் நீண்ட வரிசையில் நின்றதாகவும், மாலை வரை எரிவாயு விநியோகிக்கப்படவில்லை.

இதனால், ஏமாற்றமடைந்த மக்கள், வீதியில் கேஸ் சிலிண்டர்களை வைத்துக்கொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# எரிபொருட்களுக்காக பட்டிருப்புத் தொகுதியில் மக்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருப்பு

(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தொகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் எரிபொருட்களைப் பெறுவதற்காக வெள்ளிக்கிழமை முதல் (08) சனிக்கழமை(9) வரையில் மிகநீண்ட வரிசையில் காத்திருந்தனர். சிரமங்களை பொருட்படுத்தாது இவர்கள் எரிபொருட்களைப் பெறுவதில் கவனம் வெலுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள பெரியபோரதீவு, வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, குருக்கள் மடம், கல்லாறு, களுவாஞ்சிகுடி அகிய பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மக்கள் கூட்டம் இவ்வாறு நிரம்பி வழிந்தன. இதனால், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எதிரிபொருட்கள் முடிந்ததாக உரிமையாளர்கள் அறிவித்தனர்.



மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் கார், உள்ளிட்ட பல வாகனங்களுடன் அதன் உரிமையாளர்கள் மிக நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருட்களைப் பெற்றுச் செல்வதுடன், இன்னும் சிலர் கலன்களிலும் எரிபொருட்களைப் பெறுவதற்குக் நீண்ட வரிசையில் நின்றனர்

வெயில், மழை, இரவு என பாராது மணிக்கணக்காக காத்திருந்த மக்களுக்கு, ஆயிரம் ரூபாவிற்கே எரிபொருட்கள் வழங்கப்பட்டன.

# நகர்வலம்





நேற்று முன்தினமிரவு தொடக்கம் நேற்று மதியம் வரை பெய்த பெருமழை காரணமாக பல தாழ்நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளன. குறிப்பாக கொழும்பு ஆமர் வீதிப் பகுதியில் கொட்டாஞ்சேனை ஆமர் வீதியின் இரண்டு பக்கமும் நீரில் மூழ்கியுள்ளதை படத்தில் காணலாம். படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்

பண்டிகை காலத்தில்

## மக்களை ஏமாற்றும் கும்பல் குறித்து பொலிஸார் எச்சரிக்கை

புத்தாண்டு காலத்தில், பரிசுப் பொதிகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக வரும் இணைய மற்றும் ஏனைய தொலைபேசி அழைப்புக்கள், குறுஞ்செய்திகள் தொடர்பில் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

குற்றவியல் விவகாரங்களுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் சிரேஷ்ட ஊடகப் பேச்சாளருமான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண இது குறித்து மக்களுக்கு எச்சரித்துள்ளார்.



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திட்டமிட்ட குழுக்கள், பண்டிகை காலத்தில் இவ்வாறு பண மோசடிகளில் ஈடுபட தயாராவது தொடர்பிலான தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்த அவர் பொதுமக்கள் அவற்றுக்கு ஏமாறாமல் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும் எனவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார். (பா)

## கதிர்காமத்தில் குழு மோதல்; ஒருவர் உயிரிழப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

கதிர்காமம் ரஜ மாவத்த பகுதியில் இரு குழுவினருக்கு இடையில் இரவு ஏற்பட்ட மோதலில் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக (09) கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமம் ரஜ மாவத பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட கணேசன் பாபு எனும் 24 வயது நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இந்த மோதலின்போது இரண்டு குழுவிலிருந்தும் மூவர் பாரிய காயங்களுக்கு உள்ளாகி கதிர்காமம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்பு மேலதிக சிகிச்சைக்காக தெபரவெள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். சந்தேக நபர்களை கண்டுபிடிப்பதற்காக பொலிஸார் விசேட தேடுதல்களை மேற் கொண்டு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழக முதல்வரின் உதவிக் கரங்கள்:

## இன வரம்பில்லாமல் நீள வேண்டும் – மனோ



தமிழக முதல்வரின் உதவிக் கரங்கள் இன வரம்பில்லாமல் எல்லா இலங்கையருக்காகவும் நீள வேண்டுமென கோருகிறோம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வரின் உதவி கரங்கள், எல்லா தமிழருக்காகவும் நீள்வதை நன்றியுடன் வரவேற்கும் அதேவேளை, இன்று இலங்கையில் நிகழும் ஏகோபித்த போராட்டங்களை அனுசரிக்கும் விதமாக முதல்வரின் சமூகநீதி கரங்கள் இன வரம்பில்லாமல் எல்லா இலங்கையருக்காகவும் நீள வேண்டுமென கோருகிறோம் என மனோ கணேசன் எம்.பி மேலும் தெரிவித்துள்ளார்.




ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவினை தெரிவித்து பெரும் திரளான மக்கள் தேசியக் கொடிகள் மற்றும் பதாகைகளை ஏந்தி தங்காலை நகரில் (10) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது எடுத்த படம். படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஆடைத்தொழிற்சாலை பெண்;

## கூரிய ஆயுதத்தால் வெட்டிக்கொலை

அநுராதபுரம் தினகரன் நிருபர்

ஆடைத்தொழிற்சாலையில் சேவை செய்யும் பெண் ஒருவரை கூரிய ஆயுதமொன்றினால் வெட்டிக்கொலை செய்துள்ளதாக மீகஸ்வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம நேற்று முன்தினம் (10) அதிகாலை மெதிரிகிரிய அம்பகஸ்வெவ பகுதியிலுள்ள வீடொன்றில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் 21 வயதுடைய மீகஸ்வெவ அம்பகஸ்வெவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத்தகராறு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளமை ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தப்பிச் செல்வதற்கு முற்பட்டபோது அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்

## புத்தாண்டு கால பொருள் கொள்வனவில் மக்கள் ஆர்வம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டினை முன்னிட்டு ஹம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் புத்தாண்டிற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாக எமது பிராந்திய செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்டத்தின் பிரதான நகரங்களில் உள்ள வியாபார நிலையங்களில் சனநெரிசல் காணப்படுவதோடு இவர்கள் அத்தியாவசிய மற்றும் ஏனைய பொருட்களை கொள்வனவு செய்தும் வருகின்றனர்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையின் காரணமாக அத்தியாவசிய பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதோடு பொருட்களின் விலையும் அதிகரித்து காணப்படுவதினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எண்ணெய் நிரப்பு நிலையங்கள் மற்றும் கூட்டுறவு விற்பனை நிலையங்களிலும் நீண்ட கியூ வரிசைகளில் நின்று மக்கள் பொருட்களை கொள்வனவு செய்து வருகின்றனர்.

இருந்தாலும் கடந்த இரண்டு வருட காலத்தில் கொவிட் 19 கொரோனா தொற்றின் காரணமாக புத்தாண்டினை சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றியே கொண்டாடினர்.

இம் முறை நாட்டின் நிலை சீரடைந்துள்ளதினால் மக்கள் புத்தாண்டினை கொண்டாடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அநுராதபுரம் மாவட்டத்தில்

## 'கெகுலு துரு உதான' தேசிய வேலைத்திட்டம் வெற்றியளிப்பு

திறப்பனை தினகரன் நிருபர்

கடந்த 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "கெகுலு துரு உதான" தேசிய மரம் நடும் நிகழ்ச்சித்திட்ட வேலைத்திட்டம் அநுராதபுர மாவட்டத்தில் வெற்றியடைந்துள்ளது.

கெகுலு துரு உதான என்ற தேசிய மரம் நடும் நிகழ்ச்சித் திட்டம் 2021 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். 2021 ஆம் ஆண்டு முதலாம் வகுப்பில் சேரும் புதிய மாணவர்களுக்கு பள்ளியின் முதல் நாளிலேயே அவர்களின் வீட்டு முற்றத்தில் பழ மரக்கன்றுகள் நடுகைக்காக வழங்கப்பட்டன. கடந்த வருடம் நாடளாவிய ரீதியில் அனைத்து பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில் இந்த வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன்படி, நெல், தானியங்கள், கரிம உணவுகள், காய்கறிகள், பழங்கள், மிளகாய்கள், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி, விதை உற்பத்தி, உயர் தொழில்நுட்ப அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து இந்த நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துகின்றன.

அநுராதபுர மாவட்ட மேலதிக செயலாளர் என்.எம்.என்.ருவன் பண்டார நவரத்ன, மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எச்.எல் திருமதி தேனுவரவின் தலைமையில் அநுராதபுரம் மஹிந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதற்காக அநுராதபுரம் மாவட்டத்தில் உள்ள 506 பாடசாலைகளைச் சேர்ந்த 18534 மாணவர்களுக்கு பழ மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன.

அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கியதாக இந்த நிகழ்ச்சித் திட்டம் நடத்தப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த செலவு 3.39 மில்லியன் ரூபாவாகும். இதற்கென தெரிவு செய்யப்பட்ட தாவரங்கள் அநுராதபுரம் மாவட்டத்தின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்றவாறு வழங்கப்பட்டன.

## எரிபொருள் நிலையத்திற்கு வருகை தந்த இருவர் உயிரிழப்பு

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்

தங்கொடுவ மற்றும் வென்னப்புவ ஆகிய பகுதிகளில் உள்ள இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் எடுக்க வருகை தந்த இருவர் திடீரென உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொடுவ நீர்கொழும்பு பிரதான வீதியின் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் டீசல் பெற்றுக்கொள்வதற்காக கடந்த இரண்டு நாட்களாக காத்திருந்த ஒருவர் சனிக்கிழமை (9) திடீரென உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த நபர், ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு ஊழியர்களை ஏற்றிச் செல்லும் பஸ்ஸின் சாரதி என பொலிஸார் கூறினர்.

அத்துடன், தம்பரவில எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற வந்த 50 வயதுடைய நபர் ஒருவர் திடீரென உடல் நலக் குறைவால் உயிரிழந்துள்ளார்.

குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளைப் பெற்றுக் கொண்ட பின்னர், அங்கு தனது காரின் டயர்களுக்கு காற்று அடிப்பதற்காக முயற்சித்த போது அங்கு உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொழும்பில் நடைபெற்ற

## இமாம் ஷாபிஈ (ரஹ்) தொடர்பான ஞாபகார்த்த சொற்பொழிவு

பேருவளை விசேட நிருபர்



ஸ்ரீலங்கா ஷரீஆ கவுன்சில் ஏற்பாட்டில் நடைபெற்ற இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் தொடர்பான விஷேட ஞாபகார்த்த சொற்பொழிவு நிகழ்வு கொழும்பு ஸாஹிரா கல்லூரி கபூர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

ஸ்ரீ லங்கா சரீஆ கவுன்சில் தலைவரும் காலி பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யா அரபுக் கல்லூரி முன்னாள் பணிப்பாளருமான மௌலவி ஹஸ்புல்லாஹ் அப்துல் காதர் (பஹ்ஜி)யின் வழிகாட்டலின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு காலி அலிய்யா இஸ்லாமிய சட்டக்கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட உலமா சபைத் தலைவருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.இஸட். முஹம்மட் ஸுஹூர் (பாரி) தலைமை வகித்தார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் முன்னாள் செயலாளரும் புத்தளம் அல் மஜீத் எகடமியின் பணிப்பாளருமான மௌலவி அப்துல் நாஸர் (ரஹ்மானி) 'மனாகிபுல் இமாம் ஷாபிஈ (ரஹ்) என்ற தலைப்பிலும் மௌலவி அஸ்மிர் ஹஸனி 'மத்கபை பின்பற்றுவதன் அவசியம்' என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

ஸ்ரீ லங்கா சரீஆ கவுன்சிலின் பொதுச் செயலாளரும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழுத் தலைவரும் வத்தளை அபூ ஹுரைறா அரபுக் கல்லூரி அதிபருமான உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.பீ.எம். ஹிஷாம் (பத்தாஹி) உட்பட மற்றும் பலரும் உரை நிகழ்தினர்.

இந்நிகழ்வில் உலமாக்கள், அரபுக் கல்லூரி அதிபர்கள், பள்ளிவாசல் இமாம்கள், நிர்வாகிகள் உட்பட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை;

## முஸ்லிம் ஆரம்ப பாடசாலை 09 மாணவர்கள் சித்தி



வெலிகம தினகரன் நிருபர்

மாறை/ வெலிகம முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையிலிருந்து 5ம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள், 9 மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கும் பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் திருமதி ஸனூலா தெரிவித்தார். சித்தியடைந்தோர் வருமாறு:

1) எம்.வை. யாஸிர் அஹ்மது (179), 2) எம்.ஆர். அஸ்மா (174), 3) முஹம்மது ஹூதைபா (161), 4) எம்.எம்.எம். ஷர்பான் (159), 5) எம். யூஸூப் அஹ்மது (154), 6) எம். ஸியாம் மனால் (152), 7) எம்.எச். ஹப்ஸா (150), 8) எம்.எப். அப்துல்லாஹ் (149), 9) எம்.ஆர். பாத்திமா அம்ரா (149) ஆகிய மாணவர்களே சிறந்த முறையில் சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

புத்தாண்டை முன்னிட்டு;

## மாத்தறையிலிருந்து தூர இடங்களுக்கு இ.போ.சவினால் பஸ் சேவை ஆரம்பம்

மாத்தறை தினகரன் நிருபர்

தமிழ், சிங்கள பண்டிகையை கொண்டாடுவதற்காக தமது சொந்த இருப்பிடங்களுக்குச் செல்லும் மக்களின் நன்மை கருதி இலங்கை போக்குவரத்துச் சபையின் மாத்தறை டிப்போ மூலம் மாத்தறையிலிருந்து தூர இடங்களுக்கு பஸ் சேவைகளை நடாத்தி வருகின்றது.


மாத்தறையிலிருந்து இரத்தினபுரி, அம்பாறை, பதுளை, மொனராகலை, வெல்லவாய, கதிர்காமம், பண்டாரவளை, அநுராதபுரம், மதவாச்சி. கொழும்பு போன்ற தூர இடங்களுக்காக இச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் எதிர்வரும் 18ம் திகதி தூர இடங்களிலிருந்து தமது கடமைகளுக்காக வரும் மக்களுக்காக இச் சேவை தொடர்ந்து நடைபெறும் என மாத்தறை பஸ் டிப்போவின் முகாமையாளர் தெரிவித்தார்.




# நீர்நிலைகளில் நீராடுவது அவதானம்

## நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு எச்சரிக்கை



இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்திபுரி வழியாக சிவனொளிபாத மலை செல்லும் யாத்திரிகர்கள் களுகங்கை மற்றும் ஏனைய நீர்நிலைகளி ல் அவதானத்துடன் நீராடுமாறு மாவட்ட நீர்வீழ்ச்சிகள் பாதுகாப்பு அமைப்பு எச்சரித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் இரத்தின பலாபலாபத்தல ஊடாக ஓடும் களுகங்கையில் நீராடச் சென்று வெள்ளத்தில் சிக்கி மூன்று மரணங்கள் ஏற்பட்டுள்ளன. சிவனொளிபாத மலை யாத்திரைக் காலத்தில் மட்டுமன்றி ஏனைய சூழ்நிலைகளிலும் இப்பிரதேச நீர்நிலைகளில் குளிக்கவும் உல்லாசமாகக் கழிக்கவும் வரும் பயணிகள் உயிராபத்தை எதிர்நோக்கியுள்ளதாக இவ்வமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தினூடாக சிவனொளிபாத மலைக்குச் செல்லும் மூன்று வீதிகளிலும் களுகங்கை வளவை கங்கையும் இவற்றின் கிளையாறுகளும் நீர்வீழ்ச்சிகளும் அதிகமாகக்காணப்படுகின்றன.

இப்பிரதேசத்திலும் மத்திய மலை நாட்டின் எல்லை பகுதிகளுக்கும் மழை பெய்தால் நீர்நிலைகளில் வெள்ளம் ஏற்படுவதுண்டு.

இந்நிலைமையால் நீர்நிலைகளில் அடிக்கடி உயிராபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே நீர்நிலைகளை நாடி வருவோர் இவ் விடயங்களிலுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து அவதானமாக செயற்பட்டால் உயிராபத்துக்களில் இருந்து தவிர்ந்து கொள்ளலாம் எனவும் அவ்வமைப்பு அறிவுறுத்தல் வழங்கி வருகிறது.




மாத்தளை அந்தோனிய ஆலயத்தின் ஏற்பாட்டில் அரசாங்கத்திற்கெதிராக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஆலயத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படம். படம்: மாத்தளை சுழற்சி நிருபர்

## உணவகத்தில் தீ

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா புதிய கடை வீதியில் அமைந்துள்ள உணவகமொன்றில் நேற்று (11) திங்கட்கிழமை 12 மணியளவில் சமையல் எரிவாயு கசிவினால் சமயலறையில் தீ ஏற்பட்டது. தீ ஏற்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த நுவரெலியா மாநகரசபை தீயணைப்பு படையினர் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீ விபத்தினால் பாரிய சேதம் ஏதும் ஏற்படவில்லை. பகுதியளவிலேயே பொருட்கள் சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசுக்கு ஆதரவாக கண்டியில் ஆர்ப்பாட்டம்

எம்.ஏ.அமீனுல்லா



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கும் அரசாங்கத்திற்கும் ஆதரவு தெரிவித்து கண்டியில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் சுமார் ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி பதவியில் இருந்து கோட்டாபய ராஜபக்ஷவை இராஜினாமா செய்யுமாறு கோரி போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். மக்களுக்கு எதிராகவே இந்த மக்கள் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் கண்டி, தலதா வீதியிலுள்ள குயின்ஸ் ஹோட்டலுக்கு அருகில் கண்டி மணிக்கூட்டு கோபுரம் வரை பேரணியாக சென்ற மக்கள் ஜனநாயக ரீதியில் மக்களின் சம்மதத்துடன் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதியை சதிகளால் பதவியில் இருந்து அகற்ற இடமளிக்கப்போவதில்லை எனத் தெரிவித்தனர். பயங்கரவாதத்தை தோற்கடித்த பின்னர், கொவிட் அச்சுறுத்தலிருந்து நாட்டை விடுவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. சுபிட்சத்தின் தொலை நோக்குப் பார்வையை நனவாக்கும் நோக்கில் செயற்பட்டு வருவதாகவும், அதற்கான சந்தர்ப்பம் அவருக்கு வழங்கப்பட வேண்டுமென கண்டி மாநகர சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சேன திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

## கார் - மோட்டார் சைக்கிள் மோதி விபத்து இருவர் பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்




கார் மோட்டார் சைக்கிள் ஒன்றில் மோதியதால் இருவர் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரி பெல்மதுளை வீதியில் றில்ஹேன என்ற இடத்தில் நேற்று (11) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பெல்மதுளை பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த பவுசர் ஒன்றை முந்தி செல்ல முற்பட்ட போதே எதிரே வந்த காரில் மோட்டார் சைக்கிள் மோதியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பெல்மதுளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் ஒருவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மற்றவர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இருவரும் தெரணியகல கொலன்னாவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

புசல்லாவை தினகரன் நிருபர்

கண்டி பன்விலை கலாபொக்க புன்னகை பூக்கள் முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டு விழா செவ்வாய்க்கிழமை (12) இன்று முற்பகல் 9.30 மணிக்கு கலாபொக்க Young Star விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் முன்பள்ளி தலைமை ஆசிரியை பரமநாதன் கங்கா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அபிராமி, தேசிய பாடசாலை அதிபர் எஸ் ஸ்ரீதரன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல தடவை பிற்போடப்பட்ட இந்நிகழ்வு இன்று இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அனர்த்த முகாமைத்துவம்

புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

செயலாளர் ரம்யா யசுந்தர தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அனர்த்த நிலைமைகளின் போது, சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பொறுப்புகள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டன.

இதன்போது புளத்கொஹுபிட்டிய தொகுதியில் அனர்த்த நிலைமைகளுக்கு முகம்கொடுக்கும் மக்களுக்காக மூன்று முகாம்களை தயார்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் மரங்கள் முறிந்து விழும் போது அவற்றை அப்புறப்படுத்த மின்சார சபையினரின் ஒத்துழைப்பை பெறுவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.





நகர அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் 18 மில்லியன் ரூபா செலவில் உக்குவளை நகரில் நிர்மாணிக்கப்பட்ட நடைபாதையை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹன திஸாநாயக்காவால் நாடா வெட்டி பாதையை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. படம் மாத்தளை சுழற்சி நிருபர்

## கந்தப்பளையில் எரிபொருள் தட்டுப்பாடு





கந்தப்பளை பிரதான நகரில் இயங்கும் ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பும் நிலையத்தில் டீசல் இல்லையென இந்நிலையம் அறித்தல் விடுத்துள்ளது.

அதே நேரத்தில் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்ரோல் தட்டுப்பாடு இன்றி வழங்கப்பட்டு வருவதாக நிலைய ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இநிலையில் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்திலிருந்து டீசல் பெற்றுக்கொள்ள சாரதிகள் நகரில் தமது வாகனங்களை வரிசைப்படுத்தி நிறுத்திவைத்துள்ளனர்.

இவ்வாறு வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள லொரி ஒன்றில் ஏற்கனவே நிரப்பப்பட்டுள்ள டீசலை லொரி உரிமையாளர் கேன்களில் நிரப்பி தங்களது கடைகளில் சேமித்து வைத்துகொள்வதாகவும், மீண்டும் இந்த லொரியை வரிசையில் நிறுத்தி மேலும் டீசலை பெற்றுக்கொள்வதாக தெரியவந்துள்ளது.

இதனால் வரிசையில் காத்திருக்கும் ஏனைய வாகன சாரதிகளுக்கு டீசலை பெற்றுக்கொள்வதில் அசௌகரீகம் ஏற்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆ.ரமேஸ்.

## எரிபொருள் தாங்கி, ரயில் மோதி விபத்து

### பெருமளவிலான டீசல் வீணடிப்பு

அக்குறணை குறூப் நிருபர்

ரம்புக்கணை ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் தாங்கியில் பயணிகள் ரயில் மோதியதில் பெருமளவிலான டீசல் வீணாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காலை 5.30 மணியளவில் ரம்புக்கணை புகையிரத நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி புறப்படவிருந்த பயணிகள் ரயில் மேடைக்கு கொண்டு வரப்பட்ட போது அதன் பிரேக் செயலிழந்ததால் எரிபொருள் தாங்கியில் மோதியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்தின் காரணமாக அதன் அருகில் இருந்த 'புத மெதுர' வும் சிறிதளவு சேதமடைந்ததுள்ளது.

இவ்விபத்தால், பெட்ரோல் தாங்கியில் இருந்த எரிபொருள் கசிய ஆரம்பித்தது. பின்னர் மற்றுமொரு எரிபொருள் பௌசர் கொண்டு வரப்பட்டு எஞ்சியிருந்த டீசல் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்.பி.கே.பிளான்டேசன் தோட்டங்களில்

## தேயிலை தொழிற்சாலைகளை பாதுகாக்குமாறு கோரிக்கை

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான பல தோட்டங்களில் மூடப்பட்டிருந்த பல தேயிலை தொழிற்சாலைகள் தோட்ட நிர்வாகத்தால் அகற்றப்பட்டு வருவதாக தொழிலாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

மஸ்கெலியா கிராப்பு தோட்ட கங்கேவத்த பிரிவில் இருந்த தேயிலை தொழிற்சாலை கடந்த காலத்தில் மூடப்பட்டு அதில் வாகனங்கள் பழுது பார்த்தல் நிலையமாக இருந்தது. அதில் கடந்த மாதம் மேல் தளங்கள் அகற்றப்பட்டுள்ளன.

இதனால் தோட்டத்தில் இயங்கி வந்த பழுது பார்க்கும் நிலையம் கேள்விக்குறியாக உள்ளது.

அதேபோல் ஹப்புகஸ்தன தோட்டத்தில் இயங்கி வந்த தேயிலை தொழிற்சாலை மூடப்பட்டு பல ஆண்டுகளாக கழிவு தேயிலை நிலையமாகவும் மீள் சுழற்சி முறையில் மீண்டும் தேயிலை பதனிடும் நிலையமாகவிருந்தது.

அதன் மேல் தளங்கள் யாவும் அகற்றப்பட்டு வருவதாக தோட்ட தொழிலாளர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் இத்தோட்டத்தில் பாரிய சிறு கைத்தொழில் நிலையமாக செயற்படவிருந்த தொழிற்சாலைகள் அகற்றப்பட்டுள்ளமை எதிர்கால சந்ததிக்கு பாரிய இழப்பாகும் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உடன் இவ்வாறான தொழிற்சாலைகளை அகற்றும் பணிகளை இடைநிறுத்தம் செய்ய வேண்டும் என கோரிக்கை விடுத்தனர்.

## வெள்ளத்தில் முச்சக்கரவண்டி அடித்து செல்லப்பட்டு சாரதி பலி

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி கிரியெல்ல இந்திகட்டு ஹந்திய பிரதேசத்தில் ஆற்று வெள்ளத்தில் முச்சக்கர வண்டி அடித்துச் செல்லப்பட்டதால் அதன் சாரதி பலியாகியுள்ளார். 46 வயதுடைய ஸ்ரீலால் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று (11) இடம்பெற்றுள்ளது. வாடகைக்காக இருவரை அழைத்து வரும் போதே இச்சம்பம் இடம்பெற்றுள்ளது. இந்துகட்டுஹந்திய பாலத்தின் மேலாக வெள்ளநீர் வேகமாகச் சென்று கொண்டிருந்த போது அயலவர்களின் எச்சரிக்கையையும் மீறி பாலத்தைத் தாண்டிச் செல்ல முச்சக்கரவண்டி சாரதி முற்பட்டுள்ளார். இதன்போதே முச்சக்கரவண்டி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் சாரதியை காப்பாற்ற முயற்சித் போதிலும் அவரது சடலத்தையே நேற்று மீட்டெடுத்துள்ளனர்.

## கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

எம்பிலிப்பிட்டிய செவனகல பிரதேசத்தில் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். தனிப்பட்ட குரோதம் காரணமாக இருவருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதம் கொலையில் முடிந்துள்ளதாக விசாரணைகளை நடத்திவரும் செவனகல பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர். உயிரிழந்தவர் சூரியவெவ பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபர் என தெரியவருகின்றது. வைத்தியசாலைக்கு எடுத்து செல்லும் வழியில் இவர் உயிரிழந்ததாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

# வீட்டில் மின்சாரத்தை சிக்கனமாக பாவிப்பதன் மூலம்
# வலுசக்தி பாதுகாப்புக்கு வழிவகுப்போம்

**சாதாரண இழை விளக்குகளை விட மின்சாரத்தை சேமிக்கும் LED மற்றும் CFL விளக்குகள் சற்று விலை அதிகம் என்பது உண்மையே. ஆனால் அதன் நன்மை தாமதிக்காது பொதுமக்களுக்கு கிடைக்கிறது. பொதுவாக முதல் 30 மின்சார அலகில் அலகு ஒன்றுக்கு 2.50 ரூபா அறவிடப்படுகிறது. நிலையான கட்டணமாக அதற்கு சேர்க்கப்படுவது 30 ரூபாவாகும். அலகின் எண்ணிக்கை 31 ஆகும்போது ஒரு அலகுக்கு 4.85 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. 60 அலகு வரை அவ்வாறு இருக்கும். ஆனால் அது 61 அலகாகும்போது பயன்படுத்தப்படும் முதல் 60 மின்சார அலகுகளுக்கும் 7.85 ரூபாவும் 61 தொடக்கம் 10 ரூபாவாகவும் அறவிடப்படும். இதன்போது ஒவ்வொரு அலகுக்கும் அறவிடப்படும் நிலையான கட்டணம் 90 ரூபாவாகும். அதன்படி ஒரு மின்சார அலகையேனும் குறைவாக பயன்படுத்துவதன் பெறுமதி பற்றி தெரிந்திருப்பது வீட்டுப் பொருளாதாரத்திற்கு அவசியமாகும்.**



சுலக்ஷன ஜயவர்தன, பணிப்பாளர் நாயகம் - இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகாரசபை

**ஒரு அற்புதமான பயணத்தின் தொடக்கமே இது. எப்போதும் யாராலும் இல்லாமல் இருக்க முடியாத ஒன்றான மின்சாரம் பற்றியதே எமது இன்றைய கலந்துரையாடல். உண்மையில் நீர், உடை போன்ற பொருட்களை காட்டிலும் மின்சார பயன்பாடானது முற்றிலும் வேறுபட்டது. ஆளியை போட்ட உடன் மின்சாரம் எமக்கு கிடைக்கிறது. அதனூடாக எமக்குத் தேவையான இயந்திரங்களை இயக்க கூடியதாக இருக்கிறது. அதன் மூலம் நாம் தேவையானவற்றை செய்கிறோம். அதன்பின் நாம் பயன்படுத்திய மின்சாரத்திற்கு நாம் மாதாந்தம் கட்டணம் செலுத்த வேண்டியதாக உள்ளது. அவ்வாறு கட்டணம் செலுத்துவது தான் ஒருவருக்கு நெருக்கடியை தருவதாக அமைகிறது. எனினும் தமக்கான பயன்பாட்டின் அளவையும் சிக்கனமாக பயன்படுத்துதலையும் சரியாக புரிந்து கொண்டு செயற்படுபவர்களுக்கு அவ்வாறான நெருக்கடி ஏற்படுவதில்லை. மின்சாரக் கட்டணத்தை குறைப்பதற்கான திட்டங்கள் பல காணப்படுகின்றன. அது பற்றி தெரியாத விடயங்களை இச் செவ்வியூடாக எளிமையாகச் சொல்லவிருக்கிறோம்.**

உண்மையிலேயே பயன்பாட்டிற்கான சக்தி என்பது மிகவும் பரந்த துறை. மின்சக்தி அதில் ஓர் அங்கம். அதிக பட்சமாக 99.8 வீதமான மக்களிற்கு மின்சக்தியை வழங்க நம் நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எமது நாட்டின் மின்சாரத் தேவை கடந்த (2021) வருடம் 16,085 கிகாவாட் மணித்தியாலங்களாகும். குறித்த எண்ணிக்கை 2020 இல் 15,715 கிகாவாட் மணித்திலங்களாகும். எமது நாட்டின் மின்சாரத்தை வழங்க பணியாற்றும் நிறுவனங்கள் யாவும் மின்சாரத்தை வழங்க அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன.

சிறிய, பெரிய மின் உற்பத்தி நிலையங்கள் ஊடாக அந்த தேவைகள் வழங்கப்படுகின்றன. பெரிய அளவிலான மின் நிலையங்களில் இருந்து 1,390 மெகாவாட் வரை பெறப்படுகிறது. சிறிய அளவிலான மின் நிலையங்களில் இருந்து மேலும் 430 மெகாவாட் பெறப்படுகிறது. ஆனால் இந்த இரண்டு வகைகளுக்கும் வரட்சியான காலநிலை ஒரே மாதிரியான பாதிப்பை செலுத்துகிறது. இது இந்நாட்டின் தொடர்ச்சியான மின் உற்பத்திக்குத் தடங்கலாக உள்ளது. இதன் காரணமாக பொருளாதார ரீதியாக அனுகூலமற்ற மாற்று திட்டங்களை நோக்கி செல்ல வேண்டி ஏற்படுகிறது.

தற்போது எரிபொருளை பயன்படுத்தியே அதிக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அது செலவு மிக்கது. இது தவிர எரிபொருளானது போக்குவரத்துக்கும் மின்சக்திக்கும் பயன்படுத்த வேண்டி உள்ள போதும் எரிபொருளானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

இதற்கு இன்னொரு மாற்றாக நிலக்கரி காணப்படுகின்றது. நிலக்கரி மூலம் நாட்டின் மின் தேவையின் 900 மெகாவாட் கொள்ளளவு கிடைக்கிறது. ஆனால் நாட்டுக்கு நிலக்கரியை வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் தான் எடுத்து வர கூடியதாக உள்ளது. தென்மேற்கு பருவமழை காலத்தில் கடல் கொந்தளிப்பாக இருப்பதால் நிலக்கரியை எடுத்துவர முடியாத நிலை காணப்படுகின்றது.

மின் உற்பத்தியை பொறுத்தவரை இந்த நாடு முகம்கொடுக்கும் சவால்கள் மேற்குறிப்பிட்டவாறாக காணப்படுகின்றது. பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியில் மக்களுக்கு வழங்குகின்ற மின்சாரத்தை சிக்கனமாக பயன்படுத்துவது பொதுமக்களின் பொறுப்பாகும். வினைத்திறனான முறையில் தினசரி வேலைகளை மின் பயன்பாடு அதிகம் இல்லாத நேரங்களில் செய்து கொள்வது மிக முக்கியம். தற்போதைய சூழலில் மாத்திரம் அல்லாது அவ்வாறு செய்வது எப்போதும் நாட்டுக்கு நன்மை பயக்கும். பொதுமக்கள் தனித்தனியாக உணர்ந்து செயற்படுதல் நாட்டிற்கு மிகவும் முக்கியமானதாகும். ஏனென்றால் நாளொன்றுக்கு இந்நாட்டின் மின்சார பயன்பாடு 47 கிகாவாட் மணித்தியாலங்கள். 7.2 மில்லியன் மின்சார வாடிக்கையாளர்கள் இருப்பதாக கணிக்கப்படுகிறது. அதில் 5 மில்லியன் வீட்டு வடிக்கையாளர்களாவார்கள்.

வீதி விளக்கு போன்றவற்றுக்கு அரசு அதிக செலவு செய்கிறது. உண்மையில் அவற்றை பராமரிப்பது வரி செலுத்தும் மக்களின் பணத்தில் தான். ஆனால் அது பற்றி சிலருக்கு நல்ல எண்ணம் இருப்பதாக தெரியவில்லை. அவர்கள் தேவையற்ற நேரத்தில் வீணாக ஒளிரும் விளக்கை அணைக்க முன்வருவதில்லை.

சாதாரண இழை விளக்குகளை விட மின்சாரத்தை சேமிக்கும் LED மற்றும் CFL விளக்குகள் சற்று விலை அதிகம் என்பது உண்மையே. ஆனால் அதன் நன்மை தாமதிக்காது பொதுமக்களுக்கு கிடைக்கிறது. பொதுவாக முதல் 30 மின்சார அலகில் அலகு ஒன்றுக்கு 2.50 ரூபா அறவிடப்படுகிறது. நிலையான கட்டணமாக அதற்கு சேர்க்கப்படுவது 30 ரூபாவாகும். அலகின் எண்ணிக்கை 31 ஆகும்போது ஒரு அலகுக்கு 4.85 ரூபா கட்டணம் அறவிடப்படுகிறது. 60 அலகு வரை அவ்வாறு இருக்கும். ஆனால் அது 61 அலகாகும்போது பயன்படுத்தப்படும் முதல் 60 மின்சார அலகுகளுக்கும் 7.85 ரூபாவும் 61 தொடக்கம் 10 ரூபாவாகவும் அறவிடப்படும். இதன்போது ஒவ்வொரு அலகுக்கும் அறவிடப்படும் நிலையான கட்டணம் 90 ரூபாவாகும். அதன்படி ஒரு மின்சார அலகையேனும் குறைவாக பயன்படுத்துவதன் பெறுமதி பற்றி தெரிந்திருப்பது வீட்டுப் பொருளாதாரத்திற்கு அவசியமாகும்.

மாதாந்த மின்சார கட்டணத்தை பிரித்துப் பார்த்தால் அதில் அதிக அளவு வளிச்சீராக்கி அமைப்புக்கு செல்கிறது. அதில் 200 அலகுகள் வரை வளிச்சீராக்கி இயந்திரத்திற்கு செலவாகிறது. தேவையற்ற சந்தர்ப்பங்களில் அதனை பயன்படுத்தாமல் இருப்பதன் மூலம் தேசிய மின்சார கட்டமைப்புக்கு அதிக பங்களிப்புச் செய்ய முடியும்.

நாளொன்றுக்கு 14-16 மணி நேரம் வரை குளிர்சாதனப் பெட்டி மின்சாரத்தை பெறுகிறது. அதற்காக அதிக அலகுகள் செலவாகிறது. குளிர்சாதனப் பெட்டியின் அளவு பெரிதாகும்போது அதில் இருந்து பயன்படுத்தப்படும் மின்சார அளவும் மேலும் அதிகரிக்கிறது.

இரண்டு மூன்று பேர் இருக்கின்ற குடும்பத்திற்கு இரண்டு கதவுகள் கொண்ட குளிர்சாதனப்பெட்டி போதுமானது. நாளொன்றுக்கு குளிர்சாதனப் பெட்டியின் கதவை திறந்து மூடுகின்ற தடவைகளும் மாதாந்த மின்சார பயன்பாட்டில் அதிக தாக்கம் செலுத்தும் ஒன்றாக உள்ளது. எனவே திட்டமிட்டு செயற்படுவது மிக முக்கியம்.

கூரை மின் விசிறிகளை விட மேசை மின் விசிறிகள் மற்றும் இடத்துக்கு இடம் கொண்டு செல்லக்கூடிய மின் விசிறிகள் போன்றவை மின்சாரத்தை சிக்கனப்படுத்தும். அதன்படி அதிகமானவர்கள் அதனை நோக்கி ஈடுபாடு காட்டுகின்றனர். புதிதாக வீடு கட்டும்போதும் இதனை கருத்தில் கொள்வது முக்கியம்.

மின் அழுத்தி பயன்பாட்டையும் சிக்கனமாக செய்வது மிக முக்கியம். அது மின் கட்டணத்திற்கு நிவாரணமாக இருக்கும். தேசிய மின் கட்டமைப்புக்கு வேலைப்பலு அற்ற நேரத்தில் வாரத்தின் வேலை நாட்களுக்கு தேவையான ஆடைகளை மின் அழுத்தியை பயன்படுத்தி அழுத்திக் கொள்வது உங்களுக்கும் நாட்டுக்கும் முக்கியமாகும்.

பெரும்பாலும் உறக்கத்தில் மற்றும் கதிரையில் இருக்கும்போது தொலைக்காட்சிப் பெட்டியை அணைக்கின்ற பலரும் அதற்கு போகின்ற மின் விநியோகத்தை அப்படியே விட்டு விடுகிறார்கள். பெரும்பாலும் முழு இரவும் அது அப்படியே இருக்கும். அப்போது மேலதிகமாக மின் அலகுகள் தேவையற்று செலவாகின்றன.

2030 ஆம் ஆண்டில் இந்நாட்டின் முழு மின் சக்தித் தேவையின் 70 வீதமானதை புதுப்பிக்கத்தக்க சக்தி மூலம் ஈடு செய்வதற்கு அரசாங்கம் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. சூரிய சக்தி மற்றும் காற்று சக்தி இதில் அடங்கும்.

இதன் பிரதிபலனை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ளது. கவர்ச்சிகரமான நடைமுறை மூலம் பொதுமக்களை சூரிய சக்தி உற்பத்திக்கு ஒன்றிணைப்பதற்கு இதன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாலை 6.30 தொடக்கம் இரவு 10.30 வரை இந்நாட்டு தேசிய மின் விநியோகக் கட்டமைப்பு வேலைப்பலு அதிகம் உள்ள நேரமாக கருதப்படுகிறது. நீர் மோட்டரை செயற்படுத்துவது போன்றவற்றுக்கு இந்த நேரத்தை தவிர்ப்பது முக்கியம். இரவு உணவை முன்கூட்டியே தயாரிக்க முடியுமாயின் அதன் மூலமும் நாட்டின் மின்சார பாதுகாப்பிற்கு பங்களிப்புச் செய்ய முடியும்.

வளிச்சீராக்கி இயந்திரத்தின் சென்டிகிரேட் பாகை அளவை எப்போதும் குறைப்பவர்கள், 1 சென்டிகிரேட் பாகை அளவு குறைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மாதாந்த மின்சாரக் கட்டணத்தில் 4 வீதம் அதிகரிக்கும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோன்று, சிலர் வீட்டுக்குத் தேவையற்ற மிகப்பெரிய வளிச்சீராக்கி இயந்திரத்தை பயன்படுத்துகிறார்கள். அப்போது அதன் அதிக செயற்பாடு காரணமாக மேலும் அதிக மின் அலகுகள் செலவாகின்றன.

இதன்படி அரச துறை என்ற வகையில் மின் உற்பத்தி என்ற மிகவும் பாரதுரமான பொறுப்புடன் செயற்பட்டு வருகிறது. ஆனால் அரசாங்கத்திற்கு அல்லது அரச - தனியார் பிரிவுக்கு மாத்திரம் இந்தப் பணியை தனித்தனியாக செயற்படுத்த முடியாது. அதற்கு பொதுமக்களுக்கு பெரும் பங்களிப்பை வழங்க முடியும். அதன் அளவு மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனை நாம் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்.

நேர்காணல்
**நுவன் மஹேஷ் ஜயவிக்ரம**
படப்பிடிப்பு: **சுதத் நிஷாந்த**






இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# இந்திய மருத்துவ உதவிகளுக்கு நன்றி தெரிவிப்பு

**கண் மருத்துவமனை பணிப்பாளர்**




கடுமையான ஒரு பொருளாதார நெருக்கடிக்கு இலங்கை உள்ளாகியுள்ள சமயத்தில் கைகொடுக்கும் வகையில் இந்தியா தேவையான மருந்துகளை வழங்கி உதவியமை ஒரு மிகப் பெரிய காரியமாகவே கருதுகிறோம் என்று இலங்கை மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.

பெரும்பாலான மருந்து வகைகள் இந்தியாவில் இருந்தே வருகின்றன. இந்திய கடன் சலுகையூடாக மருந்து வகைகள் தற்போது பெறப்படுகின்றன. மேலதிகமாகவும் எமக்கு இந்தியா வழங்குகிறது. சரியான சமயத்தில் கைகொடுத்தமைக்காக இந்திய அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்று ஏ. என். ஐ. செய்தி சேவைக்கு தேசிய கண் மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் தம்மிக தெரிவித்திருந்தார்.

கொழும்பு கண் மருத்துவமனைக்கான மருந்துகள் ஒரு மாதகாலத்துக்குப் போதியதாக இருப்பதாகவும் சுகாதார அமைச்சு மருந்துத் தேவைகளை அனுப்பி வைப்பதாகவும் தகவல் தெரிவித்துள்ள இவர், பல ஆஸ்பத்திரிகள் போதிய மருந்துகள் கையிருப்பின்றி தவித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது கொழும்பில் நடைபெற்றுவரும் வீதி ஆர்ப்பாட்டங்கள், மின்வெட்டு மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்களின் நாளாந்த நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

**பெயர் மாற்றம்**

புதிய காத்தான்குடி 02, இல.55, மீன்பிடி இலாகா வீதியில் வசிக்கும் ஆதம் லெவ்வை முகம்மது கமீம் (தேசிய அடையாள அட்டை இல:781131652V) ஆகிய நான் எனது 2915ஆம் இலக்க பிறப்பு பதிவுப் புத்தகத்திலுள்ள முகம்மது கமீம் என்ற பெயரை முஹமட் ஹமீம் என பெயர்மாற்றம் செய்துகொண்டேன் என்பதையும், இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் முஹமட் ஹமீம் என்றே பயன்படுத்துவேன் என்பதையும் இத்தால் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்
ஆதம் லெவ்வை முஹமட் ஹமீம்

**O+ இன ஈரல் பகுதியொன்று வழங்குவதற்கான ஒருவர் தேவை (பரித்தியாகம் செய்யப்பட்ட ஈரல் பாகமானது குறுகிய காலத்துள் வளரும்.**

0772001262

# இந்தியா– அமெரிக்காவுக்கு இடையிலான கருத்து மோதல் டில்லியில் அமெரிக்க தூதுவர் இல்லாமையே காரணம்

## இராஜதந்திர வட்டாரங்கள் விசனம்



இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவு நெருக்கடைந்து வருவதாக அதன் விளைவுகளை இந்தியா சந்திக்க வேண்டியிருக்கும் என அமெரிக்க பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தலீப்சிங் தெரிவித்திருந்த கருத்துக்கு இந்தியா வன்மையான கண்டனத்தை வெளியிட்டிருந்தது.

இந்திய ரஷ்ய உறவை விமர்சிக்கும் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுவை பெற்றுவருவது தொடர்பாக மௌனம் சாதிப்பது ஏன் எனவும் தினமொன்றுக்கு இந்நாடுகள் ஒரு பில்லியன் டொலர்களை செலவிடுவதாகவும் இந்தியா கேள்வி எழுப்பியுள்ளது. இந்தியாவின் அமெரிக்காவுக்கான தூதுவர் வொஷிங்டனில் கடமையில் உள்ள அதேசமயம் அமெரிக்காவின் புதிய பைடன் அரசு பதவியேற்ற பின்னர் இதுவரை இந்தியாவுக்கு ஒரு தூதரை நியமிக்காமல் இருப்பதே அனாவசியமான பிரச்சினைகளுக்குக் காரணம் என இந்திய இராஜதந்திர வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. எரிக் கார்செட்டி என்பவரைத் தூதுவராக நியமிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது இடைநடுவில் கைவிடப்பட்டது. லொஸ்ஏன்ஜலிஸ் நகர பிதாவாக இருந்த போது பாலியல் தொந்தரவு தொடர்பில் அவர் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதை அடுத்தே அவர் இப்பதவியை ஏற்பதில் சிக்கல் ஏற்பட்டது. தற்போது மற்றொருவரை நியமிக்கும் முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

இதைச்சுட்டிக்காட்டும் இராஜதந்திர வட்டாரங்கள், இரு நாடுகளிலும் தூதுவர்கள் கடமையில் இருப்பார்களானால் கருத்து வேறுபாடுகளை அவை உச்சத்தை எட்டுவதற்குள் பேசித் தீர்க்கக் கூடியதாக இருந்திருக்கும்என்று கூறியுள்ளன.


# INVITATION FOR BIDS (IFB)

## TRINCOMALEE CAMPUS
## EASTERN UNIVERSITY, SRI LANKA
## KONESAPURI, NILAVELI, TRINCOMALEE

## PROVIDING MANPOWER CUM JANITORIAL AND MAINTENANCE SERVICES - YEAR 2022/2023

The Chairman, Department Procurement Committee on behalf of the Trincomalee Campus, Eastern University, Sri Lanka invites sealed bids from eligible and qualified bidders for the following services in Trincomalee Campus, Konesapuri, Nilaveli, Trincomalee.

| Lot No. | Name of the Service | Location | Duration | Description | Bid Security amount | Validity of Bid Security |
|---|---|---|---|---|---|---|
| 01 | Providing Manpower cum Janitorial and maintenance Services at Trincomalee Campus, Eastern University, Sri Lanka | Trincomalee Campus, Konesapuri, Nilaveli, Trincomalee | 12 Months | Approx floor area:- 39,500 Sq.m Approximate land area- 69.50 Acres Required services described in section VI of the bid document | Rs.350,000.00 | 118 days from the date of closing date of bids |

To be eligible for contract award, the successful bidder **shall not have been blacklisted** and should meet the basic requirements mentioned below.

1. Must be registered in Sri Lanka under the Companies Act or Business Name Registration Ordinance.
2. Should have minimum 5 years prior experience in similar works in government organizations.
3. Average annual turnover for last three years should be equal or more than Rs. 35 million

**Interested Bidder, at the Bidder's own responsibility and risk, is encouraged to visit and examine the Site of required Services and its surroundings and obtain all information that may be necessary for preparing the Bid and entering into a contract for the Services. The costs of visiting the Site shall be at the Bidder's own expense.**

A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the Senior Assistant Registrar/ General Administration, Trincomalee Campus **from 12.04.2022 to 03.05.2022 from 9.00 a.m. to 3.00 p.m.** upon payment of non-refundable fee of **Rs.9,000.00**. This payment shall be made by cash to the Shroff of this Campus or shall be deposited to the Peoples Bank **A/C No. 066100172390446.**

The bid validity shall be 90 days from the date of closing the bids and the bids shall be accompanied by a Bid Security of the amount **Rs.350,000.00** from any approved commercial bank registered under Central Bank of Sri Lanka (Insurance bond will not be accepted). Bid Security shall be valid up to 118 days from the date of closing the bids **(up to 29.08.2022).**

If registered for VAT, the documentary evidence should be provided with the bids. If the bidder is not registered for VAT, a letter obtained from the Commissioner of Inland Revenue Department certifying that the bidder is not registered for VAT, should be attached with the bid documents.

Bid marked as mentioned in the bidding document, on the top left hand corner of the envelope should be sent by registered post to the address given below or deposited in the Bid Box kept at the Office of the Deputy Registrar, Trincomalee Campus, EUSL, to be received before **02.00 p.m. on 04.05.2022.** Late bids will not be accepted. Bids will be opened soon after closing time and the date of the bids in the presence of the bidders' representatives who choose to attend.

**Bids to be delivered to:**

The Rector,
Trincomalee Campus, Eastern University, Sri Lanka,
Konesapuri, Nilaveli,
Trincomalee.

**Received bids will be opened at:**

Board Room, Office of the Rector,
Trincomalee Campus, Eastern University, Sri Lanka,
Konesapuri, Nilaveli,
Trincomalee.

A Pre-Bid meeting and site visit will be held in Trincomalee Campus **on 21.04.2022 at 10.00 a.m.**

Interested bidders may obtain further information from the office of the Senior Assistant Registrar / General Administration of Trincomalee Campus, Eastern University, Sri Lanka, Konesapuri, Nilaveli, Trincomalee and inspect the bidding documents free of charge at the above address during any working day during office hours from 9.00 a.m. to 3.00p.m. The Senior Assistant Registrar/ General Administration may be contacted on Telephone 026 - 2222300.

**The Chairman,**
**Department Procurement Committee,**
**Trincomalee Campus, Eastern University, Sri Lanka,**
**Konesapuri, Nilaveli.**

**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்**

**கேள்வி அறிவித்தல்**

**Procurement of a brand new Maintenance and Emergency Response TUG (MERT)**
**B/17/2022**

**பிற்சேர்க்கை**

மேலேயுள்ள தலையங்கத்தின் கீழ் இந்த புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக விலைமனுக்கோரல் ஆவணங்களை ஏற்கனவே கையேற்றுக் கொண்ட வளமுள்ள விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இத்தால் ஈர்க்கின்றது.

விலைமனுக்கோரல் ஆவணத்தின் (B/17/2022) 02 ஆம் பிற்சேர்க்கைக்கான இபெகூ இன் இணையதளத்தை தயவு செய்து பார்க்கவும்.

விலைமனுக்களுக்கான மூடும் திகதியானது 2022.03.29 ஆம் திகதிக்கு பதிலாக 2022.04.19 என மாற்றப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும்.

இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக இபெகூ ஆனது மன்னிப்புக் கோருகின்றது.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழு,**
**முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல.: 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொலைபேசி: 0094 11 5455335**
**தொலைநகல்: 0094 11 5455424**

**அற்றோணித்தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கடவத்த, ரண்முத்துகல, சீதா வத்த 427 ஆம் இலக்கத்தில் வசிப்பவரும் 931503804V என்ற தேசிய அடையாள அட்டையின் உரித்தாளருமாகிய ரொஷான் சானக்க டயஸ் ஆகிய நான் பிரசித்த நொத்தாரிஸ் திரு. நுவன் சிந்தக்க ஹெட்டியாராச்சி என்பவரினால் 2021 சனவரி 6 ஆம் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 206 என்ற இலக்கத்தையுமுடையதும் மாக்கோல, மாக்கோல வடக்கு, இல. 2/11 B என்ற முகவரியில் வசிப்பவரும் 923651942V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டையின் உரித்தாளருமாகிய போயகம ஹுணுகே தனுஷ் தில்ருக்ஷ என்பவருக்கு வழங்கப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவமானது 2022 ஏப்ரல் 11 ஆம் திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டுள்ளதென இலங்கை குடியரசிற்கும் அதனது பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

**இங்ஙனம், ரொஷான் சானக்க டயஸ்**

# இலங்கை முதலீட்டுச் சபை

## பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைக்கோரல் விளம்பரம் 2022 ஏப்ரல் 12ஆம் திகதிய ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**INVITATION FOR BIDS FOR PROCUREMENT OF SECURITY SERVICES FOR THE KATUNAYAKE EXPORT PROCESSING ZONE, MEERIGAMA EXPORT PROCESSING ZONE AND MAWATHAGAMA EXPORT PROCESSING ZONE FOR A PERIOD OF TWO YEARS (2022-2024)**
**CONTRACT NO. BOI/S&S/Q/58/2022**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''டெய்லி நியூஸ்'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011 2346159 / 077 3502937 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக நிறைவேற்றுப் பணிப்பாளர் (பாதுகாப்பு மற்றும் தீ) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கம்

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறு தோட்ட பயிர்ச் செய்கை அபிவிருத்தி, அவை சார்ந்த தொழில்கள் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

## 2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் (Polypropylene) பைகள் வழங்கலுக்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

பெலவத்த/ செவனகல பிரிவுகளுக்கு 2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் பைகள் வழங்கலுக்காக ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC) தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

01. கீழுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2022 ஏப்ரல் 25 ஆம் திகதி வரை வேலை நாட்களில் 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். ரொக்கப்பணம் மூலம் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும்.

| வ/ இல. | உருப்படி | தேவையான அளவு | மீளளிக்கப்படாத வைப்பு ரூபா | விலைமனு பிணை ரூபா | குறிப்பு இல. |
|---|---|---|---|---|---|
| | பொலிப்ரொப்லீன் பைகள் | | | | |
| 01 | பேலவத்த பிரிவு | 725,000 | 20,000.00 | 1,800,000.00 | PR 11910 |
| 02 | சேவனகல பிரிவு | 420,000 | 12,500.00 | 1,000,000.00 | PR 6729 |

02. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.

03. விலைமனுக்களை 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு-04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் கைகளால் கொண்டுவந்து சேர்ப்பது அல்லது விரைதூதர் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''குறிப்பு இலக்கத்துடன் 2022 ஆம் ஆண்டுக்காக பொலிப்ரொப்லீன் பைகள் வழங்கலுக்கான கேள்விமனு'' என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

04. அனைத்து விலைமனுக்களும் 119 நாட்கள் செல்லுபடியுடன் மேலுள்ள அட்டவணைக்கு அமைய ''விலைமனு பிணையை'' கொண்டிருத்தல் வேண்டும்.

05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 2505558, கைபேசி + 94 077 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: mpm_sev@lankasuger.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு-04.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

## நிதி அமைச்சு

## தேசிய லொத்தர் சபை

# திகதியை நீடிப்பதற்கான பெறுகை அறிவித்தல்

**01. ஒரு வருட காலத்திற்கு தேசிய லொத்தர் சபைக்கு கணனிமயமாக்கப்பட்ட சீட்டிழுப்பு லொத்தர் சீட்டுக்களை (கொவிசெத, ஹந்தஹன, வாசனா சம்பத, ஜாதிகசம்பத, மெகாபவர், தினநிதானய, செவன (சீட்டிழுக்கப்படும் லொத்தர்) மற்றும் சம்பத லக்ன வரம அச்சடித்தல், வழங்கல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை**

மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்கு இயைபாக 2022-03-24ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது.

அதன் பிரகாரம் 2022-03-24ஆம் திகதி முதல் வழங்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களில் பின்வருமாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| விபரங்கள் | இடம்பெறவிருந்த திகதி / நேரம் | திருத்தப்பட்ட திகதி / நேரம் |
|---|---|---|
| விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் | 2022-04-18 (பி.ப. 2.30) | 2022-04-21 (பி.ப. 2.30) |
| விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி | 2022-04-19 (பி.ப. 2.30) | 2022-04-22 (பி.ப. 2.30) |

**தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக்குழு,
தேசிய லொத்தர் சபை,
இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை,
கொழும்பு-01.**

**02. நான்கு மாத காலத்திற்கு (இடைக்காலம்) தேசிய லொத்தர் சபைக்கு கணனிமயமாக்கப்பட்ட சீட்டிழுப்பு லொத்தர் சீட்டுக்களை கொவிசெத, ஹந்தஹன, வாசனா சம்பத, மற்றும் செவன (சீட்டிழுக்கப்படும் லொத்தர்) அச்சடித்தல், வழங்கல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைத்தல் ஆகியவற்றிற்கான பெறுகை**

மேற்குறிப்பிடப்பட்ட பெறுகைக்கு இயைபாக 2022-03-30ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது.

அதன் பிரகாரம் 2022-03-30ஆம் திகதி முதல் வழங்கப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களில் பின்வருமாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| விபரங்கள் | இடம்பெறவிருந்த திகதி / நேரம் | திருத்தப்பட்ட திகதி / நேரம் |
|---|---|---|
| விலைமனுக்கள் வழங்கப்படும் இறுதி நாள் | 2022-04-18 (பி.ப. 2.30) | 2022-04-21 (பி.ப. 2.30) |
| விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி | 2022-04-19 (பி.ப. 2.30) | 2022-04-22 (பி.ப. 2.30) |

**தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
தேசிய லொத்தர் சபை,
இல. 32, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, கொழும்பு-01.
தொலைபேசி இல.: 0114607020**

---

MILCO

## மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்

# 2022 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல்

## (அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனம்)

01. மில்கோ (Pvt) Ltd பால் பதப்படுத்தலில் ஈடுபடும் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சின் கீழ் அரசாங்கத்திற்கு சொந்தமான அமைப்பு ஒன்றாகும். அண்ணளவாக 40,000 பண்ணையாளர்களிடம் இருந்து நாடு முழுவதும் பசும்பாலை பெறுவதோடு தேவையான சந்தைப்படுத்தலை வழங்குவதன் மூலம் உள்நாட்டு பால் பண்ணையாளர்களை மேலுயர்த்துவதற்கு நிறுவனம் கடப்பாடு பெற்றுள்ளது. பால் பண்ணையாளர்களிடம் இருந்து பசும்பால் சேகரிக்கப்பட்டு தொடர்ச்சியான உற்பத்தி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற எமது பால் தொழில்துறை அத்தியாவசிய உணவு விநியோகத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதனால், நாடு முழுவதும் ''ஹைலன்ட்'' பால் உற்பத்திகளை தடையின்றி விநியோகிப்பதை உறுதி செய்வதற்கு நாம் கடப்பாடு பெற்றுள்ளோம்.

02. 2022 ஆம் ஆண்டுக்காக கீழ் பட்டியலிடப்பட்டுள்ள உருப்படிகளின் வழங்கலுக்காக மில்கோ (பிறைவட்) லிமிடட் உடன் தம்மை பதிவு செய்வதற்கு விரும்புகின்ற, கூட்டுத்தாபன சபைகள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகப் பண்ணைகள் உட்பட புகழ்பெற்ற வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், முகவர்கள், கையிருப்பு வியாபாரிகளிடம் இருந்து மில்கோ (பிறைவட்) லிமிட்டெட், தலைவரினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

03. ஒவ்வொரு உருப்படிக்காகவும் ரூபா 2000/- மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம் ஒன்றை செலுத்தி 2022.04.18 ஆம் திகதி தொடக்கம் 2022.05.27 ஆம் திகதி வரை மில்கோ (பிறைவட்) லிமிட்டெட், 5ஆவது மாடியின் கொள்வனவுப் பிரிவு இல. 345, 5/1 காலி வீதி, கொழும்பு – 3 என்ற முகவரியில் இருந்து பெற்றுக்கொண்ட பரிந்துரைக்கப்படும் படிவத்தில் பதிவுக்கான விண்ணபத்தை சமர்ப்பித்தல் வேண்டும். நிறுவன முகவரி அச்சிடப்பட்ட கோரிக்கை கடிதம் இன்றி வழங்குநர்களுக்கு பதிவுப் படிவம் வழங்கப்படமாட்டாது.

04. **2022 ஆம் ஆண்டுக்காக ஏற்கனவே பதிவு செய்யப்பட்டவர்கள் மீண்டும் பதிவு செய்வதற்கு தேவை இல்லை என்பதை கருத்தில் கொள்ளவும்.**

05. பொருட்களின் பட்டியலை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00) கொள்வனவுப் பிரிவில் இருந்து பெற முடியும்.

06. உருப்படி பிரிவுகள்
   1. பொதியிடல் மற்றும் மூலப் பொருட்கள்
   2. அனைத்து இரசாயனங்கள் மற்றும் ஆய்வுகூட பொருட்கள்
   3. இயந்திரம்/ உபகரணங்கள்/ உதிரிப்பாகங்கள்

07. விண்ணப்பங்களைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2022 ஆம் ஆண்டுக்காக வழங்குநர்களை பதிவு செய்தல் என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

08. பதிவு செய்ய விரும்பும் அனைத்து வழங்குநர்களும் எந்த ஒரு மக்கள் வங்கி கிளையிலும் பணத்தை வைப்புச் செய்து நிறுவன பெயர் பிரிவு/ உருப்படிகளை குறிப்பிட்டு பதிவுப் படிவத்தை பெறுவதற்கு வங்கி பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

    **வங்கி விபரம் பின்வருமாறு.
    கணக்கு பெயர்: மில்கோ (Pvt) Ltd
    வங்கி மற்றும் கிளை: மக்கள் வங்கி கோபரேட் வங்கி பிரிவு
    கணக்கு இல.: 004100180210331**

09. எந்த ஒரு விபரத்தையும் அலுவலக நேரங்களில் 0114500530 - 534 என்ற தொலைபேசி இலக்கத்தில் கொள்வனவு – முகாமையாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,
மில்கோ (பிறைவட்) லிமிட்டெட்
5ஆவது மாடி, (கொள்வனவுப் பிரிவு)
இல. – 345, 5/1 காலி வீதி,
கொழும்பு – 03**

---

# கேள்வி அறிவித்தல் - 2022

## புத்தளம் நகர சபை

புத்தளம் நகர சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற பீ(B)ட்டா மற்றும் டெல்டா கடை தொகுதியின் கடை அறைகள் சில, புத்தளம் கொழும்பு முகத்திடலின் மத்திய உணவகங்கள் மற்றும் வட்டார இல. 03இன் இறைச்சிக்கடை போன்றவற்றின் உரிமைகளை குத்தகைக்கு வழங்கும் பொருட்டு புத்தளம் நகர சபையினால் கேள்விகள் வரவழைக்கப்படுகின்றன.

குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள் பற்றிய விபரங்கள் புத்தளம் நகர சபையின் அறிவித்தல் பலகையிலும் நகரத்தில் உள்ள அரச அலுவலக அறிவித்தல் பலகையிலும், அனைத்து வட்டாரங்களில் உள்ள நகர சபை உறுப்பினர்களின் காரியாலயங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்கள், நிபந்தனைகள் என்பவற்றை உரிய கொடுப்பனவுகளை செலுத்தி 2022.04.12ம் திகதி முதல் 2022.05.05ம் திகதி பி.ப. 3.00 வரை புத்தளம் நகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

கேள்வி கட்டுப்பாடுகளுக்கமைவாக பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை 2022.05.06ம் திகதி மு.ப. 10.00க்கு முன்னர் 'கேள்விப் படிவம் 2022' என குறிப்பிட்டு 'தலைவர், நகர சபை' என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். அல்லது கேள்விகளை நகர சபைக்கு நேரில் வந்து கையளிக்கவோ அல்லது வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடவோ முடியும்.

கேள்விகள் யாவும் 2022.05.06ம் திகதி மு.ப. 10.30க்கு திறக்கப்படும். கேள்விகள் தொடர்பாக கேள்விச் சபையால் மேற்கொள்ளும் தீர்மானம் இறுதியானதாகும்.

**எம்.எஸ்.எம். ரபீக்,
தலைவர்,
புத்தளம் நகர சபை.**

2022.04.12

---

**1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29D பொது ஏலத்தில் பெறுமதியான சொத்துக்கள் ஏலம் விடப்படுகின்றன. 29ஆம் பிரிவின் கீழ் விற்பனையானது 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டது**

## மக்கள் வங்கி
### ஹசலக்க கிளை

PEOPLE'S BANK

# பொது ஏலத்தில் பெறுமதியான சொத்துக்கள் ஏலம் விடப்படுகின்றன

2007.08.09 அன்று கே.எம்.எஸ். பண்டாரவின் சர்வேயின் மூலம் மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் மினிலே கந்தபஹல கோரளையில் மொரயாய கிராம அலுவலர் பிரிவில் மொகுயாய கிராமத்தில் காணி அளவீடு திட்டத்தில் மனை எண் 114பி அளக்கப்பட்டுள்ள நிலம் உட்பட அனைத்தும் அதற்குச் சொந்தமானது

**நிலத்தின் அளவு: A:00 R:01 P:10**
(இந்த காணி கண்டியில் உள்ள காணி பதிவு அலுவலகத்தில LDO/N/11/283/2011இல் பதிவு செய்யப்பட்டுள்ளது)

மத்திய மாகாணம் மாத்தளை மாவட்டம் லக்கல பல்லேசியபற்று கோரளை, வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவு மற்றும் இரத்தோட்ட யாய கிராம சேவையாளர் பிரிவு ஆகிய பிரதேச சபையின் எல்லைக்குள் 13.05.2007 அன்று ரத்தோட்ட கிராமத்தில் டபிள்யூ.ஏ.பியதாச அங்கீகரிக்கப்பட்ட சர்வேயரால் அளவீடு செய்யப்பட்ட திட்ட இலக்கம் 47/3/2007இன் படி காணி உட்பட அனைத்தும்.

**நிலத்தின் அளவு A:01 R:01 P:13.3**
(இந்த காணி கண்டியில் உள்ள காணி பதிவு அலுவலகத்தில் LDO/N/11/283/2011இல் பதிவு செய்யப்பட்டுள்ளது)

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்
மே 06, 2022 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஹசலக்கவில் உள்ள மக்கள் வங்கி வளாகத்தில் நான் பொது ஏலத்தில் விற்கிறேன்.

இந்த ஏலம் COVID 19 சட்டத்தின் படி சுகாதார அமைச்சகம் வழங்கிய கடுமையான வழிகாட்டுதல்களுக்கு இணங்க உள்ளது.

**முடிவு பற்றி அறிவிப்பு:**
22.10.2021 அரசாங்க வர்த்தமானி தினமின, தினமணி மற்றும் தினகரன் நாளிதழ் விளம்பரங்களைப் பார்க்கவும்.

**பணம் செலுத்தும் முறை:**
விலை முடிவு செய்யப்பட்டவுடன் வெற்றிகரமான வாங்குபவர் ஏலத்தின் முடிவில் பின்வரும் முழுத் தொகையையும் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்முதல் விலையில் 10% (பத்து சதவீதம்)
2. மாகாண அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய 1% (ஒரு சதவீதம்) விற்பனை வரி
3. ஏலதாரர் கமிஷன் 2 1/2% (இரண்டரை சதவீதம்) மற்றும் அந்த கமிஷன் தொடர்பான அனைத்து வரிகளும்
4. 1500 ரூபா எழுது வினைஞர் மற்றும் வெளியிடட் கட்டணம்
5. விற்பனை செலவு ஏதேனும் இருந்தால் மற்றும் பிற கொடுப்பனவுகள் அடங்கும்
6. விற்பனை சான்றிதழின் முத்திரை வரி

கொள்முதல் விலையில் மீதியான 90% தொகையை ஏலம் விடப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் முகாமையாளர் மக்கள் வங்கி ஹசலக்க கிளைக்கு செலுத்த வேண்டும்.

மேலே குறிப்பிட்டுள்ளபடி 30 நாட்களுக்குள் மேற்கண்ட தொகை செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட விற்னை விலையில் 10%ஐ பறிமுதல் செய்து மீண்டும் ஏலம் விட வங்கிக்கு உரிமை உள்ளது.

உரிமைப் பத்திரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை முகாமையாளர் மக்கள் வங்கி மேலே குறிப்பிட்டுள்படி 30 நாட்களுக்குள் மேற்கண்ட தொகை செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட விற்பனை விலையின் 10%ஐ பறிமுதல் செய்து மீண்டும் ஏலம் விட வங்கிக்கு உரிமை உள்ளது. உரிமை பத்திரங்கள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்களை முகாமையாளர், மக்கள் வங்கி ஹசலக்க கிளையில் பெறலாம். தொலைபேசி எண் 055 2258000

'முன் அறிவிப்பு இல்லாமல் மேலே உள்ள ஏலத்தை இடைநிறுத்த/ரத்து செய்ய வங்கிக்கு உரிமை உள்ளது.

**பிரேம சிறி வடுகே
சமாதான நீதவானம் (அனைத்து தீவுகளும்) ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற பதிவாளர்.
அதிகாரம் பெற்ற ஏல விற்பனையாளர் மற்றும் நீதிமன்ற ஆணையாளர்
'உத்பலா', சந்தஹிரிவத்த, கம்பஹா.
0777-003939, 071-6172804, 071-1659616**

---

## இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

# நீடிப்பு அறிவித்தல்

**CONSULTANCY SERVICES FOR DEVELOPMENT, IMPLEMENTATION AND CERTIFICATION OF QUALITY MANAGEMENT SYSTEM CERTIFICATION TO ISO:9001:2015 STANDARD FOR THE CPC
B/24/2022**

மேலேயுள்ள தலைப்பில் இந்த புதினப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பாக விலைமனுக்கோரல் ஆவணங்களை ஏற்கனவே கையேற்றுள்ள வளமான விலைமனுதாரர்களின் கவனத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமானது இத்தால் ஈர்க்கின்றது. இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன திணைக்கள உசாத்துணையாளர் பெறுகை குழுத்தலைவர் முன்னைய விளம்பரத்திற்கான பின்வரும் திருத்தத்தை அறிவிக்கின்றார்.

விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் தினமானது 2022.04.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு (இலங்கை நேரம்) என நிச்சயப்படுத்தப்பட்டது. இப்போது 2022.04.27 ஆம் திகதியன்று பி.ப.2 மணிக்கு என (இலங்கை நேரம்) நீடிக்கப்பட்டுள்ளது.

முன்னைய புதினப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து நிபந்தனைகளிலும் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,
திணைக்கள உசாத்துணையாளர் பெறுகைக்குழு,
முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்) மே/பா.,
பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் செயற்பாடு,
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,
1 ஆம் மாடி, இல. 609, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

**தொலைபேசி : 0094 11 5455335
தொலைநகல் : 0094 11 5455424**

---

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை
## கொழும்பு - 10

### மருந்து உறைகளை வழங்குதல்

இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு 05 மில்லியன் மருந்து உறைகளை வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மேற்படி வழங்கல்களுக்காக தகைமை வாய்ந்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்கான விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2022-05-03ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் இலங்கை தேசிய வைத்தியசாலையின் வழங்கல் பிரிவிலிருந்து இயைபுடைய விலைக்கோரல் நிபந்தனைகள் சகிதமான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இந்த மருந்து உறைகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் வேளையில் மாதிரியைச் (Sample) சமர்ப்பித்தல் வேண்டும். பின்னர் சமர்ப்பிக்கப்படும் மாதிரிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

2022-05-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை தேசிய வைத்தியசாலை பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**மருத்துவர் டபிள்யூ.கே. விக்கிரமசிங்க,
தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
இலங்கை தேசிய வைத்தியசாலை.**

---

# மக்கள் வங்கி
# கேள்வி அறிவித்தல்
## நிறுவன வங்கிப் பிரிவு

**கெக்குணகஹவத்த எனப்படுவதும் கெக்குணகஹ மகுலான என அழைக்கப்படும் கம்பஹா, பியகம, சியம்பலாபேயில் அமைந்துள்ள பெறுமதி வாய்ந்த காணி மற்றும் கட்டிடத்தை விற்பனை செய்வதற்கு இத்தால் கேள்விகள் அழைக்கப்படுகின்றன
ஏ 1. றூ 2. பே 20.1 எனும் அளவில் 2748 எனும் இலக்க திட்டப்படத்தில் சித்தரிக்கப்பட்டு மக்கள் வங்கியில் உள்ளது.**

1. கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், 10ஆம் மாடி, அறவீடுகள் திணைக்களம், உதவிப் பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் விண்ணப்பங்களிலேயே கேள்வி மனுக் கோரல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. மீளளிக்கப்படாத 3,000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் 2022 ஏப்ரல் 22ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் அறவீடுகள் திணைக்களம், உதவிப் பொது முகாமையாளரிடமிருந்து விதிகள் மற்றும் இந்தக் கேள்விக்கு பிரயோகிக்கக்கூடிய நிபந்தனைகள் சகிதமான கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. மேலும் ரூபா 100,000/- வைப்புத் தொகையொன்றை மக்கள் வங்கியின் சிறப்பு சொத்துக்கள் அலகின் சேகரிக்கும் கணக்கிற்கு (Special Assets unit- Collection Account) 204-1001-23451131 வரவாகும் வகையில் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையும் வைப்புச் செய்தல் வேண்டும். இந்தப் பணம் கேள்விப்பத்திரம் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் தகுதியற்ற கேள்விப்பத்திரதாரர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தெரிவுசெய்யப்பட்டால் கேள்விதாரர் தமது கேள்விப்பத்திர பெறுமதியில் 25% தொகையை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கடிதத்தின் திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் வைப்புச் செய்ய வேண்டும். அத்துடன், மிகுதி 75% முழுத் தொகையை கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்ட கடிதத்தின் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்ய வேண்டும். கேள்விப்பத்திரம் தொடர்பான அனைத்து கொடுப்பனவுகளையும் சிறப்பு சொத்துக்கள் அலகின் சேகரிக்கும் (Special Assets unit- Collection Account) 204-1001-23451131 கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.
4. முறையாகப் பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு அந்த உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கெக்குணகஹவத்த கொள்வனவிற்கான விலை விபரம்" எனக் குறிப்பிட்டு 2022 ஏப்ரல் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் உதவிப் பொது முகாமையாளர், இலக்கம் 75, சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் அல்லது 2022 ஏப்ரல் 25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிட வேண்டும். குறித்த வைப்புச் சீட்டின் மூலப் பிரதியை கேள்வி விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.
5. மக்கள் வங்கி, அறவீடுகள் திணைக்கள உதவிப் பொது முகாமையாளருடன் முன்னேற்பாடொன்றைச் செய்துகொண்டு ஆதனத்தை பார்வையிடல் மற்றும் காணி உரித்துகளை உறுதிசெய்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம்
6. இந்த ஆதனம் தற்போது இருக்கின்ற நிலையிலேயே விற்பனை செய்யப்படும். அதனால் ஆதனத்தை தற்போதைய நிலைமையிலே கொள்வனவு செய்வதற்கு கேள்விதாரர் இணங்குதல் வேண்டும்.
7. 2022 ஏப்ரல் 25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், 10ஆம் மாடி, அறவீடுகள் திணைக்களத்தில் பிரதிப் பொது முகாமையாளர் (அறவீடுகள்) அவர்களினால் நியமிக்கப்பட்ட மதிப்பீட்டுக் குழுவின் முன்னிலையில் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.

**உதவிப் பொது முகாமையாளர்,
அறவீடுகள் திணைக்களம்,
10ஆம் மாடி, மக்கள் வங்கி - தலைமை அலுவலகம்
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02.
தொலைபேசி இலக்கம் : 011-2481613
தொலைநகல் இலக்கம் : 011-2436947**

PEOPLE'S BANK

---

## எட்டியாந்தோட்டை பிரதேச சபை

# பெறுகை அறிவித்தல்

எட்டியாந்தோட்டை பிரதேச சபைக்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை பெறுவதற்கு 2022.05.02 ஆம் திகதி மு.ப. 11.30 வரை என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வரிசை இல. | பொருட்களின் வகை மற்றும் விபரக்குறிப்பு | விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது குறிப்பிட வேண்டியவை |
|---|---|---|
| 01 | துருப்பிடிக்காது உருக்கு டிரெக்டர் நீர் பௌசர் (3000L – 3500L) | தயாரிப்பு வருடம், உத்தரவாதக் காலம், பயன்படுத்தப்பட்ட மூலப்பொருட்கள் விபரக்குறிப்பு மற்றும் விலை |
| 02 | மின் பிறப்பாக்கி இயந்திரம் (5kw) | வகை, தயாரிப்பு வருடம், உத்தரவாதக் காலம், எரிபொருள் வகை மற்றும் விலை |
| 03 | Multi Media Projector | வகை, தயாரிப்பு வருடம், உத்தரவாதக் காலம் மற்றும் விலை |
| 04 | CCTV Camere (DVR 4 or above) | உத்தரவாதக் காலம், தொழில்நுட்ப கருவிகள் தொடர்பான விபரக்குறிப்பு மற்றும் விலை |
| 05 | வளிச்சீராக்கி இயந்திரம் நீளம் 40, அகலம் 36, உயரம் 10 அளவான 50 - 100 பேர் கூடுகின்ற கூட்ட மண்டபத்திற்காக வளிச்சீராக்கிக் கட்டமைப்பை பொருத்துதல் | வகை, தயாரிப்பு வகை, உத்தரவாதக் காலம், சேவை வழங்கல் தொடர்பில் விபரம் மற்றும் விலை |
| 06 | Mitsubishi வடிவ டபிள் கெப் வாகனத்திற்கான பிரதான உடல் பாகத்தை பொருத்தல் | |

நீங்கள் சமர்ப்பிக்கின்ற விலைமனுக்கள் அன்றைய தினத்தில் அல்லது அன்றைய தினத்திற்கு முன்னர் இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும் என்பதோடு அவ்வாறில்லையேல் "தலைவர், பிரதேச சபை, எட்டியாந்தோட்டை" என்ற முகவரிக்கு அனுப்ப முடியும். விலைமனுக்களை அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் "<< குறித்த >> பொருட்களுக்கான விலைமனு" என்று குறிப்பிடுதல் வேண்டும். அந்த பொருட்கள் தொடர்பில் விபரக்குறிப்பு மற்றும் விபரங்களுக்கு www.yatiyantota.ps.gov.lk என்ற எமது இணையதளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய தம்மால் தயாரிக்கப்பட்ட வடிவத்தின் மூலம் விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 036-2270237 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைக்கவும்.

**கே.டி. வசந்த
தலைவர்
எட்டியாந்தோட்டை பிரதேச சபை**

# என்.எஸ்.எல். தொடரின் சம்பியனாக மகுடம் சூடிய கண்டி அணி




இலங்கை கிரிக்கெட் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற அங்குரார்ப்பண நெஷனல் சுபர் லீக் நான்கு நாட்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாண அணியை வீழ்த்தி கமிந்து மெண்டிஸ் தலைமையிலான கண்டி அணி சம்பியனாக மகுடம் சூடியது.

காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இன்னிங்ஸ் வெற்றியை பதிவுசெய்ததன் மூலம் கண்டி அணி சம்பியனாகத் தெரிவாகியது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி அணி, ஒஷத பெர்னாண்டோவின் அபார சதம் மற்றும் கமிந்து மெண்டிஸ், கசுன் விதுர, கமில் மிஷார ஆகியோரது அரைச்சதங்களின் உதவியுடன் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 444 ஓட்டங்களைக் குவித்தது.

யாழ்ப்பாண அணியின் பந்துவீச்சில் திலும் சுதீர 4 விக்கெட்டுகளையும், தனன்ஞய டி சில்வா 3 விக்கெட்டுகளையும், ஜெப்ரி வெண்டர்சே 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

இதனையடுத்து தமது முதல் இன்னிங்ஸுக்காகத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண அணி, எதிரணியின் பந்துவீச்சுக்கு முகங்கொடுக்க முடியாமல் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. அந்த அணியின் துடுப்பாட்டத்தில் நிஷான் மதுஷ்க அதிகபட்சமாக 57 ஓட்டங்களை எடுத்தார்.

கண்டி அணியின் பந்துவீச்சில் சிறப்பாக செயற்பட்ட லசித் எம்புல்தெனிய 100 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்த, அஷைன் டேனியல் 3 விக்கெட்டுகளையும், அசித்த பெர்னாண்டோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர். இதனையடுத்து 217 ஓட்டங்கள் முன்னிலையுடன் தமது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த கண்டி அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 52 ஓட்டங்களை எடுத்து காணப்பட்டது.

இந்த நிலையில், போட்டியின் கடைசி நாளான நேற்று (10) முழுவதும் பெய்த பலத்த மழை காரணமாக போட்டியை ஆரம்பிப்பதில் தடை ஏற்பட்டது. இதனையடுத்து மதியம் 1.45 மணியளவில் மைதானத்தை ஆய்வு செய்த நடுவர்கள் போட்டியை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

இதன்படி, முதல் இன்னிங்ஸ் வெற்றியைப் பதிவுசெய்த கண்டி அணி, அங்குரார்ப்பண நெஷனல் சுபர் லீக் நான்கு நாட்கள் கிரிக்கெட் தொடரின் சம்பியனாகத் தெரிவாகியது. முன்னதாக நடைபெற்ற நெஷனல் சுபர் லீக் ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டியில் கண்டி அணியை தனன்ஞய டி சில்வா தலைமையிலான யாழ்ப்பாண அணி வீழ்த்தியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

நெஷனல் சுபர் லீக் நான்கு நாட்கள் கிரிக்கெட் தொடரில் சம்பியனாகிய கண்டி அணிக்கு 50 இலட்சம் ரூபா பணப்பரிசும், இரண்டாவது இடத்தைப் பிடித்த யாழ்ப்பாண அணி;க்கு 25 இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

ஆறு போட்டிகள், 11 இன்னிங்சுகளில் 886 ஓட்டங்களை எடுத்து அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராக இடம்பிடித்த கண்டி அணித்தலைவர் கமிந்து மெண்டிஸ் இந்தத் தொடரின் ஆட்டநாயகன் விருதை வென்றார். இந்தத் தொடரில் நான்கு சதங்கள் மற்றும் நான்கு அரைச்சதங்களை அவர் பெற்றுக்கொண்டார்.

கண்டி அணியின் ஒஷத பெர்னாண்டோ சிறந்த துடுப்பாட்ட வீரராக தெரிவு செய்யப்பட்டார். கண்டி அணியின் 3ஆம் இலக்க துடுப்பாட்ட வீரரான ஒஷத 11 இன்னிங்சுகளில் 80.11 என்ற சராசரியுடன் 721 ஓட்டங்களைப் பெற்றார். இதில் நான்கு சதங்கள் மற்றும் மூன்று அரைச்சதங்கள் அடங்கும்.

சிறந்த பந்து வீச்சாளருக்கான விருதை கொழும்பு அணியின் பிரபாத் ஜயசூரிய வென்றார். 4 போட்டிகளில் 26 விக்கெட்டுகளை வீழ்த்திய பிரபாத் ஜயசூரிய, அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய வீரராக முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

44th OBSERVER SLT- MOBITEL
மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர் / வீராங்கனை-2022

உங்களுக்கு விருப்பமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனைக்கு வாக்களித்து அவரை இந்த ஆண்டின் OBSERVER SLT- MOBITEL மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்/வீராங்கனையைத் தெரிவு செய்யுங்கள்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரர்-2022
இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 பிரிவு I, II, III களில் பூர்த்தி செய்த வீரர்கள் மட்டுமே வாக்களிக்கலாம்.

☐ மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீராங்கனை-2022
தேசிய ரீதியில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் 19 வயதிற்குட்பட்ட அனைத்து பாடசாலை மட்டப் போட்டிகளில் 2021/2022 தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்த வீராங்கனைகள் மட்டுமே வாக்களிக்கலாம்.

வாக்கினை அளிப்பது : ....................
வீரர்களுக்கான பிரிவு : பிரிவு I ☐ பிரிவு II ☐ பிரிவு III ☐
தேசிய மட்ட வீராங்கனை : ....................
(ஒரு கூப்பன் ஒரு வாக்குக்கு மட்டுமே செல்லுபடியாகும்)
பாடசாலை : ....................
வாக்களித்தவர் பெயர் : ....................
முகவரி : ....................
மொபைல் இல. : ....................

SUNDAY OBSERVER

Vote: schoolboycricketer.lk இணையத்தளத்திற்குள் பிரவேசித்து வாக்களிக்க முடியும்

வாராந்த சீட்டிழுப்பில் பரிசுகளை வெல்லுங்கள்:
1வது பரிசு : ரூ. 2,500
2வது பரிசு: ரூ. 1,500
3வது பரிசு : ரூ. 1,000

44வது ஒப்சவர்-மொபிடெல் மிகவும் பிரபல்யமான பாடசாலை கிரிக்கெட் வீரரை தெரிவு செய்யும் போட்டி தற்போது ஆரம்பமாகியுள்ளது. கூப்பனை நிரப்பி விளையாட்டு ஆசிரியர், சண்டே ஒப்சவர், லேக் ஹவுஸ், கொழும்பு-10 எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

நிபந்தனைகள்:
SLT- MOBITEL நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர், லேக்ஹவுஸ் நிறுவன ஊழியர்கள், அவர்களது குடும்பத்தினர் இந்தப் போட்டியில் பங்கு பெற முடியாது.
ஒரு கூப்பனில் ஒரு பிரிவில் ஒருவருக்கே வாக்களிக்கலாம். போட்டி தொடர்பில் சண்டே ஒப்சவர் விளையாட்டு நிர்வாகத்தினரின் முடிவே இறுதியானது.

திகதி 16-04-2022
இல. 03

STREAM LIKE A BOSS!
இலங்கையின்
முதன்மையான,
அதிவேகமான
மற்றும் விஸ்தரிக்கப்பட்ட
PREMIUM FIBRE வலையமைப்பு.
SLTMOBITEL
FIBRE

# ஒரு புராணக்கதையின் மரணம், மகாநாமாவின் நட்சத்திர அந்தஸ்து

OBSERVER SLT-MOBITEL SCHOOL CRICKETER OF THE YEAR 2022
44th
Recognizing talent, inspiring greatness.
SLTMOBITEL The Connection

ஒப்சர்வர் SLT பாடசாலை கிரிக்கெட்டர்ஸில் எனது வாராந்த பத்தியை எழுதிக் கொண்டிருந்தபோது, அதிர்ச்சிகரமான செய்தி வந்தது ஒரு வி ளையாட்டுச் செய்தி ஜாம்பவான் மரணம்.

சண்டே ஒப்சர்வர் பத்திரிகையின் முன்னாள் துணை ஆசிரியரும், நீண்டகால விளையாட்டு ஆசிரியருமான ஏ.சி. டி சில்வாவின் மரணம் குறித்து அறிந்தது வருத்தமளிக்கிறது. 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி சரியாக 35 வருடங்கள் நான் எனது பத்திரிக்கை வாழ்க்கையைத் தொடங்கிய நேரத்திலும் அவர் சண்டே ஒப்சர்வர் பத்திரிகையின் விளையாட்டு ஆசிரியராக இருந்தார்.

அவர் தனது 80வது வயதில் வியாழன் அன்று காலமானார். 1979ல் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டரின் தொடக்கத்தில் இருந்து அவர் முன்னணி பாத்திரம் வகித்தார்.

அவரது பூதவுடல் நேற்று மாலை AF Raymond Funeral parlour இல் வைக்கப்பட்டு, நேற்று (11) மாலை 4 மணிக்கு பொரளை ஆங்கிலிக்கன் பிரிவில் தகனம் செய்யப்பட்டது.

அவர் அன்புடன் அழைக்கப்படும் AC, ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட் தொடரின் முதல்



ஆண்டான 1979 முதல் 40+ அர்ப்பணிப்பு சேவைக்குப் பிறகு 2015 இல் ஓய்வு பெறும் வரை நேரடி துணையாக இருந்து வருகிறார். அவரது சிறப்பான சேவையை நினைவுகூரும் வகையில், குறிப்பாக ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் தொடருக்கு, கடந்த ஆண்டு மெகா ஷோவில் அவர் கௌரவிக்கப்பட்டார்.

முன்னாள் சண்டே ஒப்சர்வர் பத்திரிகையாளரான மறைந்த லெஸ்லி பெர்னாண்டோவும் 2006 ஆம் ஆண்டு முதல் தலைமை ஆசிரியராக இருந்த போது ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் போட்டியை ஊக்குவிப்பதில் பாராட்டத்தக்க பணியை செய்தார். உண்மையில் ஒப்சர்வர் ஸ்கூல் பாய் கிரிக்கெட்டரை எடுப்பதில் ஏசி மற்றும் லெஸ்லி சிறந்த கலவையை வழங்கினர். மெகா ஷோ முன்னோக்கி. அவர்கள் இருவரும் இன்று நம்மிடையே இல்லை என்றாலும், அவர்களின் மதிப்புமிக்க பங்களிப்புகள் விளையாட்டின் சிறந்த ஊக்குவிப்பாளர்களாக வரலாற்றில் இடம்பிடிக்கும்.

இலங்கையின் தேசிய மொபைல் சேவை வழங்குநரான SLT Mobitel அனுசரணையுடன் நாட்டின் முதன்மையான ஆங்கில நாளிதழான சண்டே ஒப்சர்வரால் ஏற்பாடு செய்யப்பட்ட 44வது ObserverMobitel ஆண்டின் சிறந்த பாடசாலை கிரிக்கெட் வீரர்கள், மிகப்பெரிய பள்ளிகள் கிரிக்கெட் விருதுகள் நிகழ்ச்சியை அரங்கேற்ற மீண்டும் கைகோர்த்துள்ளனர்.

பாடசாலைகளின் கிரிக்கெட் வரலாற்றை நாம் பார்க்கும்போது ஒவ்வொரு பள்ளிக்கும் அதன் சொந்த பிக் மேட்ச் ஹீரோக்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் தங்கள் பாடசாலை வாழ்க்கைக்குப் பிறகு தங்கள் பெருமையை அனுபவித்து, பெருமையுடன் அந்த பெருமையை உலக மட்டத்திற்கு எடுத்துச் செல்கிறார்கள்.

இலங்கையின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஐசிசி மேட்ச் ரெஃப்ரியுமான ரோஷன் மஹாநாம, விளையாட்டுக்கு பகட்டான பங்களிப்பை வழங்கியவர். நாலந்தா



அணிக்காக விளையாடிய போது தனது முத்திரையை பதித்தார்.

விளையாட்டில் முதலிடத்தை அடைய விரும்பும் அனைத்து இளம் கிரிக்கெட் வீரர்களுக்கும் அவர் ஒரு சிறந்த முன்மாதிரியாக மாறினார்.

விளையாட்டின் தரம் பேணப்பட வேண்டுமானால், ஒரு பருவத்தில் ஒரு பாடசாலை அணி விளையாட வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கையில் சமநிலை இருக்க வேண்டும் என்று மஹாநாம உறுதியாக நம்புகிறார். "நாங்கள் வெளியூர் அணிகளுக்கு வாய்ப்புகளை வழங்க வேண்டும், ஆனால் அது விளையாட்டின் தரத்தின் இழப்பில் செய்யப்படக்கூடாது" என்று மஹாநாம சமீபத்திய பேட்டியில் கூறினார்.

மேலும் பேசிய நாலந்தா அணியின் முன்னாள் தலைவர், நாட்டின் முதல் மற்றும் முதன்மையான பள்ளி கிரிக்கெட் விருதுகள் ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஓஃப் தி இயர், ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும் தங்கள் கடின உழைப்பிற்காக வெகுமதியைப் பெறுவதை எதிர்நோக்குவதால், பள்ளி வீரர்களை எப்போதும் ஊக்கப்படுத்துவதாக கூறினார்.

“இந்த அளவிலான விருது வழங்கும் விழாக்கள் வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர்களாக எங்களை ஊக்குவிக்கின்றன. சீசனின் முடிவில் உங்கள் சாதனைகள் அங்கீகரிக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிந்தால் அது எப்போதும் ஒரு சிறந்த உத்வேகமாக இருக்கும், ”என்று அவர் கூறினார்.

தனது பள்ளி வாழ்க்கையின் பொன்னான தருணங்களை நினைவு கூர்ந்த மஹாநாமா, 1983 மற்றும் 1984 ஆகிய ஆண்டுகளில், ‘ஒப்சர்வர் பாடசாலை கிரிக்கெட்டர் ஆஃப் தி இயர்’ என்ற மகுடம் சூடியது, தனது வாழ்க்கையில் ஒரு முக்கிய மைல்கல் என்று கூறினார்.

## தேசிய கபடி போட்டிகளில்:

# நிந்தவூர் அல்-அஷ்ரக் தொடர்ச்சியான சாதனை



இலங்கை பாடசாலை கபடி சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடாத்திய தேசிய கபடி போட்டியில் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையின் 16 வயதுப்பிரிவு கபடி அணியினர் வெண்கலப் பதக்கத்தினைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.அப்துல் கபூர் தெரிவித்தார்.

இப்போட்டிகள் மார்ச் 26, 27, 28 ஆம் திகதிகளில் மகியங்கனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

கடந்த 2018, 2019, 2020, 2022 ஆகிய ஆண்டுகளில் இருந்து தொடர்ச்சியாக கபடி அணியினர் இச்சாதனையை நிலை நாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப் போட்டிக்காக மாணவர்களை பயிற்றுவித்த ஏ. ஹலீம் அஹ்மத் ஆசிரியருக்கும் மற்றும் முழு ஒத்துழைப்பு நல்கிய விளையாட்டுக்குழு உறுப்பினர்களுக்கும், போட்டியில் பங்குபற்றிய கபடி அணி மாணவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் பாடசாலை முகாமைத்துவக்குழு, பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசாலை சமூகம் சார்பில் அதிபர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.